# பொருளடக்கம்

இலங்கையின் முகாம்கள் தாழ்திறவச் செய்யுங்கள் 6

இடம்பெயர்ந்த மக்களுக்கு பாதுகாப்பும் மரியாதையும் இப்போதே வேண்டும் 6

தனிமனித சுதந்திரம் மற்றும் நடமாட்ட சுதந்திரத்தை அனுபவிப்பதற்கான உரிமை 10

இடம்பெயர்ந்தவர்கள் அனைவரும் முறைப்படியும் வெளிப்படையாகவும் பதிவுசெய்யப்பட வேண்டும் 11

குடும்பத்தோடு ஒன்றுசேர இடமிருக்க வேண்டும் 12

முகாம்களில் சிவிலியன் நிர்வாகமும் மனிதாபிமான உதவிப் பணிகளுக்கான அனுமதியும் வேண்டும் 12

இடைத்தங்கல் முகாம்களின் நிலை 14

அவலங்களை நேரில் கண்ட சாட்சியின் வாக்குமூலம் #1 14

மனிதாபிமான உதவிகள் கிடைப்பதிலும் நிவாரணப் பொருட்கள் வருவதிலும் தடங்கல்கள் 19

தகவல்கள் வெளிவருதில் தடை 24

யதேச்சதிகாரத்துடன் தடுத்துவைக்கப்படல் 25

பிரிந்த குடும்பம் மீண்டும் ஒன்றுசேர்வது தடுக்கப்படல் 36

ஊழல் குற்றச்சாட்டுகள் 37

துப்புரவும் சுகாதாரமும் இல்லை 37

நோய்ச் சிகிச்சை மருத்துவ சேவைகள் 43

நேரில் கண்டவர் வாக்குமூலம் #2 44

வெளியுலகத்துடன் தகவல் பரிமாற்றம் தடுக்கப்படல் 46

முகாம்கள் இராணுவமயமாக இருந்துவருதல் 47

நிறைவுரை 52

பரிந்துரைகள் 55

சர்வதேச பொதுமன்னிப்பு சபை
இலங்கை அரசாங்கத்திடம் முன்வைக்கும் கோரிக்கைகள்: 55

ஐக்கிய நாடுகள் சபை, இலங்கைக்கு கொடை வழங்கும் நாடுகள்
மற்றும் சர்வதேச சமூகத்தின் பிற உறுப்பினர்களிடம்
சர்வதேச பொதுமன்னிப்பு சபை முன்வைக்கும் கோரிக்கைகள்: 60

இறுதிக் குறிப்புகள் 62

# இலங்கையின் முகாம்கள் தாழ்திறவச் செய்யுங்கள்

## இடம்பெயர்ந்த மக்களுக்கு பாதுகாப்பும் மரியாதையும் இப்போதே வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் தாங்கள் வென்றுவிட்டதாக இலங்கை அரசாங்கம் 2009ஆம் ஆண்டு மே மாதம் அறிவித்ததை அடுத்துகிட்டத்தட்ட 26 வருடங்கள் நீடித்திருந்த இந்த யுத்தம் முடிவுக்கு வந்தது. மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் பெருமளவில் நடந்த, பொதுமக்கள் ஏராளமானோர் இடம்பெயர நேர்ந்த ஓர் யுத்தம் இது.

மோதல் பிரதேசங்களிலிருந்து தப்பி வெளிவந்திருந்த பொதுமக்கள் நான்கு மாவட்டங்களிலாக கிட்டத்தட்ட 40 முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். 2009ஆம் ஆண்டு மே மாத இறுதியில் இவ்வாறாக முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 3,00,000 .[1] (இதில் குறைந்தபட்சம் 50,000 பேர் குழந்தைகள் ஆவர்.) வவுனியா மாவட்டத்தில் உள்ள மெனிக் பார்ம் முகாம்தான் இந்த அகதி முகாம்களிலேயே மிகப் பெரியது. 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் இடம்பெயர்ந்த மக்களில் பெரும்பான்மையானவர்கள் இந்த முகாமுக்கு வந்துசேர்ந்திருந்தனர். மெனிக் பார்ம் முகாம் தற்சமயம் ஆறு வலயங்கள் அல்லது உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. (0 முதல் 5 வரையிலான எண்கள் கொண்டு வரிசைப்படுத்தி அழைக்கப்படுகின்ற இவ்வலயங்களுக்கு தமிழ் அரசியல்7 தலைவர்களது பெயர்களும் சூட்டப்பட்டுள்ளன.) இங்கே கூடுதலாக இரண்டு வலயங்களை (வலயம் 6a மற்றும் 6b )அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் வவுனியா பகுதியில் அவசரகால தங்குமிடங்களாக அமையக்கூடிய குறைந்தபட்சம் எட்டு இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மெனிக் பார்ம் முகாம் தொகுதிகளில் மட்டும் தற்சமயம் ஏறத்தாழ 2,30,000 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.[2] இந்த முகாம்களில் பெரும்பான்மையானவை தற்காலிகத் தங்குமிடங்களாகவே வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆனால் அரசாங்கத்தால் நடத்தப்படுகின்ற இரண்டு

புதிய முகாம்களை ஐ.நா. அகதிகள் நிறுவனமான யு.என்.ஹெச்.சி.ஆர். ' பகுதியளவில் நிரந்தரமான" குடியிருப்புகள் என்று வருணிக்கின்றன. கூடாரங்களை அமைக்காமல் குடியிருப்புகளை அரசாங்கம் நிர்மாணித்துள்ளது என்பது இதன் பொருள். உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்துள்ள இலங்கை மக்கள் தங்கியுள்ள இந்த முகாம்கள் அளவுக்கதிமான கூட்டம் கொண்டதாகவும், சுகாதாரம் குன்றிய இடங்களாகவுமே இருந்துவருகின்றன. முகாம் வசதிகளில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுவருவதாக செய்திகள் வந்தாலும் ஏப்ரல் மே மாத வாக்கில் மக்கள் ஆரம்பத்தில் இங்கு வரத் தொடங்கிய காலம் தொட்டே நிலைமை மோசம்தான். இந்த முகாம்களின் நிர்வாகத்தை மேற்பார்வையிடும் பணியை இராணுவம் மேற்கொள்கிறது. ஆயுதமேந்திய படையினர் முகாமில் காவல் பணி செய்கிறார்கள், ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளே பெரும்பாலும் இந்த முகாம்களை நிர்வகிக்கிறார்கள், இந்த முகாம்களுக்குள் யார் வரலாம் என்பதைத் தீர்மானிப்பதில் பாதுகாப்பு அமைச்சகம் சம்பந்தப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் இந்த முகாம்களில் இருந்து வெளியேற அனுமதிக்கப்படுவதில்லை. குற்றச்சாட்டு இல்லாமல் வழக்கு விசாரணை இல்லாமல் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஓர் நிலைமையிலேயே இவர்கள் இருந்துவருகின்றனர். சர்வதேச சட்டங்களின் கீழ் இலங்கைக்கு உள்ள கடப்பாடுகளை அது மீறும் ஓர் செயல் இது. யதேச்சதிகாரமாக ஒருவர் தடுத்துவைக்கப்படுவதை சர்வதேச சட்டங்கள் தடுக்கின்றன.

இந்த நெருக்கடியின் அளவை இலங்கை அரசாங்கம் குறைத்துச் சொல்கிறது..[3] ஏராளமான எண்ணிக்கையில் புதிதாக இடம்பெயர்ந்துள்ள இந்த மக்களுக்கு இருக்கும் உணவு, குடிநீர் மற்றும் இடவசதித் தேவைகளை சமாளிக்க அரசாங்கம் போதிய அளவுக்கு தயாராக இருந்திருக்கவில்லை. மேலும் நெருக்கடியை சமாளிப்பதில் உதவும் முகமாக அரசு சாரா தொண்டு நிறுவனங்களும் சர்வதேச அமைப்புகளும் முகாமுக்குள் தடையின்றி சென்று பணியாற்றுவதற்கு அரசாங்கம் போதிய அனுமதி வழங்கியிருக்கவில்லை. முகாம்வாசிகளுக்கு உதவிப் பொருட்களை கொண்டு சென்று வழங்குவதில் இருந்த தடைகள் சிறிது சிறிதாக தளர்த்தப்பட்டுள்ளன என்றாலும், இடம்பெயர்ந்த மக்களிடம் சர்வதேச அமைப்புகள் பேசுவது தொடர்ந்தும் தடுக்கப்பட்டே வருகிறது. ஆதலால் அந்த மக்கள் சந்திருக்கக்கூடிய மனித உரிமை மீறல்கள் பற்றி விசாரிப்பது, அவர்கள் தமது குடும்பத்தோடு மீண்டும் இணைய உதவுவது போன்ற முக்கியமான மனித உரிமைகள் பாதுபாப்பு செயல்களில் இந்த அமைப்பால் ஈடுபட முடியாமல் இருந்துவருகிறது. சுயாதீன கண்காணிப்பு இல்லாத நிலையில், மனித உரிமை தொடர்பான கவலைகள் இருந்துவரவே செய்கின்றனர். மக்கள் யதேச்சதிகாரமாக கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கபடுவதாகவும், பலவந்தமாக

கொண்டுசெல்லப்படுவதாகவும், கடத்தப்படுவதாகவும், சித்ரவதைக்கு ஆளாவதாகவும் பிறவகையில் மோசமாக நடத்தப்படுவதாகவும் செய்திகள் வந்துகொண்டுதான் இருக்கின்றன. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ஐ.சி.ஆர்.சி) உள்ளிட்ட தொண்டு நிறுவனங்கள் இலங்கையில் தமது செயற்பாடுகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்றும் கிழக்கு பகுதியிலிருந்து பணிக் குறைப்பு ஆரம்பமாக வேண்டும் என்றும் இலங்கை அரசாங்கம் ஜூலை 9ஆம் தேதியன்று அறிவித்திருந்தது. இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கு செஞ்சிலுவைச் சங்கம் அங்கே செயல்துடிப்புமிக்க பங்காற்ற வேண்டும் என்பது மிகவும் அவசியம். செஞ்சிலுவைச் சங்கமேகூட இலங்கையில் செயலாற்றுவதில் சிரமங்களை எதிர்கொண்டு வந்துள்ளது..[4] இடம்பெயர்ந்த மக்களிடையே விசாரணைகளைச் செய்து அவர்களில் விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புகொண்டிருந்தவர்கள் யார் என்று அரசாங்கம் கண்டறியும் நடவடிக்கையை கண்காணிப்பதிலும், மோதலால் பிரிந்துபோன குடும்ப உறுப்பினரை மீண்டும் ஒன்று சேர்க்கும் பொருட்டு அவர்களை தேடிக் கண்டுபிடிப்பதிலும் செஞ்சிலுவைச் சங்கம் சிரமங்களை எதிர்கொண்டு வந்துள்ளது. யுத்தம் முடிவுக்கு வந்ததிலிருந்தே இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணப் பணிகளை ஒருங்கிணைப்பதில் செஞ்சிலுவைச் சங்கம் மிக அவசியமான ஒரு பங்கினை ஆற்றிவந்துள்ளது. அதிகாரிகளிடம் சரணடைந்த அல்லது பிடித்துக் கைதுசெய்யப்பட்ட முன்னாள் போராளிகள், விடுதலைப் புலிகளோடு தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள பொதுமக்கள் போன்ற தடுத்துவைக்கப்பட்டுள்ள நபர்களைப் பார்வையிட்டு, அவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள சூழல், அவர்கள் நடத்தப்படுகின்ற விதம் குறித்து கண்காணிக்கும் பணியை செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்டு வந்துள்ளது..[5] மோதலால் இடம்பெயர நேர்ந்த மக்களுக்கு அவசர உதவிகளை வழங்குவதற்குப் பயன்பட வேண்டிய இடைத்தங்கல் முகாம்கள், ஏராளமானோரை அடைத்துவைப்பதற்கான தடுப்பு முகாம்களாக மாறிவிட்டுள்ளன. இந்த நிலைமை உடனடியாக முடிவுக்கு வரவேண்டும். இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் வெளியே செல்லவும் திரும்பிவரவும் தடைகளற்ற அனுமதி வழங்கப்பட வேண்டும். அந்த மக்கள் தமது நடமாட்ட சுதந்திரத்தை அனுபவிக்க இடமிருக்க வேண்டும். தானாக முன்வந்து அவர்கள் தமது சொந்த வாழ்விடங்களுக்கு பாதுகாப்புடனும் மரியாதையுடனும் திரும்பவோ, அல்லது நாட்டின் எந்தப்பகுதிலும் தங்களுக்கு விருப்பமான ஒரு இடத்தில் குடியேற அவர்கள் அனுமதிக்கபட வேண்டும். (வேறு நல்ல மாற்று இடம் கிடைக்கும் வரை)அவர்கள் முகாம்களில் தங்கியிருக்கும் காலகட்டத்தில், அவர்கள் வெளியே சென்று திரும்ப அனுமதி வழங்கப்பட வேண்டும்.

இந்த இடம்பெயர்ந்த மக்கள் அதிக காலம் இடைத்தங்கல் முகாம்களில் வைத்திருக்க

மாட்டோம் என இலங்கை அரசாங்கம் ஐ.நா.விடமும் பிற கொடையாளி நாடுகளிடமும் வாக்குறுதி வழங்கியிருந்தது. இந்த வாக்குறுதிகளிலிருந்து அது தவறக்கூடாது என்று நாங்கள் வலியுறுத்துகிறோம். இடம்பெயர்ந்த மக்கள் கூடிய விரைவில் தமது சொந்த வாழ்விடங்களுக்குத் திரும்பவோ அல்லது அவர்களுக்கு நிலையான வேறு(மாற்று இடங்களில் குடியமர்த்துவது போன்ற) இலங்கை தீர்வினை வழங்கவோ அரசு வழிசெய்ய வேண்டும். அந்தத் தீர்வு எது என்று திட்டமிடுவதிலும் முடிவு செய்வதிலும் இந்த மக்களுக்கும் பங்கிருக்க வேண்டும்.[6] இது குறித்த பணிகளில் சுயாதீன மனிதாபிமானத் தொண்டு நிறுவனங்களும் சம்பந்தப்பட்ட பிற அமைப்புகளும் ஒத்தாசைகள் புரிய இடமளிக்கப்பட வேண்டும்.[7]

இடம்பெயர்ந்த மக்களிடையே கலந்துள்ள விடுதலைப் புலி போராளிகளை அடையாளம் கண்டு பிரிக்க விசாரணைகள் நடந்துவருவதால், அந்த மக்கள் மீது தடைகளை விதிக்க வேண்டிய அவசியம் இருப்பதாக அரசாங்கம் கூறுவது, பொதுமக்களைத் தடுத்துவைப்பதற்கான நியாயமான காரணம் ஆகாது. சில வேளை மொத்த குடும்பமுமாக, முதியோர்களும், சிறார்களும் அடங்கிய இச்சிவிலியன்களை, குறிப்பிடப்படாத ஓர் காலகட்டத்துக்கு அவர்களது மனித உரிமைகள் பாதிக்கப்படுகின்ற ஒரு சூழலில் தடுத்துவைப்பது சரியல்ல. இடம்பெயர்ந்துள்ள அவர்களது நிலை, அவர்களது இன அடையாளம், அவர்கள் எந்த இடத்தைச் சேர்ந்தவர்கள் (கடைசி கட்டத்தில் விடுதலைப் புலிகள் வலுவாக இருந்த பகுதியைச் சேர்ந்தவர்களா அவர்கள்) போன்றவற்றின் அடிப்படையில் அம்மக்கள் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்படுகிறார்கள் என்று தெரிகிறது. இவ்வகையில் பாரபட்சம் காட்டுவது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்டுள்ளது. இருந்தாலும்கூட இலங்கை அரசாங்கம் முன்னாள் போராளிகளை அடையாளம் கண்டு பிரித்துவைத்திருக்கவே செய்கிறது. விடுதலைப் புலிகளுடன் தொடர்பு உடையவரகள் என்ற சந்தேகத்தின் பேரில் 10,000க்கும் அதிகமானோரை அது பிடித்துவைத்திருக்கவே செய்கிறது. இந்நிலையில், முகாம்களில் உள்ல லட்சக்கணக்கான சிவிலியன்களை முன்னாள் போராளிகள் என்ற சந்தேகத்துடன் நடத்துவதை இலங்கை அரசாங்கம் நிறுத்த வேண்டும். முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ள மக்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். அதேநேரம் குற்றம் புரிந்தவர்களாக சந்தேகிக்கப்படுபவர்களுக்கு எதிரான வழமையான சட்ட நடவடிக்கைகள் ஒரு புறம் மேற்கொள்ளப்பட வேண்டும். மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் போன்ற பலவீனமான மக்கள் விடுவிக்கப்படுவதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

யுத்தத்தின் விளைவாக உள்நாட்டிலேயே இடம்பெயர நேர்ந்தவர்களுக்கு உதவிகள் வழங்கவேண்டிய பொறுப்பு இலங்கை அரசாங்கத்துக்கு உள்ளது.[8] தற்போதைய

நிலையில் போக்கிடமின்றித் தவிக்கும் மக்களுக்கு அவசரகால தங்குமிட வசதிகளை ஏற்படுத்தித் தருவது அரசாங்கத்தின் பொறுப்புதான் என்றாலும், சூழ்நிலை நிர்பந்திக்கும் காலத்திற்கும் அதிகமாக இவர்கள் முகாம்களில் தங்கவைக்கப்படக்கூடாது.[9] சர்வதேச சட்டத்தின் கீழும் தேசிய சட்டங்களின் கீழும் ஒரு நாட்டில் ஏனையோருக்கு கிடைக்கக்கூடிய அனைத்து மனித உரிமைகளும் இடம்பெயர்ந்தோருக்கும் கிடைக்க வேண்டும். உள்நாட்டில் இடம்பெயர நேர்ந்தவர்கள் அல்லது தமிழர்கள் அல்லது விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் முன்பு வசித்தவர்கள் என்ற காரணங்களைக் காட்டி அவ்வுரிமைகள் அவர்களுக்கு கிடைப்பதில் பாரபட்சம் காட்டப்படக்கூடாது. பின்வரும் உரிமைகள் அம்மக்களுக்கு கிடைப்பதை இலங்கை அதிகாரிகள் உறுதிசெய்ய வேண்டும். (சர்வதேச சட்டங்களின் கீழும் உள்நாட்டில் இடம்பெயர நேர்ந்த மக்கள் தொடர்பான ஐ.நா. வழிகாட்டு கொள்கைகள் பிரகாரமும் இலங்கை அரசாங்கத்திற்குள்ள பொறுப்பு இது):

- ## தனிமனித சுதந்திரம் மற்றும் நடமாட்ட சுதந்திரத்தை அனுபவிப்பதற்கான உரிமை

இடம்பெயர்ந்த மக்கள் தாங்கள் விரும்பும் பட்சத்தில் முகாமை விட்டு வெளியே செல்வதற்கு அவர்களுக்கு இருக்கும் உரிமை, தங்களுடைய வாழ்விடங்களை தேர்ந்தெடுத்துக்கொள்வதில் அவர்களுக்கு உள்ள சுதந்திரம், முகாமில் தங்கியுள்ள காலம்தொட்டும் வெளியே சென்று திரும்புவதற்கு அவர்களுக்கு உள்ள உரிமை (சுதந்திரம்) ஆகியவை பேணப்பட வேண்டும். சுதந்திரத்துடன் செயல்படுவதற்கான உரிமை, யதேச்சதிகாரத்துடன் தடுத்துவைக்கப்படுவதற்கு எதிரான சுதந்திரம், நடமாட்ட சுதந்திரம் போன்றவை உரிமைகள் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச ஒப்பந்தத்தின் கீழ் (ICCPR, ஷரத்துகள் 9 மற்றும் 12) அனைவருக்கும் உத்திரவாதம் வழங்கப்பட்டுள்ளது. இந்த உரிமைகள் உள்நாட்டளவில் இடம்பெயர நேர்ந்த மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதை உள்நாட்டில் இடம்பெயர நேர்ந்த மக்கள் தொடர்பான ஐ.நா. வழிகாட்டு கொள்கைகள் பிரிவுகள் 12 மற்றும் 14 ஆகியவை வலியுறுத்துகின்றன.[10]

இடம்பெயர்ந்தவர்கள் சிலரைப் பொறுத்தவர்களை அவர்கள் தமது சொந்த வாழ்விடங்களுக்குத் திரும்புவதற்கான பாதுகாப்போ பொருளாதார நிலைமையோ இன்னும் உருவாகியில்லாமல் இருக்கலாம் (நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படாமல் இருப்பது, பிற பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் காரணமாகவோ அல்லது கட்டமைப்பு நிர்மூலமாகிவிட்டதால் தொழில் வாய்ப்பு இல்லாததன் காரணமாகவோ இந்த நிலைமை ஏற்பட்டிருக்கலாம்). ஆனாலும் அனுமதி

கிடைக்கும் பட்சத்தில் இவர்கள் வெளியே சென்று இலங்கையின் பிற பகுதிகளில் தங்கியுள்ள தமது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுடன் வாழவே விரும்புகின்றனர். குறிப்பிட்ட ஒரு நபருடைய அல்லது பொதுவாக மக்களுடைய பாதுகாப்புக்கு ஆபத்து இருக்கும் சமயத்தில் அந்நபருடைய நடமாட்ட சுதந்திரங்கள் மீது குறிப்பிட்ட சில கட்டுப்பாடுகளை அரசாங்கம் விதிப்பது அனுமதிக்கப்பட்டுள்ளது என்றாலும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அப்படி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது சட்டபூர்மாகவே செய்யப்பட்டுள்ளது என்பதையும், அப்படிப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு அவசியம் உள்ளன என்பதையும் தேவையான அளவிலேயே அவை விதிக்கப்படுகின்றன என்பதையும் பின்வரும் நியாயமான நோக்கங்களில் ஒன்றை முன்னிட்டு அவை விதிக்கப்படுகின்றன என்பதையும் செயல்படுத்திக் காட்ட வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தின் மீதே உள்ளது. தேசிய பாதுகாப்பு, சட்ட ஒழுங்கு, பொதுமக்கள் சுகாதாரம் அல்லது தார்மீகம் அல்லது மற்றவர்களுடைய உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாத்தல் ஆகிய நோக்கங்களுக்காக அரசாங்கம் கட்டுப்பாடுகளை விதிக்கலாம். தேசிய பாதுகாப்பு அல்லது பொதுமக்கள் பத்திரமாக இருத்தல் என்றோ கூறி தெளிவாக விளக்காமல் மேலோட்டமாக விபரித்து அதற்காக நடமாட்டத்தின் மீது பொதுப்படையாக கட்டுப்பாடுகளையோ தடைகளையோ கொண்டுவருவது ஏற்புடையதல்ல.

## • இடம்பெயர்ந்தவர்கள் அனைவரும் முறைப்படியும் வெளிப்படையாகவும் பதிவுசெய்யப்பட வேண்டும்

ICCPR ஒப்பந்தம் 16ஆம் ஷரத்தின் கீழும், இடம்பெயர நேர்ந்த மக்கள் தொடர்பான ஐ.நா. வழிகாட்டு கொள்கைகள் கொள்கை எண் 16ன் கீழும் சர்வதேச சட்டம் கூறுவது யாதெனின்: "(1) எந்த ஒரு இடத்திலும் சட்டத்தின் முன் ஒரு நபராக கருதப்படுகின்ற உரிமை ஒவ்வொரு மனிதருக்கும் உண்டு." இடம்பெயர்ந்த மக்களைப் பொறுத்தமட்டில் அவர்களுக்கு இந்த உரிமை கிடைப்பதை உறுதிசெய்யும் நோக்கில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டு என்று கூறுகிறது. "(2) இடம்பெயர்ந்த மக்களுக்கு இந்த உரிமை கிடைக்கும் பொருட்டு, அம்மக்கள் தம்முடைய சட்டபூர்வ உரிமைகளை அனுபவிப்பதற்குத் தேவையான அனைத்து ஆவணங்கள், அதாவது அவர்களது கடவுச் சீட்டுகள், அடையாள அட்டைகள், பிறப்புச் சான்றிதழ், திருமண சான்றிதழ் போன்றவற்றை அவர்களிடம் ஒப்படைத்துவிட வேண்டும். புதிய ஆவணங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும், இடம்பெயரும்போது அவர்கள் தொலைக்க நேர்ந்தவற்றுக்கான மாற்று ஆவணங்களை வழங்க வேண்டும். அதற்காக அவர்களிடம் நியாயமற்ற நிபந்தனைகளை விதிக்கக்கூடாது. உதாரணத்துக்கு, விட்டு வந்த ஆவணங்களை எடுத்துவரச்சொல்லி அவர்களை தங்களது சொந்த

இடங்களுக்கு திருப்பி அனுப்புவது போன்ற நிபந்தனைகள் விதிக்கக்கூடாது." அது மேலும் கூறுவது யாதெனின்: "(3) தேவைப்படுகின்ற அந்த ஆவணங்களைப் பெறுவதில் ஆண்களுக்கு பெண்களுக்கும் சம உரிமை வழங்க வேண்டும். ஆவணத்தை தம்முடைய பெயரிலேயே பெறுவதற்கான உரிமையும் அவர்களுக்கு இருக்க வேண்டும்."[11]

## • குடும்பத்தோடு ஒன்றுசேர இடமிருக்க வேண்டும்

உள்நாட்டில் இடம்பெயர நேர்ந்த மக்கள் தொடர்பான ஐ.நா. வழிகாட்டு கொள்கைகள் பிரிவு எண் 17(3) இடம்பெயரும்போது பிரிய நேர்ந்த குடும்பங்கள் "கூடிய விரைவில் மீண்டும் ஒன்றுசேருவதற்கு" அவர்களுக்கு இருக்கும் உரிமையை வலியுறுத்துகிறது. "பிரிந்த குடும்பங்கள் ஒன்று சேருவதற்குப் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் தாமதமின்றி முன்னெடுக்கப்பட வேண்டும், குறிப்பாக சிறார்கள் சம்பந்தப்பட்டிருக்கும்போது ஏற்பாடுகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். ஒருவர் தமது குடும்ப உறுப்பினர் தொடர்பில் மேற்கொள்ளும் விசாரணைகளை அதிகாரிகள் அனுசரிக்க வேண்டும். குடும்பங்கள் மீண்டும் ஒன்று சேர்வது தொடர்பில் பணியாற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு அதிகாரிகள் ஊக்கமும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும்." என்றும் அந்தக் கொள்கை கூறுகிறது. "இடம்பெயர்ந்துள்ள மக்கள் முகாம்களில் தங்க நேர்ந்திருப்பதால் அல்லது தடுத்துவைக்கப்பட்டிருப்பதால் அவர்களது நடமாட்ட சுதந்திரத்தில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன என்கின்றபோதிலும் அவர்கள் தமது குடும்பத்தோடு சேர்ந்திருக்கும் உரிமை அவர்களுக்கு உள்ளது."[12]

## • முகாம்களில் சிவிலியன் நிர்வாகமும் மனிதாபிமான உதவிப் பணிகளுக்கான அனுமதியும் வேண்டும்

எல்லா முகாம்களும் நிஜமாகவே சிவிலியன் தன்மை கொண்டிருக்க வேண்டும். இராணுவத்தினரால் அல்லாது சிவிலியன் அதிகாரிகளால் அவை நிர்வகிக்கப்பட வேண்டும். முகாம்களில் தங்கியுள்ளவர்களது பாதுகாப்பை உறுதிசெய்வதும் அவர்களுக்கு மனித உரிமைகள் கிடைப்பதையும் பாதுகாக்கப்படுவதையும் உறுதிசெய்வதும் அவர்களது முதல் பொறுப்பாக இருக்க வேண்டும்.

தேசிய மற்றும் சர்வதேச அளவிலான மனித உரிமை அமைப்புகளும், தொண்டு நிறுவனங்களும், ஊடகவியலாளர்களும் இடம்பெயர்ந்த மக்களை சென்று பார்க்கவும், பேசவும், அவர்களுக்காக பணி செய்யவும் அனுமதிக்கபட வேண்டும்.

அம்மக்களது உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கிலும், முகாம்களில் நிலவும் சூழல் குறித்து தடையின்றி தகவல்கள் வெளிவருவதை உறுதிசெய்யும் நோக்கிலும் இவர்கள் பணி செய்ய அனுமதிக்கப்பட வேண்டும்.

இடம்பெயர நேர்ந்த மக்கள் தொடர்பான ஐ.நா. வழிகாட்டு கொள்கைகள் பிரிவு எண் 25 மனிதாபிமான உதவி நிறுவனங்களுக்கு தடையற்ற அனுமதி வழங்கப்படுவது உறுதிசெய்யப்பட வேண்டும் என்பது பற்றி நேரடியாகப் பேசுகிறது. "இடம்பெயர நேர்ந்த மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்கும் பொறுப்பும் கடமையும் அடிப்படையில் அந்நாட்டின் அரசாங்க அதிகாரிகளையே சேரும்." என்று அக்கொள்கை வலியுறுத்தும் அதேவேளை, "இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உதவிகள் கிடைக்கும் நோக்கில் தமது சேவைகளை அவர்களுக்கு வழங்கும் உரிமை சர்வதேச மனிதாபிமான உரிமை நிறுவனங்களுக்கும் சம்பந்தப்பட்ட பிற நிறுவனங்களுக்கும் உண்டு. அப்படி உதவிகள் வழங்குவதை நாட்டின் உள்விவகாரத்தில் தலையிடுவதாகவோ, நட்பை முறிக்கும் செயலாகவோ பார்க்காமல் நல்லபிப்பிராயத்துடன் அதனை பரிசீலிக்க வேண்டும். உதவிகளுக்கு அனுமதி வழங்குவதை யதேச்சதிகாரமாக நிறுத்திவைக்கக்கூடாது. அதுவும் குறிப்பாக சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளால் தேவையான மனிதாபிமான உதவிகளை வழங்க முடியவில்லை என்றாலோ அதற்கு அவர்களுக்கு வழியில்லை என்றாலோ சர்வதேச உதவிகளை நிறுத்திவைக்கக்கூடாது." "சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளும் மனிதாபிமான உதவிப் பொருட்கள் கொண்டுவரப்படுவதற்கு அனுமதியும் அனுசரணையும் வழங்க வேண்டும். மேலும் உதவிப் பொருட்கள் வழங்கிவரும் நபர்கள் இடம்பெயர்ந்த மக்களை விரைவாகவும் தடையின்றியும் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும்" என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொள்கை எண் 27 கூறுவது யாதெனின், "சர்வதேச தொண்டு நிறுவனங்களும் பிற சம்பந்தப்பட்ட அமைப்புகளும் உதவிகள் வழங்கும்போது இடம்பெயர்ந்த மக்களுடைய பாதுகாப்புத் தேவைகளையும் அவர்களது மனித உரிமைகளையும் மதித்து நடக்கவும் அதை முன்னிட்டு உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் வேண்டும்." முகாம்களுக்குள் உதவியமைப்புகள் ஊடகவியலாளர்கள் போன்றோரின் நாடமாட்டத்தை அரசாங்கம் கட்டுப்படுத்துவது என்பதும், முகாம்களின் மனித உரிமைகள் நிலவரம் குறித்து தகவல்கள் வெளியாவதை அது தடுப்பது என்பதும் இடம்பெயர்ந்த மக்களுடைய பாதுகாப்பிலும் மனித உரிமைகளிலும் இடையூறுகளை விளைவிக்கிறது.

# இடைத்தங்கல் முகாம்களின் நிலை

யுத்தத்தின் கடைசி சில மாதங்களில் மோசமான மனிதாபிமான அவலம் நிலவியதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்திருந்தனர். உணவு, குடிநீர், மருத்துவ வசதிகள் போன்றவற்றுக்கு கடும் தட்டுப்பாடு நிலவியதாகவும், யுத்தப் பிரதேசங்களில் சிக்குண்டிருந்த மக்கள் காயம்பட்டது உயிரிழந்தது அச்சத்துடன் வாழ்ந்துவந்தது பற்றியும் அவர்கள் விளக்கியிருந்தனர். விடுதலைப் புலிகளும் சரி இலங்கை அரசாங்க படைகளும் சரி, மோதல் காலத்தில் - அதிலும் குறிப்பாக இறுதிக் கட்டங்களில் - சர்வதேச மனிதாபிமான விதிமுறைகளை மீறிவந்திருந்தனர் என்பதற்கு நம்பத்தகுந்த மற்றும் ஒன்றோடு ஒன்று ஒத்துப்போகக்கூடிய தகவல்களை சர்வதேச பொதுமன்னிப்பு சபை பெற்றுவந்துள்ளது. விடுதலைப் புலிகள் சிறுவர்களை வலுக்கட்டாயமாக படையில் சேர்த்து வந்துள்ளனர், இலங்கை இராணுவத்தின் தாக்குதலுக்கு எதிராக பொதுமக்களை அவர்கள் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்திவந்துள்ளனர், தப்பிச்செல்ல முயன்ற சிவிலியன்களை அவர்கள் தாக்கினார்கள் என்றும் தெரியவந்துள்ளது. சிவிலியன்கள் அடர்ந்து வாழ்ந்த பகுதிகலீலிஉம் இலங்கை ஆயுதப் படையினர் கண்மூடித்தனமாக எறிகணைத் தாக்குதல்களை நடத்தினார்கள், மருத்துவமனைகள் மீது ஷெல் அவர்கள் ஷெல் வீசியதன் விளைவாக நோயாளிகளும் மருத்துவமனை ஊழியர்களும் கொல்லப்படவும் காயம்படவும் செய்தனர் என்றும் தெரியவந்துள்ளது.

உயிர்பிழைத்தவர்கள் பலர் தாம் நேசித்த தமது உறவுகளை பறிகொடுக்க வேண்டிவந்தது. காயம்பட்டும், பசியோடும் பிணியோடும் பலர் முகாம்களை வந்தடைந்தனர். முகாம் வரும் வழியிலேயே பலர் உயிரிழக்க நேர்ந்திருந்தது.

## • அவலங்களை நேரில் கண்ட சாட்சியின் வாக்குமூலம் #1

தமிழரான குமார் என்பவர் ஐம்பது வயதைத் தாண்டியவர். 2008ஆம் ஜூன் மாதப் பகுதியில் விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகள் தீவிரமடைந்த நேரம் இவர் வன்னி என்று அறியப்படும் இலங்கையின் வட பகுதியில்தான் வசித்துவந்தவர். விடுதலைப் புலிகள் கட்டுப்படுத்திவந்த நகரப் பகுதிகளை இராணுவத்தினர் கைப்பற்றிய இராணுவ தாக்குதல் நடவடிக்கைகளை முழுமையாக நேரில் கண்டவர் இவர். யுத்தம் நடந்த காலப்பகுதியில், அதில் ஈடுபட்ட இரண்டு தரப்பாருமே சர்வதேச சட்டங்களை

மீறியதை இவர் நேரில் கண்டுள்ளார். அரசாங்கப் படைகள் மருத்துவமனைகள் மீது ஷெல் வீசியது, விடுதலைப் புலிகள் சிறார்கள் உட்பட பொதுமக்களை அதிக அளவில் தமது படையில் வலுக்கட்டாயமாக சேர்த்துவந்தது ஆகியவற்றை இவர் காண நேர்ந்துள்ளது. மோதலில் ஈடுபடும் இரண்டு தரப்புக்கும் இடையில் சிக்கிக்கொண்டு தவித்த ஏனைய மக்களைப்போலவே இவரும் நாளுக்கு நாள் குறைந்துவருவதையும், தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படவே குழிதோண்டி தண்ணீர் எடுக்க வேண்டிய நிர்பந்தங்களுக்கு ஆளானதையும் அனுபவிக்க நேர்ந்தவர். எப்போது வேண்டுமானாலும் வான் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற நிலையில் உயிருக்கு உத்திரவாதம் இன்றி பெரும் அச்சத்துடன் நெடுங்காலம் பதுங்கு குழிகளுக்குள் மறைந்து கிடக்கும் துன்பங்களை இம்மக்கள் பல்லாயிரக்கணக்கானோரில் குமாரும் ஒருவர். பிப்ரவரி 2009 காலப்பகுதியில் இவரது உடல்நிலை மோசமாகப் பாதிக்கப்பட்டது. அதிருஷ்டவசமாக விடுதலைப் புலிகளின் அனுமதி கிடைக்கவே பிப்ரவரி இறுதிப் பகுதியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் கப்பல் மூலமாக இவர் திருகோணமலையை வந்தடைந்தார். குமார் தற்போது வெளிநாடு ஒன்றில் வசித்துவருகிறார்.

தனது நினைவுகள் சிலவற்றை சர்வதேச பொதுமன்னிப்பு சபையுடன் பகிர்ந்துகொள்ள குமார் விரும்பினார், ஏனென்றால் மோதலில் சிக்குண்ட ஆயிரக்கணக்கான சிவிலியன்கள் அதிலும் குறிப்பாக கொல்லப்பட்ட மக்களை உலகம் நினைவுகூற வேண்டும் என்று அவர் நினைத்தார். கொல்லப்பட்ட சிவிலியன்கள் பலர் இறுதிச் சடங்கு எதுவும் இல்லாமல், இன்னாரின் புதைகுழி என்று எவ்வித அடையாளமும் இல்லாத புதைகுழிகளில் போட்டு மூடப்பட்ட அவலம் பற்றி அவர் சர்வதேச பொதுமன்னிப்பு சபையிடம் விளக்கினார்:

*உள்நாட்டு யுத்தத்தின் பாதிப்புகளால் தமிழ் மக்கள் ஆண்டாண்டு காலமாக கஷ்டப்பட்டுவந்துள்ளனர் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. வன்னிப் பகுதியில் குடியேறிய மக்களில் பலர் யாழ்குடாப் பகுதியைச் சேர்ந்தவர்கள். பொருளாதாரத் தடை காரணமாக எழுந்த தட்டுப்பாடுகளையும் பிரச்சினைகளையும் இவர்கள் சமாளித்துவந்தனர். ஆனால் யுத்தம் உக்கிரமடைந்தபோது அது எங்களை சோதனையின் உச்சத்திற்கே கொண்டுசென்றுவிட்டது. கடந்த ஜனவரியிலிருந்து இரவும் பகலும் தொடர்ந்து கடுமையான ஷெல் வீச்சு நடந்துகொண்டே இருந்தது. இது மிகவும் குரூரமான ஒரு யுத்தம்....*

*...விடுதலைப் புலிகள் மக்களிடம் மிகவும் கடுமையாக நடந்துகொண்டார்கள். கூடவே அரசாங்கமும்கூட மக்களைப் பாதுகாப்பது பராமரிப்பது தொடர்பில் கொஞ்சமும் அலட்டிக்கொள்ளவே இல்லை. மருத்துவமனைகளைக்கூட*

*அரசாங்கப் படையினர் இலக்குவைத்து தாக்கியதிலிருந்து இது எங்களுக்கு விளங்கியது. போராளிகளுக்கு என்று தனியாக மருத்துவமனைகள் இருந்து அரசாங்கம் ஏற்படுத்திய மருத்துவ வசதி மையங்களையே அவர்கள் ஏன் அவர்கள் இலக்குவைக்க வேண்டும்? கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகிய இடங்களில் சுனாமிக்குப் பின்னர் புதிய மருத்துமனைகள் கட்டப்பட்டிருந்தன. அரசாங்க அதிபர் (G.A) அவற்றைத் திறந்துவைத்திருந்தார். இந்த மருத்துவமனைகளில் கடமையாற்றவந்த டாக்டர். சத்தியமூர்த்தியும், டாக்டர்.வரதராஜாவும் அரசாங்க ஊழியர்கள்தான். டாக்டர் சத்தியமூர்த்தி வேலைபார்த்துவந்த இடம் அரசாங்கத்தின் ஷெல் தாக்குதலில் அழிக்கப்பட்டபோது அவர் தன்னிடம் சிகிச்சை பெற்றுவந்தவர்களுடனேயே சேர்ந்து வெளியேற நேர்ந்தது. அந்த மருத்துவர்கள் வேலைபார்க்க நேர்ந்த தற்காலிக மருத்துவ நிலையங்அள் சிலவற்றுக்கு நான் சென்றுள்ளேன். அங்கு நிலவிய மோசமான நிலையை எடுத்துச்சொல்ல என்னிடம் வார்த்தைகள்இல்லை. அந்த மருத்துவர்கள்இருபத்துநான்கு மணிநேரமும் வேலை பார்த்தார்கள் என்றுதான் சொல்லவேண்டும்.*

*2008ஆம் ஆண்டு செப்டம்பரில் மனிதாபிமானத் தொண்டு நிறுவனங்கள் வன்னியிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட பின்பு மருத்துவமனையின் நிலைமை மிகவும் மோசமாகியது. எரிபொருள் கொண்டுவருவதில் தடையிருந்ததால், தற்காலிக வைத்தியசாலைகளில் குளிரூட்டும் பெட்டியை இயக்க முடியவில்லை. தானம் கொடுக்கப்பட்ட இரத்தத்தை பாதுகாத்துவைப்பதென்பதும், பிராணவாயுவை சேமித்துவைப்பது என்பதும் சாத்தியமில்லாமல் போனது. முற்றுப் பெறாத பள்ளிக்கூட கட்டிடமே ஒரு வைத்திய சாலையானது.*[13]

*அங்கே நோயாளிகளுக்கும் காயம்பட்டவர்களுக்கும் படுக்கை வசதி இல்லை. அவர்கள் சுட்டெறிக்கும் வெயிலிலேயே காத்துக்கிடக்க வேண்டியதுதான். திறந்த வெளியிலேயே அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன. ஷெல் அடிபட்டு காயங்களோடு தொடர்ந்தும் ஆட்கள் வந்துகொண்டிருந்தனர். அவர்களெல்லாம் கட்டவிழ்ந்த அவலஹ்தின் சாட்சிகள் ஆவர். அதனால்தான் இப்போது அரசாங்கம் அவர்கள் மௌனமாக இருக்க வேண்டுமென விரும்புகிறது. பலருக்கு மிக மோசமான காயங்கள் ஏற்பட்டிருந்தது. ஆனால் மருத்துவ பொருட்களைக் கொண்டுவருவதில் தடை இருந்ததலால், அன்டிபயாடிக் மருந்துகளுக்கும் காயங்களை ஆற்றவல்ல மருந்துகளுக்கும் கடுமையான தட்டுப்பாடு நிலவியது. மோதலின் உச்சகட்டத்தில் அறுவை சிகிச்சை உபகரணங்களும் பொருட்களும் அறவே தீர்ந்துபோய்விட்டன என்றுதான் சொல்ல வேண்டும். காயம்பட்டுவருபவர்களை வைத்துக்கொண்டு மருத்துவ ஊழியர்கள் அல்லாடிப்போனார்கள். காயங்களுக்கு கட்டு போடும் துணியோ துணிவலையோ அவர்களிடம் இல்லை. போதிய மருத்துவ உதவிப் பொருட்கள் இல்லாத*

*காரணத்தினால், காயம்பட்ட சிறுவர்கள் பலரது கால் கைகளை துண்டித்து எடுத்து அவர்களைக் காப்பாற்ற வேண்டிவந்தது. இல்லாது போனால் அவர்கள் இறந்துவிடுவார்கள் என்ற நிலை. இதுவே உரிய மருந்துகள் இருந்திருந்தால் காயங்களை ஆற்றியிருக்க முடியும். இத்தனை கஷ்டங்களுக்கு மத்தியிலும் மக்கள் தொடர்ந்தும் இரத்த தானம் செய்ய முன்வந்தது எனக்கு நம்பிக்கையைத் தந்திருந்தது.*

*அங்கிருந்த மக்களில் பெரும்பான்மையானோர் தம்முடைய உடைமைகள் அனைத்தையும் இழந்திருந்தனர். பல குடும்பங்கள் மீண்டும் மீண்டும் இடம்பெயர நேர்ந்தவர்கள். வெளியுலகத்தோடு இவர்களுக்கு தொடர்பு கிடையாது - ஒரு சிலரிடம் மட்டுமே தொலைபேசி இருந்தது என்பதால் மிகவும் தனிமைப்படுத்தப்பட்ட உணர்வும் நிற்கதியாகிவிட்ட நினைவுகளும் வந்துகொண்டிருந்தன. அப்பகுதியில் இருந்த கிறிஸ்தவ தேவாலயங்கள் அடைக்கலம் தேடி வரும் மக்களால் நிரம்ப ஆரம்பித்திருந்தன. சிறார்கள் கூட அங்கே வந்து தங்கினர். கடவுளிடம் பிரார்த்தித்து மன்றாடுவதைத் தவிர அவர்கள் செய்வதற்கு வேறொன்றுமில்லை.*

*சிவிலியன்களுக்காக ஒரு பாதுகாப்பு வலயப் பகுதி ஒன்றை ஏற்படுத்தியதாக அரசாங்கம் கூறியதே தவிர, எத்தனை பேர் மோதல் பகுதிகளில் சிக்குண்டிருந்தனர் என்பது பற்றி அவர்கள் நிஜமான விபரங்களை வெளியிடவே இல்லை. மோதல் அற்ற பிரதேசம் என்று ஒன்று முதலில் 20 ஜனவரி 2009 அன்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது மிகச் சிறிய ஒரு நிலப்பகுதிதான். உடையார்கட்டிலிருந்து தேவிபுரம் வரையில் இருந்த அந்த பகுதியின் பரப்பளவு 30 முதல் 35 சதுர கிலோமீட்டர் வரைதான் இருக்கும். அவ்வளவு சிறியதோர் இடத்தில் மூன்று லட்சம் மக்களால் வாழமுடியும் என்று அரசாங்கத்தால் எப்படி எதிர்பார்க்க முடியும்? சிவிலியன்கள் அத்தனை பேரும் அவ்விடத்துக்குள் தங்க முடியும் என்ற அரசாங்கத்தின் யோசனை நகைப்புரியதாகத்தான் இருக்கிறது. மோதல் அற்ற பிரதேசம் ஒன்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்ற அறிவிப்பு அரசாங்க அதிபருக்கு தொலைபேசி மூலமாக தெரிவிக்கப்படுவது 21 ஜனவரி அன்றுதன். அந்த விஷயத்தில் அரசாங்கம் சிறிதும் நியாயமில்லாமல் நடந்துகொண்டது. மோதல் அற்ற பிரதேசத்திற்குள் மக்கள் உடனடியாகச் செல்ல வேண்டும் என அரசாங்கம் உத்தரவிட்டது. ஆனாலும் சண்டைகள் ஓயவில்லை என்பது பிரச்சினையாக இருந்தது. தமது உடமைகளை எல்லாம் டிராக்டர் வண்டிகளிலும் பிற வாகனங்களிலும் ஏற்றிக்கொண்டு மக்கள் அவ்விடத்துக்கு செல்ல முற்பட சாலைகள் எல்லாம் கூட்டம் தாளாமல் ஸ்தம்பித்துப் போயின. மக்களுக்கு விபரம் தெரிவிக்கும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துவிட்டதாக அரசாங்கம் கூறுகிறது. ஆனாலும் சாலைகள் அடைத்து நிற்கும்போது மக்களால் எப்படி பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல முடியும். அந்தப்*

*பகுதிக்கு எவ்வாறு சென்று சேர முடியும் என்பது பற்றி மக்களிடம் ஒரு விபரமும் இல்லை. எல்லாவற்றையும் தாண்டி மக்கள் இடம்பெயர்ந்துகொண்டிருந்தான் இருந்தார்கள். எப்படியும் தப்பிக்கலாம் என்ற நம்பிக்கை அவர்களிடம் வந்துபோய்க்கொண்டுதான் இருந்தது. 22 மற்றும் 23 ஆகிய தேதிகளில் சிலர் மோதல் அற்றப் பகுதிக்கு செல்லக் கிளம்பினார்கள் ஆனால் அவர்களில் பலர் வழியிலேயே கொல்லப்பட்டிருந்தார்கள் என்பது எனக்கு நினைவிருக்கிறது. கற்பனை செய்துபார்க்கவே முடியாத அளவில் அப்படி ஒரு கூட்ட நெரிசல். மோட்டார் சைக்கிளில் 15 நிமிடத்தில் சென்றுவிடக்கூடிய ஒரு தூரத்தை நத்தை போல ஊர்ந்து ஊர்ந்து இரண்டு மணி நேரங்கள் தாண்டிதான் சென்றடைய முடியும் என்ற நிலை.*

*சிவிலியன்கள் பலரால் வெளியேற முடியவில்லை என்பதை அறிந்திருந்தும்கூட அரசாங்கம் அப்பகுதியில் ஷெல் தாக்குதல்களை மீண்டும் ஆரம்பித்திருந்தது. மோதல்கள் அற்ற பிரதேசமாக அறிவிக்கப்பட்டிருந்த இடத்திலும்கூட ஷெல்கள் வீசப்பட்டிருந்தன. ஆதலால் அந்த சிறிய இடத்திலும்கூட மக்களுக்கு பாதுகாப்பு இல்லை. பதுங்குகுழி இருந்த ஓர் இடத்தில் நான் தங்கியிருந்தேன் என்பது நான் செய்த அதிருஷ்டம். கிபீர் விமானங்கள் காற்றைக் கிழித்துக்கொண்டு வரும் ஓசை கேட்டவுடனேயே நாங்கள் அனைவரும் பதுங்குகுழிகளுக்குள் ஓடி ஒளிந்துகொள்வோம்....*

*பதுங்குகுழிகள் உள்ளே பயந்துகொண்டே குந்திக்கொண்டும் உட்கார்ந்துகொண்டும் இருப்பதுதான் மாதக்கணக்கில் எங்களது வாழ்க்கையாக இருந்தது. சில நாட்கள் இரவு முழுக்க பதுங்குகுழிக்குள்ளேயே இருக்க வேந்திய நிலைமை இருந்தது. 40 பேர் இரண்டு பதுங்குகுழிகளில் இருப்போம். காற்று வருவதற்கு ஒரு சிறிய துவாரம்தான் இருக்கும். உள்ளுக்குள்ளே மிகவும் புழுக்கமாகவும் மூச்சு விட சிரமமாகவும் இருக்கும். சின்ன அதிர்வென்றாலும்போதும் உள்ளுக்குள்ளே மணல் சரிய ஆரம்பித்துவிடும். குண்டுவெடித்த சிதிலங்கள் தென்னை மரத்தில் மோதி விழுவது நாங்கள் கேட்கக்கூடியதாக இருக்கும். அந்தப் பகுதி நெடுக்கவும் இருந்த தென்னை மரங்கள்தான் எங்களுக்கு பாதுகாப்பு வழங்கிக்கொண்டிருந்தன என்று சொல்ல வேண்டும். மிகவும் ஆபத்தான சூழ்நிலைகளை நாங்கள் சந்தித்துவந்தோம். சில வேலை ஷெல் விழுந்து வெடிப்பதும் மக்கள் பதுங்குகுழிகளை நோக்கி ஓடிவருவதும் கேட்கும். காயம்பட்டவர்கள் கதறுவது காதில் விழும் என்றாலும் வெளியே போய் அவர்களுக்கு உதவ முடியாத அளவுக்கு ஆபத்து அதிகமாக இருக்கும்.*

*அங்க நடந்தவை பற்றி நான் கேள்விப்பட்டதிலேயே மிகவும் துயரமான சம்பவம் என்பது, ஒரு மகன் தன்னுடைய தாயை அவள் முழுவதுமாக இறப்பதற்கு முன்னரே*

*மண்ணை போட்டு மூடி புதைக்க வேண்டி வந்ததுதான். ஏராளமான மக்கள் இடம்பெயர்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்தப் பெண் கடுமையாக அடிபட்டு கிடக்கிறாள், அவளது உடலில் இருந்து இரத்தம் கசிந்துகொண்டிருக்கிறது. அவளால் மருத்துவமனைக்கு வந்திருக்க முடியாது. அவளை நாங்கள் கொண்டுசெல்வதும் சிரமமாக இருந்திருக்கும். அந்த இடத்தில் சிலரது வாழ்க்கை நீங்கள் கற்பனை செய்யவே முடியாத அளவுக்கு மோசமாக இருந்தது.*[14]

- **மனிதாபிமான உதவிகள் கிடைப்பதிலும் நிவாரணப் பொருட்கள் வருவதிலும் தடங்கல்கள்**

வெளியிலிருந்து எவரும் மோதல் பகுதிகளுக்கு செல்ல இலங்கை அரசாங்கம் கட்டுப்பாடுகளை விதித்தது யுத்தம் காரணமாக மக்கள் அனுபவித்துவந்த நிராதரவு நிலையை மேலும் தீவிரப்படுத்துவதாக அமைந்திருந்தது. அனைத்து மனிதாபிமான தொண்டு நிறுவனங்களும் ஐ.நா. நிறுவனங்களும் வன்னிப் பகுதியிலிருந்து வெளியேற வேண்டும் தங்களுடைய வாகனங்களையும் அகற்றிவிட வேண்டும் என்று இலங்கையின் பாதுகாப்பு செயல் கோட்டாபய ராஜபக்ஷ 2008ஆம் ஆண்டு செப்டம்பரில் உத்தரவு பிறப்பித்திருந்தார். இந்த உத்தரவின் விளைவாக வெளிநாட்டிலிருந்து வந்து இலங்கையில் பணியாற்றி வந்திருந்தவர்களும், அரசு சாரா அமைப்புகளின் ஊழியர்களும் ஓமந்தை சோதனைச் சாவடியைத் தாண்டி செல்ல முடியாத நிலைமை உருவானது.[15] 2009ஆம் ஆண்டு ஜனவரி மாத வாக்கிலேயே மக்கள் முழுமையாக நம்பிக்கை அற்றுப்போகும் நிலை உருவானதாக குமார் தெரிவித்தார்.

*ஜனவரிக்கு பின்னர் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை நூறைத் தாண்டியிருந்தது. நாங்கள் எல்லோருமே மிகவும் கவலைப்பட்டுப்போயிருந்தோம். சர்வதேச சமூகம் தலையிட்டு எங்களைக் காப்பாற்றாதா என்று நாங்கள் ஏங்கினோம். சிலர் கஷ்டப்பட்டு முயன்று அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கூட கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தனர். வான் தாக்குதல்களுக்கு நடுவிலும் ஒருத்தரை மோட்டார் சைக்கிளில் அனுப்பி வேலை செய்யும் நிலையில் சுதந்திரபுரத்திலுள்ள ஒரே தொலைநகல் கருவி மூலமாக மனுவை அனுப்பியிருந்தனர்.*[16]

அதேநேரம் மோதல் பகுதிகளில் சிக்குண்டுள்ள பொதுமக்களின் எண்ணிக்கையை இலங்கை அரசாங்கம் தனது அறிக்கைகளில் தொடர்ந்து மிகவும் குறைத்தே கணித்துவந்துள்ளது. கட்டவிழ்ந்துவரும் அவலநிலை குறித்து சுயாதீனமாக தகவல் சேகரிப்போரின் முயற்சிகளையும் (பக்கச்சார்பற்ற முறையில் சேகரிக்கப்பட்ட விபரங்கள் அதிக துல்லியமானவை என்பது பின்னர் தெரியவந்தது) அது ஒடுக்கவே முயன்றுவந்தது.[17] ஐ.நா. நிறுவனங்களும், தொண்டு நிறுவனங்களும், மனித

உரிமை அமைப்புகளும் பிற அரசு சாரா நிறுவனங்களும், தவிர தேசிய மற்றும் சர்வதேச ஊடகவியலாளர்களும் மோதல் பகுதிகளுக்குள் சென்று வருவதை தடுத்ததன் மூலமாக, அங்கே பொதுமக்களுக்கு உடனடியாகவும் அத்தியாவசியமாகவும் தேவைப்பட்ட மனிதாபிமான உதவிகளை அரசாங்கம் கிடைக்கவிடாமல் செய்துவிட்டது. உள்ளிருந்து தகவல் வெளிவருவதற்கு தடங்கல்கள் விதிக்கப்பட்டதன் காரணமாக, சர்வதேச அமைப்புகளும் இந்த நெருக்கடியைச் சமாளிக்க போதுமான அளவுக்கு தயாராகிக்கொள்ள வழியில்லாமல் போய்விட்டது. மோதல்களிலிருந்து தப்பித்து ஏராளமானவர்கள் உதவி நாடி இடம்பெயர்ந்து வந்தனர் என்பது பின்னர்தான் தெரியவந்தது.

விடுதலைப் புலிகளை வெற்றிகொண்டு விட்டதாக அரசாங்கம் அறிவித்து இரண்டரை மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும், ஓமந்தைக்கு அப்பால், மோதல்கள் நடந்த பகுதிக்கு சென்று, சூழலை பார்த்து உணர்ந்து புனர்நிர்மாணத் தேவைகள் பற்றி மதிப்பிடும் நோக்கில் மனிதாபிமான உதவியமைப்புகளுக்கு அனுமதி இல்லை. ஆதலால் முகாம்களில் வாழும் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படுவதில் உதவுவதற்கு அவசியமான பக்கச்சார்பற்ற தகவல்கள் போதுமான அளவில் கிடைக்காமலேயே இருந்துவருகிறது.[18]

உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள முகாம்களுக்கு செல்வது என்பதிலும் கட்டுப்பாடுகள் நீடிக்கவே செய்கின்றன. மனித உரிமைகள் விசாரணையாளர்கள், எதிர்க்கட்சி அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் ஆகியோருக்கு பொதுவாக அனுமதி கிடைப்பதில்லை, தொண்டு நிறுவன ஊழியர்களைப் பொறுத்தவரை நிலைமை மேம்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது. ஆனால் முகாம்களுக்கு செல்வதற்கான நிபந்தனைகள் தொடர்ந்தும் மாறிக்கொண்டே இருக்கின்றன - அப்பகுதி இராணுவ அதிகாரிகள் மற்றும் முகாமின் தளபதிகள் யார் என்பதைப்பொறுத்து அவர்களது விறுப்பு வெறுப்புகளுக்கேற்ப நிபந்தனைகள் மாறிக்கொண்டே இருக்கும் என தொண்டு நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

முகாம்களைச் சென்று பார்வையிட பலருக்கு அனுமதி கிடைத்துள்ளது ஆனால் கொழும்பில் உள்ள பாதுகாப்பு அமைச்சகத்தின் அனுமதி பெற்ற பின்போ, அல்லது அந்தந்த நேரத்தில் முகாம் நுழைவு வாயிலில் இராணுவத்தினரிடம் இருந்து அனுமதி பெற்ற பின்போதான் முகாம்குக்குள் செல்ல முடியும் என்று கொழும்பில் உள்ள மனித உரிமைகள் அமைப்பின் ஊழியர் ஒருவர் கூறுகிறார். அனுமதி பெறுவது தொடர்பான நடைமுறைகள் தாறுமாறாக வரையறுக்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிடுகிறார்.

*இப்படித்தான் செய்ய வேண்டும் என்ற நடைமுறை எதுவும் கிடையாது, அனுமதி கோரி விண்ணப்பிப்பதற்கான படிவங்கள் கிடையாது, விண்ணப்பங்களை கொடுக்க வேண்டிய அதிகாரி இவர்தான் என்ற விதி கிடையாது, எவ்வளவு காலத்தில் அனுமதி கிடைக்கும் என்ற வரையறை கிடையாது, எந்தெந்த நாட்களில் எந்தெந்த நேரத்தில் முகாமுக்குள் செல்லலாம் என்ற விளக்கமும் கிடையாது, விண்ணப்பிக்க எவ்விதமான ஆவணங்களை காட்ட வேண்டும், யாரிடமிருந்து பரிந்துரைகள் வேண்டும் என்று எதுவுமே தெளிவுபடுத்தபட்டிருக்கவில்லை. எந்த நோக்கத்துக்காக முகாமுக்குள் செல்வது அனுமதிக்கப்படும், எவ்வகையானவர்களுக்கு அனுமதி கிடைக்கும் என்ற விளக்கமும் கிடையாது.*[19]

மனித உரிமை ஆர்வலர்கள் என்று தங்களை அடையாளப்படுத்திக்கொள்ளும் சுயாதீன பார்வையாளர்கள் எவருக்கும் முகாமுக்குள் செல்ல அனுமதி கிடைத்ததாக இதுவரை சர்வதேச பொதுமன்னிப்பு சபைக்கு தெரியவரவில்லை. ஊடகவியலாளர்களும்கூட இராணுவத்தினர் சூழ வரவே முகாமுக்குள் செல்லமுடிந்துள்ளது. அல்லது ஐ.நா. தலைமைச் செயலர் போன்ற ஒரு விசேட பிரமுகர் வந்து பார்வையிடும்போது அது பற்றி செய்திவழங்குவதற்காக ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். பான் கீ மூன் அவர்கள் கடந்த மே மாதம் பிற்பகுதியில் முகாம்களைப் பார்வையிட்டிருந்தார். மனிதாபிமான தொண்டு நிறுவன ஊழியர்களுக்கும், மதபோதகர்களுக்கும் மட்டுமே '*ஒவ்வொரு முறையும் முன்னனுமதி வாங்கத் தேவையில்லாத நுழைவு அனுமதிகள்* வழங்கப்பட்டிருந்ததாக, மேலே விபரம் தெரிவித்த மனித உரிமைகள் அமைப்பின் ஊழியர் கூறுகிறார். "அதுவும் தாங்கள் குறிப்பிட்டிருந்த அந்தப் பணியை மேற்கொள்ளும் வரையில்தான் முகாமுக்குள் அவர்கள் இருக்கலாம். *(அங்கேயே நின்றுகொண்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள மக்களிடம் பேசுவதற்கு எல்லாம் அனுமதியில்லை.)*' என்கிறார் அவர்.[20]

சில மாதங்கள் முன்பு வரையில், இலங்கையில் இடம்பெயர நேர்ந்துள்ள மக்களை ஐ.நா.அகதிகள் நலன் நிறுவனமான UNHCR அமைப்புக்கு அரசாங்கம் முழு அனுமதி வழங்கியிருந்தது. இலங்கையில் அந்நிறுவனம் மேற்கொண்டுவரும் நீண்ட காலப் பணியின் அங்கமாகவே இந்த அனுமதி கிடைத்துவந்தது.[21] ஆனால் UNHCR அமைப்பும் பிற உதவி நிறுவனங்களும் வன்னியில் தங்களுடைய உதவிப் பணிகளை இடைநிறுத்திகொள்ள வேண்டுமென 2008 செப்டம்பரில் பாதுகாப்பு அமைச்சகம் உத்தரவிட்டிருந்தது. மேலும் , லட்சக்கணக்கான மக்கள் யுத்தப் பகுதிகளிலிருந்து தப்பித்து அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வந்துகொண்டிருந்த அந்த நிலையில், அரசு சாரா அமைப்புகளும் ஐ.நா. நிறுவனங்களும் இடம்பெயர்ந்த மக்களைப் பார்க்க அனுமதியில்லை என்று 2009 மே மாதத்தில் இலங்கை அரசாங்கம் அறிவித்தது. ஆனாலும் இந்த பாதகமான

முடிவு விரைவில் மாற்றிகொள்ளப்பட்டது. விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருக்கிறதா என்று விசாரிக்கப்படுவதற்காக பிரிப்பதற்காக இடம்பெயர்ந்த மக்கள் மரத்தடியில் காத்துநிற்கிறார்கள், காயம்பட்டு வலியால் துடித்துக்கொண்டும் பசியால் வாடிக்கொண்டும் நிற்கும் மக்கள் மருத்துவ உதவிகள் கிடைப்பதற்கு முன்பாகவே உயிரிழக்கிறார்கள் என்பது போன்ற செய்திகள் எல்லாம் ஊடகங்களில் கசிய ஆரம்பித்தன. குடும்பம் குடும்பமாக மக்கள் வெட்ட வெளியில் உறங்குவது பொன்ற அவலங்களைக் காட்டும் அனுமதியின்றி எடுக்கப்பட்ட புகைப்படங்கள் சர்வதேச அச்சு ஊடங்களில் வெளியாக ஆரம்பித்ததன் பின்னர், அரசாங்கம் தமது நிலையை தளர்த்திக்கொண்டது. ஐ.நா. நிறுவனங்களும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும், வேறு சில சர்வதேச மற்றும் உள்நாட்டு அரசு சாரா அமைப்புகளும் இடம்பெயர்ந்த மக்களை அணுகி உதவிகள் வழங்க அரசாங்கம் கட்டுப்பாடுகளுடன் அனுமதி வழங்கியிருந்தது. ஆனாலும் இந்த அமைப்புகளின் வாகனங்கள் இந்த முகாம்களுக்குள் நுழைவதற்கும் தொண்டு நிறுவன ஊழியர்கள் முகாம்வாசிகளிடம் பேசுவதற்கும் அரசாங்கம் தடைவிதித்திருந்தது. இது நிவாரணப் பொருட்களை விநியோகிப்பது என்பதில் சிரமங்களை ஏற்படுத்தியுள்ளது மேலும், மனித உரிமைகள் நிலவத்தைக் கண்காணிப்பது என்பதையும், பிற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பதையும் இது இயலாத காரியமாக்கி விட்டுள்ளது. கோரிக்கைகள் விடுக்கப்பட்டதன் பின்னர் குறிப்பிட்ட அளவில் முகாம்களுக்கு வாகனங்களை அனுமதிக்க கடந்த ஜூன் மாத ஆரம்பத்தில் அரசாங்கம் சம்மதித்திருந்தது. ஆனால் வாகனங்கள் கொண்டுசெல்ல முன்கூட்டியே விண்ணப்பிக்க வேண்டும், வாகனத்திலிருந்து 15 மீட்டர்கள் தூரத்தைத் தாண்டி தொண்டு நிறுவன ஊழியர்கள் நகரக்கூடாது என்பது போன்ற நிபந்தனைகள் நிவாரணப் பணியாளர்கள் முகாம்களுக்குள் தடையின்றி நடமாடுவதற்கு இடைஞ்சலாக அமைந்துவிட்டது.[22] இடம்பெயர்ந்த மக்களிடம் தனிப்பட்ட முறையில் பேசுவது என்பதும் சிரமமாகவே இருந்துவருகிறது என கடந்த ஜூன் மாதத்தின் பின்னர் முகாம்களுக்குள் சென்றுவரும் நிவாரணப் பணியாளர்கள் கூறுகின்றனர்.

"இடம்பெயர்ந்த மக்களிடம் பேசுவதற்கான அனுமதி அரசு சாரா அமைப்புகளுக்கு இல்லை. நீங்கள் முகாமுக்குள் போக வேண்டும். கொண்டுவந்த உணவுப் பொருட்களை வழங்க வேண்டும். உடனே திரும்பிவிட வேண்டும். அவ்வளவ்தான். உள்ளே போகும்போது நீங்கள் உங்கள் செல்லிட தொலைபேசிகளைக் கொண்டுசெல்ல முடியாது. இடம்பெயர்ந்த மக்கள் பயன்படுத்திக்கொள்வதற்காக அந்த தொலைபேசிகளை அவர்களிடம் வழங்கவும் கூடாது."[23] தொண்டு நிறுவன ஊழியர்கள் இடம்பெயர்ந்த மக்களிடம் பேசக்கூடாது என்கிற நடைமுறை, முகாம்களில் என்னென்ன விஷயங்கள் தேவைப்படுகின்றன என்று உதவி

நிறுவனங்கள் மதிப்பீடு செய்வதில் தடையாய் இருக்கிறது. மேலும் இடம்பெயர்ந்த மக்களிடையே நிராதரவு உணர்வும் பாதுகாப்பற்ற உணர்வும் பெருக இவ்விதிகள் காரணமாய் அமைந்துள்ளன.

மே மாதக் கடைசியோடு கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுவிட்டதாகவும், உணவு, மருந்துகள், கட்டுமானப் பொருட்கள் போன்றவற்றை விநியோகிப்பதில் தடைகள் இல்லை என்றும் கடந்த ஜூன் மாதத்தின் மையப்பகுதியில் இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி நீல் பூனே கூறியிருந்தார். ஆனாலும் இடம்பெயர்ந்தவர்களுக்கு ஆலோசனைகள் வழங்குவது என்பதற்கும், அவர்களின் நலன்களை பாதுகாக்கப்பதற்கான திட்டங்களை செயல்படுத்துவது என்பதற்கும் இடமில்லை என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.[24] இதே கருத்தை ஒத்ததாய் ஐ.நா.வின் உலக உணவுத் திட்டத்தின் இலங்கை இயக்குநர் அத்னன் கான் தெரிவித்த கருத்தும் அமைந்திருந்தது. "முகாமுக்குள் செல்வதில் இருந்துவரும் கட்டுப்பாடுகள் உணவுப் பொருளைக் கொண்டுசெல்வதில் ஒருபோதும் தடையாய் இருந்ததில்லை. ஆனாலும் வாகன நடமாட்டத்தில் கட்டுப்பாடுகள் நிலவுவது நாங்கள் மேற்கொள்ளக்கூடிய சில கண்காணிப்பு பணிகளை பாதித்துள்ளது. உணவு விநியோகம் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை கண்காணித்து எங்களை நிர்வகிக்கும் குழுக்களுக்கு நாங்கள் பொறுப்பாக பதில் சொல்ல வேண்டும்." என்று அவர் கூறியிருந்தார்.[25]

முகாம்களுக்குள் பிறரை அனுமதிப்பது தொடர்பான நடைமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பில் அரசாங்கம் அடிக்கடி மாற்றங்களைச் செய்துவந்துள்ளதாகவே யதார்த்தம் அமைந்துள்ளது என உதவி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. அடுத்த நாள் தங்களுக்கு முகாம் செல்ல அனுமதி கிடைக்குமா என்பது முதல் நாள்கூட தங்களுக்குத் தெரியாது என்கிற ஒரு நிலைமையே இருந்துவருவதாக அவர்கள் கூறுகின்றனர். முகாம்களின் கட்டுப்பாட்டு அதிகாரியாக இருக்கின்றவர்தான் முடிவுகள் செய்வார். (இவர் சிவிலியன் அதிகாரி என்றாலும், பெரும்பாலும் முன்பு இராணுவத்தில் இருந்த ஒருவராக இருப்பார்.) மேலும் இந்த முகாம்கள் இராணுவத்தினரே காவல் பணி செய்துவருகிறார்கள்.

முன்பு விடுதலைப் புலி போராளியாக இருந்தவரா என்று அடையாளம் காண்பதற்கான விசாரணைகள் இன்றளவும் முகாம்வாசிகளிடையே நடந்துவருவதாக அரசாங்கம் கூறுகிறது. அரசு சாரா நிறுவனங்கள் முகாம்களுக்குள் செல்ல அனுமதி மறுப்பது என்பது ஓர் பாதுகாப்பு விவகாரம் என்ற நிலைபாட்டை அரசாங்கம் எடுத்துவருகிறது. ஜூன் 17 அன்று, இலங்கை ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மண் யாப்பா அபயவர்த்தன கொழும்பில் செய்தியாளர்களிடையே பேசுகையில், முகாம்களுக்கு செல்ல அனுமதி கோரும் எதிர்க்கட்சி அரசியல்

பிரமுகர்களுக்கும் அரசு சாரா நிறுவனங்களுக்கும் அனுமதி வழங்கப்போவதில்லை, ஏனெனில் இடம்பெயர்ந்தவர்களுக்கு உதவ வேண்டும் என்பது இவர்களது நோக்கமல்ல, இடம்பெயர்ந்தவர்களின் அவலத்தைக் காட்டி அரசியல் ஆதாயம் தேட வேண்டும் என்பதும் வெளிநாடுகளிடம் இருந்து நிதி வசூலிக்க வேண்டும் என்பதும்தான் இவர்களது நோக்கம் என்று கூறியிருந்தார்.[26]

- **தகவல்கள் வெளிவருதில் தடை**

இலங்கையில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவிகள் வழங்கிவரும் நிறுவனங்கள், நிவாரணப் பணிகள் குறித்தும் முகாம்களில் நிலவும் சூழல் குறித்தும் பொதுப்படையாக தகவல்களை வெளியிடுவதில் கட்டுப்பாடுகளை விதிப்பது என்ற இலங்கை அரசாங்கத்தின் கொள்கை, இலங்கையின் இடைத்தங்கல் முகாம்களின் நிலைமைகள் தொடர்பில் ஊடகங்களும், மனித உரிமை அமைப்புகளும், பொதுமக்களும்கூட விபரம் அறிவதில் மென்மேலும் சிரமங்களை ஏற்படுத்தியுள்ளது. வட இலங்கையில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவி செய்ய விரும்பும் உள்ளூர் மற்றும் சர்வதேச அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் இலங்கையின் மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சகத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட வேண்டும். அதிலே ஏனைய பல நிபந்தனைகளோடு, முகாம்களில் வழங்கப்படும் சேவைகள் மற்றும் நடைபெறும் கட்டுமானங்கள் தொடர்பில் வெளிப்படையாக கருத்துக் கூறுவதானால், குறிப்பிட்ட அமைச்சகத்தின் செயலாளருடைய ஒப்புதல் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது. முகாம்களிலிருந்து தகவல்கள் வருவதை ஆழமாக முடங்கிப்போகச் செய்யும் ஓர் விளைவை இது ஏற்படுத்தியுள்ளது. முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் தமது உறவினர்களிடம் கூறும் விஷயங்கள், உதவிப் பணியாளர்கள் தனிப்பட்ட அளவில் ஊடகவியலாளர்களிடம் வெளியிடும் விபரங்கள், பெயர் குறிப்பிடப்படலாமல் வெளியிடப்படும் வலைப்பூ தகவல்கள் ஆகியவைதான் முகாம் நிலைமை குறித்து வெளிவரும் செய்திகளாக இருக்கின்றன. தகவல் தருவோர் தங்களை அடையாளம் காட்டிக்கொள்ளாமல் இருக்கும் ஒரு நிலைமையே காணப்படுகிறது. தொடர்ந்து முகாமுக்குள் செல்ல அனுமதி கிடைப்பதையும், வரும்காலத்தில் பிரச்சினைகளில் சிக்கிக்கொள்ளாமல் இருப்பதையும் உறுதிசெய்யும் பொருட்டு அவர்கள் இம்முடிவுக்கு வந்துவிடுகின்றனர்.

முகாமில் தங்கியுள்ள மக்களை தடையின்றியும், சுயாதீனமாகவும் தொடர்புகொள்ளும் உரிமை ஊடகவியலாளர்களுக்கும் மனித உரிமை ஆர்வலர்களுக்கும் மறுக்கப்படுள்ளது.[27] இதன் காரணமாக, யுத்தத்தின் இறுதிக்

கட்டத்தில் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் பற்றி அம்மக்கள் செய்தி வழங்குவதற்கு இடைஞ்சலாய் அமைந்துள்ளது. பொதுமக்கள் ஆர்டில்லரி தாக்குதலுக்கு இலக்கானதும், போர்க்குற்றங்கள் புரிந்ததாக மோதலில் ஈடுபட்ட இருதரப்பார் மீதும் குற்றங்கள் எழுந்ததும் இந்தக் கட்டத்தில்தான். இந்தக் கட்டுப்பாட்டின் விளைவாக முகாம் நிலைமை குறித்து அவர்கள் தகவல் வழங்குவதும் தடைபட்டுள்ளது.

- இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான ஐ.நா.வின் வழிகாட்டுக் கொள்கைகள் பிரிவு எண் 27ன் பிரகாரம், உள்நாட்டளவில் இடம்பெயர்ந்த மக்களது மனித உரிமைகளையும் பாதுகாப்பையும் உறுதிசெய்யும் பொருட்டு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய பொறுப்பு சர்வதேச மனிதாபிமான தொண்டு நிறுவனங்களுக்கும் சம்பந்தப்பட்ட பிற அமைப்புகளுக்கும் இருக்கிறது. இவர்கள் முகாம்களுக்குள் நுழைவதிலும் முகாம்வாசிகளுடன் பேசுவதிலும் தடைகள் விதிக்கப்படும்போதும் அல்லது இடம்பெயர்ந்த மக்களுடைய நலன்களை பாதுகாக்கும் பொருட்டு இவர்கள் முன்னெடுக்கும் திட்டங்கள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்போதும், இடம்பெயர்ந்த மக்கள் எதிர்கொள்ளும் பலவிதமான மனித உரிமை மீறல்களை அதிகாரிகள் அலட்சியப் படுத்திவிடுவதற்கான ஓர் ஆபத்து ஏற்பட்டுவிடுகிறது. முகாம்களில் வாழ்பவர்களிலேயே மிகவும் பலவீனமான மக்கள் - அங்கு தங்கியுள்ளவர்களிலேயே உடனடி பாதுகாப்பு தேவைப்படுகின்றவர்கள் - அதாவது பொறுப்பான பெரியவர் உடனில்லாத சிறார்கள், பெண்கள், முதியோர், உடற்திறன் பாதிக்கப்பட்டவர்கள் போன்றோர் துஷ்பிரயோகத்து ஆளாகும் ஆபத்து அதிகமாகிவிடுகிறது. பலவீனமான நிலையில் இருப்பவர்கள் சுரண்டலுக்கு ஆளாவது என்பதும் பெண்களும் சிறுமிகளும் அரசாங்கப் படையினரால் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாவது என்பதும் என்பதும் மோதல் பிரதேசங்களிலும், இடம்பெயர்ந்த மக்களிடையேயும் நெடுங்காலமாக இருந்துவரும் ஒரு பிரச்சினையாக பிரச்சினையாக இருந்துவருகிறது. பலவீன நிலையில் உள்ளவர்களுக்கு சமூகம் சூட்டிவிடுகின்ற அவப்பெயர், இலங்கையில் குற்றவாளிகள் சட்டத்தின் பிடியிலிருந்து தொடர்ந்தும் தப்பிவரும் அவலநிலை போன்றவையும் பிரச்சினைகளை சிக்கலாக்கிவிடுகிறது.

- **யதேச்சதிகாரத்துடன் தடுத்துவைக்கப்படல்**

முகாம்களின் எல்லையை விட்டு வெளியே வருவதற்கு இடம்பெயர்ந்த மக்கள் மீது இலங்கை அரசாங்கம் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. முகாம்களை விட்டு யாரும் வெளியே வர வழியில்லாமல் செய்வதற்காக மற்றும் கூரான

மதில்களும் முட்கம்பி வேலிகளும் கொண்டு எல்லைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆயுதமேந்திய இராணுவத்தினர் முகாம்களைச் சுற்றி காவலுக்கு நிற்கிறார்கள். இப்படி இருந்தாலும் அரசாங்கம் இவற்றைக் குறிப்பிடுவது என்னவோ 'நலன்புரி நிலையங்கள்' என்றும் 'நலவாழ்வு கிராமங்கள்' என்றும்தான். ஆனால் யதார்த்தத்தில் இவை தடுப்பு முகாம்களாகவே இருந்துவருகின்றன. சகலவிதமானோரையும் (இந்த இடத்தைப் பொறுத்தவரை விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசமாக முன்பு இருந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்துள்ள தமிழ் மக்கள் அனைவரையும்) யதேச்சதிகாரத்துடனும், சர்வதேச சட்டங்களை மதிக்காமலும் தடுத்துவைப்பதற்கான இடங்களாக இவை அமைந்துள்ளன.

ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்துவிட்டதாக இலங்கை அரசாங்கம் அறிவித்தது தொடர்பில் சர்வதேச பொதுமன்னிப்பு சபை சிலவற்றை இங்கே நினைவுகூற விரும்புகிறது. உதாரணத்திற்கு 19 மே 2009 அன்று இலங்கை நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆற்றிய உரையை எடுத்துக்கொண்டால், அவர் பின்வருமாறு கூறியிருந்தார்:

"நீங்கள் ஏற்கனவே கேள்விப்பட்டதுபோல நமது தாய்நாடு பிரிவினைவாத பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து முற்றிலுமாக விடுவிக்கப்பட்டுள்ளது. இறையாண்மை படைத்த இந்த நாடாளுமன்றம் இயற்றும் சட்டங்கள்தான் இலங்கையின் நிலப்பரப்பு ஒவ்வொரு அங்குலத்திலும் இனி அமலில் இருக்கும்."[28]

அப்படியானால், இலங்கையின் சிவில் சட்டங்களும், சர்வதேச மனித உரிமை சட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே சரி. ஆனால் லட்சக்கணக்கான மக்கள் குற்றச்சாட்டு ஏதும் சுமத்தப்படாத நிலையில், வழக்கு விசாரணை எதுவுமின்றி தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்பது சர்வதேச மனித உரிமை சட்டங்களையும் இலங்கை உட்ன்பட்டுள்ள சர்வதேச ஒப்பந்தங்களையும் அது மோசமாக மீறுவதாகவே அமைந்துள்ளது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச ஒப்பந்தம் (ICCPR) பிரிவு எண் 9(1) குறிப்பாக இதனை பின்வருமாறு விபரிக்கிறது:

அடிப்படை சுதந்திரங்களும், உயிர் பாதுகாப்பும் பெறுகிற உரிமை அனைவருக்கும் உண்டு. எவர் ஒருவரும் யதேச்சதிகாரமாக கைதுசெய்யப்படவோ அல்லது தடுத்துவைக்கப்படவோ கூடாது. சட்டங்களால் விபரிக்கப்படுகின்ற காரணங்கள் அன்றி வேறெதெற்காகவோ, சட்டபூர்வமான நடைமுறைகள் அன்றி வேறெந்த வழியிலோ எவர் ஒருவருடைய சுதந்திரங்களும் பறிக்கப்படக்கூடாது.

உள்நாட்டளவில் இடம்பெயர்ந்து வட இலங்கையில் முகாம்களில்

தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் அங்கிருந்து விடுதலை பெறுவது தடைசெய்யப்பட்டுள்ளது. "இடம்பெயர்ந்த நபர் ஒருவர் நீதிபதி ஒருவரிடமோ அல்லது சட்டபூர்வமாம நீதி நிர்வாக அதிகாரம் பெற்ற அதிகாரி ஒருவரிடமோ தாமதமின்றி அழைத்துவரப்படும்போது, நியாயமான காலகட்டத்துக்குள் விசாரிக்கப்படுவதற்கோ அல்லது விடுவிக்கப்படுவதற்கோ அந்நபருக்கு உரிமை இருக்க வேண்டும்" ICCPR உடன்படிக்கை பிரிவு எண் 9(3) கூறுகிறது. வட இலங்கை முகாம்வாசிகளுக்கு இந்த உரிமை மறுக்கப்பட்டுள்ளது. ஒருவர் தாங்கள் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டிருப்பதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க அவருக்கு உரிமை இருப்பதாக (ICCPR ஒப்பந்தம் பிரிவு எண் 9(4) கூறுகிறது. வழக்கறிஞரோடு தொடர்புகள் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டவர்களும் அல்லது ஏற்கனவே உச்சநீதிமன்றத்தில் இது தொடர்பான மனு செய்திருப்பவர்களும்தான் அவ்வாறு வழக்கு தொடுக்க முடியாது என்றும் அப்பிரிவு கூறுகிறது. ஆனால் வட இலங்கை முகாம்வாசிகளுக்கு இந்த உரிமையும் மறுக்கப்பட்டிருக்கவே செய்கிறது. இடம்பெயர்ந்த மக்கள் மிகப் பெரும்பான்மையானவர்களுக்கு மேலே விளக்கப்பட்ட விதிவிலக்குகள் பொருந்தாது. அவசரகாலத்தில்கூட தடைவிதிக்கப்படக்கூடாத இந்த முக்கியமான உரிமையை இலங்கையின் முகாம்வாசிகள் தொடர்ந்தும் அனுபவிக்கமுடியாத நிலையே இருந்துவருகிறது. ICCPR ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படுவதை மேற்பார்வையிட வேண்டிய பொறுப்பு கொண்ட ஐ.நா.வின் நிபுணர் குழுவான மனித உரிமைகள் குழு ICCPR ஒப்பந்தத்தின் 4ஆம் பிரிவு தொடர்பில் பின்வரும் அதிகாரபூர்வ பொதுக்கருத்தை கூறியிருந்தது:

சட்டத்தின் மாட்சிமை போன்ற கொள்கைகளின் பிரகாரம் பார்க்கப்போனால், நெருக்கடி காலத்திலும்கூட நியாயமான முறையில் விசாரிக்கப்படுவதற்கு இடமிருக்க வேண்டும் என்ற அடிப்படை உரிமை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்றே மனித உரிமைகள் குழு கருதுகிறது.... குற்றம் நிரூபிக்கப்படுவதற்கு முன் ஒருவர் நிரபராதி என்றே கருதப்பட வேண்டும் என்ற கொள்கையும் நெருக்கடி காலத்திலும் மதிக்கப்பட வேண்டும். பறிக்கப்படக்கூடாத உரிமைகள் ஒருவருக்கு கிடைத்துவருவதை உறுதிசெய்ய வேண்டும் என்றால், தடுத்துவைக்கப்பட்டது சட்ட ரீதியில் சரிதானா என்பதை நீதிமன்றத்தில் முறையிட்டு தாமதமின்றி முடிவுபெறுகின்ற உரிமையை அவர்களுக்கு வழங்கியாக வேண்டும். ஒப்பந்தத்தை மீற ஓர் அரசாங்கம் முடிவுசெய்துவிடுவதன் காரணமாக ஒரு மனிதனது இந்த அடிப்படை உரிமை பாதிக்கப்படுவதற்கு இடமளித்துவிடக்கூடாது.[29]

உள்நாட்டளவில் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான ஐ.நா.வின் வழிகாட்டு கொள்கைகள் பிரிவு எண் 14கில் இந்த விதி பிரதிபலிக்கப்பட்டுள்ளது.[30] அப்பிரிவு பின்வருமாறு கூறுகிறது:

**1.** சுதந்திரமாக நடமாடுவதற்குரிய உரிமை மற்றும் தமது வதிவிடத்தை தேர்வுசெய்துகொள்வதற்கான உரிமை உள்நாட்டளவில் இடம்பெயர்ந்த நபர் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது.

**2.** குறிப்பாகமுகாம்களில் உள்ளிருந்து வெளியிலும், வெளியிருந்து உள்ளுக்கும் வந்துபோகும் உரிமை, ஒரு குடியேற்றத்திலிருந்து இன்னொரு குடியேற்றத்துக்கு செல்லும் உரிமை இடம்பெயர்ந்த மக்களுக்கு இருக்கிறது.

2009 ஜூலை 7ஆம் தேதி வரையில் என்று வைத்துப் பார்க்கும்போது 8,600 பேர் முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களால அமைந்திருக்கின்ற இவர்கள் தமது சொந்த வீடுகளுக்கு திரும்பவோ, அல்லது வேறு மாற்று இடங்களில் குடியேறவோ அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஏனையோர் இன்னும் தடுப்புக்காவலிலேயே இருந்துவருகிறார்கள். அரசாங்கத்தின் இந்த முகாம்களில் தங்கியுள்ளவர்களில் பெரும்பான்மையானவர்களுக்கு அனுமதி கிடைக்கும் பட்சத்தில் வெளியில் தங்குவதற்கு இடமிருந்தும், உடன் தங்கவைத்துக்கொள்ளக்கூடிய உறவினர்கள் இருந்தும் அவர்கள் தொடர்ந்தும் முகாம்களிலேயே தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.[31] இடம்பெயர்ந்த மக்களில் **1,100** பேர் அடங்கிய மேலும் ஒரு தொகுதி மக்களை அவர்களது சொந்த இடங்களுக்குத் திரும்ப அனுமதித்ததாக ஆகஸ்ட் 5ஆம் தேதியன்று அரசாங்கம் அறிவித்திருந்தது.[32]

மிக அண்மையில் இடம்பெயர்ந்தவர்கள் உள்ளிட்டு அனைவரையுமே விசாரித்து, விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் எவரும் இருக்கிறார்களா என்று கண்டறிந்து பிரித்த பின்னரே அவர்களை விடுவிக்க முடியும் என்று அரசாங்கம் கூறியுள்ளது. இந்த மக்களின் சொந்தப் பிரதேசங்களில் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு அவை மீள்குடியேற்றத்திற்கு தயாராகும் வரை இவர்கள் தொடர்ந்து முகாம்களிலேயெ தங்க வேண்டிவரும் என்பதை குறிப்புணர்த்துவதாக இது அமைந்துள்ளது. அந்தப் பணி முடிவடைய பல மாதங்களோ, ஆண்டுகளோகூட எடுக்கலாம். மூன்று ஆண்டுகள் காலம்வரை மக்களை முகாம்களில் தங்கவைக்க நேரிடும் என்று அரசாங்கம் ஆரம்பத்தில் கூறியிருந்தது. ஆனால் அண்மையில் அந்த கொள்கை மீளாய்வு செய்யப்பட்டு, இன்னும் விரைவாகவே பெரும்பான்மையானோர் மீள்குடியேற்றம் செய்யப்படுவார்கள் என அது வாக்குறுதி வழங்குகிறது.[33]

இடம்பெயர்ந்த மக்களை 180 நாட்களில் மீள்குடியேற்றம் செய்துவிடுவோம் என கடந்த ஜூலை 22ஆம் தேதியன்று இலங்கை இந்தியாவுக்கு வாக்குறுதி வழங்கியிருந்தது. ஆனால் ஜூலையின் பிற்பகுதியில் சர்வதேச நாணய

நிதியத்துக்கு இலங்கை அரசாங்கம் எழுதிய கடிதத்திலும் சரி பிற்பாடு அதிகாரிகள் வழங்கிய பேட்டிகளிலும் சரி, இந்த ஆறு மாத காலகட்டத்தில் மீள்குடியேற்றம் செய்யப்படுவோரின் அளவு 80 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக குறைந்துவிட்டது.[34]

இலங்கையில் நடந்துவரும் ஐ.நா.வின் மனிதாபிமானப் பணிகள் குறித்து ஐ.நா.வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகம் கடந்த ஜூலையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது:

*கிட்டத்தட்ட 2,80.000 இடம்பெயர்ந்த மக்கள் முகாம்களுக்கு அடைத்துவைக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களது நடமாட்ட சுதந்திரம் என்பது பெரும் பிரச்சினையாக உருவெடுத்துவருகிறது. நடமாட்ட சுதந்திரம் இல்லாததன் விளைவாய் வேலை தேடுவதிலும், பள்ளிக்கூடம் செல்வதிலும், உறவினர்களையும் நண்பர்களையும் சந்திப்பதிலும், எல்லாவற்றும் மேலாய் தமது வதிவிடங்களைத் தேர்வுசெய்துகொள்வதிலும் இந்த மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. இதுநாள் வரையில் சுமார் 4,300 பேர் முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பான்மையானோர் முதியவர்கள். 9,000 பேர் அடங்கிய இன்னொரு தொகுதி விடுவிக்கப்படுவதற்கு தயாராக இருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்த மாதிரியான முன்னேற்றங்கள் வரவேற்கத்தகுந்தவை. அதேநேரம், குறிப்பிட்ட சில தேவையுடைய மக்கள் நேரத்தில் விடுவிக்கபட வேண்டும் என்றும், எந்தெந்தப் வகையிலானவர்கள் விடுவிக்கபடுவது என்ற வரையறை விரிவுபடுத்தப்பட வேண்டும் என்றும் ஐ.நா. தொடர்ந்தும் வலியுறுத்திவருகிறது.*[35]

ஜூன் மாதம் மையப் பகுதியில், மக்களைத் தடுத்துவைக்கும் இலங்கை அரசாங்கத்தின் இந்த கொள்கையை எதிர்த்துப் போடப்பட்ட இரண்டு மனுக்களை இலங்கையின் உச்ச நீதிமன்றம் விசாரிக்கத் துவங்கியது.[36] இடம்பெயர்ந்த மக்களை தொடர்ந்தும் தடுத்துவைப்பது என்பது இலங்கையின் அரசியல் சாசனத்தினால் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறும் செயல் என்று இந்த இரு வழக்குகளுமே வாதிட்டன.

முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் முதல் வழக்கை தொடுத்திருந்தனர். மொத்தம் ஏழு பேர் அடங்கிய இக்குடும்பம் யுத்தம் காரணமாக பிரிய நேர்ந்தது. இவர்களை அதிகாரிகள் வெவ்வேறு முகாம்களில் தடுத்துவைத்துள்ளனர். குடும்பத்தினர் அனைவரும் மீண்டும் ஒன்றிணைய அனுமதி வேண்டும் என்றும், காயம்பட்ட குழந்தை ஒன்றுக்கு வெளியில் சென்று மருத்துவ உதவி பெற அனுமதி வேண்டும் என்றும் இவர்கள் கோரியிருந்தனர். முகாமுக்கு வெளியில் சென்றாலும் தங்குவதற்கு தங்களுக்கு

இடம் இருப்பதால் தாங்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் இவர்கள் வாதிட்டிருந்தனர். இந்தக் குடும்பம் மீண்டும் ஒன்றுசேர்வது தொடர்பில் நீதிமன்றம் விரைவாக தீர்ப்பளித்திருந்தது என்றாலும், விடுதலை செய்யப்படுவதற்கான இவர்களது கோரிக்கை தொடர்பில் முடிவு தெரிவிப்பதை அது ஒத்திப்போட்டுவிட்டது.

மாணிக்கராஜா சிவபாக்கியம் என்ற 68 வயது பெண்ணும் கதிர்காமு மாணிக்கராஜா (70 வயதுடையவர், இக்குடும்பத்தாரில் முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தவர் இவர் ஒருவர்தான்.) என்ற அவருடைய கணவரும், சோபிகா (13), நேசனா (10), கிஷோர் (இப்போது உயிருடன் இல்லை) என்ற அவர்களது மூன்று பேரப்பிள்ளைகளும்,சுரேந்திரநாதன் ஜெயராணி, பொன்னுசாமி சுரேந்திரநாதன் என்ற அப்பிள்ளைகளின் பெற்றோரும் புளியம்பொக்கனை என்ற கிராமத்திலிருந்து 2008 டிசம்பரில் யுத்தம் காரணமாக வெளியேறி விசுவமடுவை நோக்கிச் சென்றிருந்தனர். கடுமையான ஷெல்வீச்சு காரணமாக அடுத்தடுத்து வெவ்வேறு இடங்களுக்கு சென்று கடைசியில் முல்லைத்தீவுக்கு வடக்காய் அமைந்துள்ள சுதந்திரபுரத்து இந்துக் கோயிலில் இவர்கள் தஞ்சம் புகுந்திருந்தனர். இந்தக் கோயிலில் ஒரு தற்காலிக முகாம் அமைக்கப்பட்டிருந்தது.

மாணிக்கராஜா சிவபாக்கியத்தின் சகோதரி, சிதம்பரம்பிள்ளை அன்னபாக்கியம் என்பவர் வழக்கைத் தொடுத்திருந்தார். இவர் ஒரு சட்டத்தரணியும் ஆவார். இந்தக் குடும்பம் அனுபவித்த விடயங்கள் குறித்து தான் அறிந்ததை ஒரு செய்தியாளரிடம் அவர் பின்வருமாறு விளக்கியிருந்தார்.

..... கடந்த டிசம்பர் மாதம் எனது சகோதரி என்னை தொலைபேசியில் அழைத்துப் பேசினார். இராணுவத்தினர் கிளிநொச்சியை நெருங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்று அவர் என்னிடம் சொன்னார். அந்தப் பகுதியிலே பல்லாயிரக்கணக்கான அகதிகள் வந்து குவிந்துவருகிறார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் எனது சகோதரியின் வீட்டு வளாகத்திற்குள்ளேயே வந்து நிரம்பியிருந்தனர். அந்த அகதிகளில் சிலருக்கு மோசமாக காயம்பட்டிருந்தது. நிறைய பேர் கொல்லப்பட்டிருந்ததாக நாங்கள் அறிய நேர்ந்தது. இறந்தவர்களுக்கான இறுதிக்கிரியைகளுக்கும் அவசர அவசரமான ஏற்பாடுகள் நடந்திருந்தன.

இந்த குடும்பத்துக்கு விடுதலைப் புலிகள் மீது நம்பிக்கையில்லை. விடுதலைப் புலிகள் மக்களை துன்பங்களுக்கு ஆளாக்கிவந்துள்ளனர். அவர்கள் எங்களிடம் இருந்து பணம் பறித்தார்கள் என்பதோடு, எங்களுடைய நிலங்களை தங்களுடைய தேவைகளுக்காக பிடுங்கிக்கொண்டுவிட்டனர். அதையெல்லாம் விட மோசம், அவர்களுக்கு கீழே இருப்பவர்களுக்கு கருத்து சுதந்திரமே கிடையாது என்பது.

அவர்களை விமர்சித்து யாராவது ஏதாவது சொன்னார்கள் என்று கேள்விப்பட்டால் அவர்கள் வந்து எச்சரித்துவிட்டு போவார்கள், "எங்கள் அலுவலகத்துக்கு வந்தால் உங்களோட பிரச்சினைகளை பற்றி விவாதிக்கலாம், தனிப்பட்ட முறையில் கலந்து பேசலாம்." என்று சொல்வார்கள். ஆனால் அவர்களுக்கு முன்னால் போய் எதிர்த்துப் பேசுவதற்கோ விமர்சிப்பதற்கோ ஒருத்தருமே துணியவில்லை. அப்படிச் செய்தால் அவர்கள் பிடித்துவைக்கப்படுவார்கள் அல்லது கொல்லப்படுவார்கள்.

ஜனவரி 5 அன்று எனது சகோதரி என்னை தொலைபேசியில் அழைத்துப் பேசினார். "புளியம்பொக்கனையில் இனிமேலும் தங்கியிருப்பது பாதுகாப்பல்ல. அக்கம்பக்கத்திலெல்லாம் ஷெல் வந்து விழுகிறது. மக்கள் பலர் காயம்படவும் கொல்லப்படவும் செய்கிறார்கள்." என்று அவர் சொன்னார். இருபது கிலோ மீட்டர் தொலைவில் உள்ள விசுவமடுவில் தங்அளுக்கு ஒரு வீடு இருப்பதாகவும், தாங்கள் அங்கு செல்லவிருப்பதாகவும் சொன்னார்.

எனக்கு தெரிந்த இந்த கொஞ்சம் விஷயங்களையும் நான் தெரிந்துகொண்டது என் உறவுக்காரர்கள் சொன்னவற்றை வைத்துத்தான். அவங்க இருந்த பகுதி முழுக்கவுமே இடம்பெயர்ந்த மக்களும் நிராதரவான மக்களும் நிரம்பியிருந்தார்கள். ஒட்டுமொத்த ஊருமே எல்லாவற்றையும் காலி செய்துவிட்டு செல்கிற நிலைமைதான். சாலைகள் மக்களால் நிரம்பிவந்தன. பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது உயிருக்கு அஞ்சி இடம்பெயர்ந்தனர். குண்டடிபட்டு பிறர் கைதாங்கலுடனோ நொண்டி நொண்டியோதான் செல்ல நேர்ந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்த்க்கொண்டே போனது.

ஒழுங்கான வைத்திய வசதி எதுவும் அங்கு இருக்கவில்லை. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சில உதவிகளை செய்துவந்தது. ஆனால் வைத்திய கூடம் என்று ஒரே ஒரு கொட்டகைதான் இருந்தது. நோயாளிகள் கூட்டத்தோடு அந்த இடமும் மாறிக்கொண்டே இருகும். காயம்பட்ட மக்களால் அந்த இடம் நிரம்பி வழியும். வெறுமனே நான்கு டொக்டர்மாரும், ஒரு சில செவிலியரும், மருத்துவ உதவியாளர்களும் மட்டுமே அங்கு இருந்தனர்.

நாளுக்கு நாள் இராணுவம் முன்னேறிக்கொண்டே வந்தது, தொடர்ந்து ஷெல் வந்து விழுந்த மேனியாய் இருக்கும். மூன்ற் நாள் கழித்து எனது சகோதரியின் குடும்பம், சுதந்திரபுரத்திலுள்ள இந்துக் கோயிலில் அமைக்கபட்டிருந்த முகாமுக்கு போனார்கள். இப்போது என் சகோதரி குடும்பத்தினர் வீடுவாசல் இல்லாதவர்களாய் போனார்கள். என் சகோதரி கடைசியாய் என்னிடம் பேசியது பிப்ரவரி 7ஆம் தேதி. அதன் பின்னர் அவர்கள் என்னோடு தொலைபேசியில் பேசுவது என்பது முற்றிலுமாகவே இல்லாதுபோனது.

இராணுவத்தினர் விசுவமடுவை பிடித்ததை அடுத்து, பிப்ரவரி ஒன்பதாம் தேதியன்று விடுதலைப் புலிகள் பிரதேசத்திலிருந்து வெளியேறி இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தப்பிச் சென்றுவிடுவது என்று எனது உறவுக்காரர்கள் தீர்மானித்திருந்தனர். அப்படிச் செல்வது ஆபத்தான ஓர் காரியம். இராணுத்தார் வீசும் ஷெல் வந்து விழும் திசையை நோக்கிச் செல்ல வேண்டும், விடுதலைப் புலிகளிடம் மாட்டப்படுவதற்கும் அல்லது அவர்களால் தாக்கப்படுவதற்கும் வாய்ப்பு உள்ளது. தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள மக்கள் தப்பிச் செல்வதை விடுதலைப் புலிகள் பலப்பிரயொகம் செய்து தடுத்துவந்தனர் என்பது தெரிந்த விஷயம்தான். தப்பிச்செல்ல முற்பட்ட மக்களை விடுதலைப் புலிகள் சுட்டுக்கொன்ற சம்பவங்கள் பற்றிகூட அவர்கள் கேள்விப்பட்டிருந்தனர். தப்பி வெளியேறும் இரண்டு குழுவாக பிரிந்து சென்று ஆபத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் விரும்பினர். ஏதாவது அசம்பாவிதம் நடந்தாலும், ஒரு சிலராவது காப்பாற்றப்படுவார்களே என்பதால் அவர்கள் இந்த முடிவுக்கு வந்தனர்.

தாத்தா பாட்டியும், கிஷோரும் சோபிகாவும் நள்ளிரவுக்கு பின்னர் கிளம்புவதாக இருந்தனர். மகள் ஜெயராணியும், அவள் கணவர் பொன்னுசாமியும், நேசனாவும் இரண்டு மணி நேரம் கழித்து அதே திசையில் செல்வதாக இருந்தனர். பத்து கிலோமீட்டர் தூரம் நடந்த பின்னர்தான் அவர்களால் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியை அடையமுடியும்.[37]

ஜெயராணி, பொன்னுசாமி, நேசனா ஆகியோர் பிப்ரவரி பத்தாம் தேதி இரவுப் பொழுதை ஒரு பதுங்குகுழிக்குள் கழித்திருந்தனர். ஷெல் வீச்சிலிருந்து தப்பிப்பதும், அப்பகுதியைக் கண்காணிக்கு விடுதலைப் புலி உறுப்பினர்களின் கண்ணில் படாமல் இருப்பதும் அவர்கள் நோக்கம்.

**"பிப்ரவரி ஒன்பதாம் தேதியன்று, அரசு கட்டுப்பாட்டில் உள்ள விசுவமடுவுக்குள் நுழைய முயன்ற ஒரு பெரிய கும்பலை வழியில் தடுத்தி நிறுத்திய விடுதலைப் புலி உறுப்பினர்கள் அவர்களை அடித்து புதுமாத்தளன் திசையில் விரட்டிவிட்டிருந்தனர். அந்தக் கும்பலிலேதான் எனது சகோதரி சிவபாக்கியம், அவர் கணவர், பேத்தி சோபிகா, பேரன் கிஷோர் ஆகியோர் இருந்தனர். தாத்தா அதாவது என் சகோதரியின் கணவர் அப்போது அடிவாங்கியது அவருடைய தோள்பட்டையில் இன்றளவும் வீங்கிப்போய் வலித்துக்கொண்டிருக்கிறது."**

.....ஷெல் வீச்சு ஓய்ந்திருந்த நேரத்தில் அவர்கள் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஒருவாராக நுழைந்திருந்தனர். இராணுவத்தினர் அவர்களைப் பிடித்து வவுனியாவில் சைவபிரகாச பள்ளிக்கூடத்தில் அமைக்கப்பட்டிருந்த முகாமுக்குள் கொண்டுசென்றிருந்தனர்.[38]

ஆனால் தாத்தா பாட்டி, கிஷோர் சோபிகா அடங்கிய பிரிவுக்கு அந்த அளவுக்கு அதிருஷ்டம் இருக்கவிலை.

*.... அவர்கள் தப்பித்துக் கிளம்பிய கொஞ்ச நேரத்திலேயே அவர்கள் விடுதலைப் புலி உறுப்பினர்களின் கண்களில் சிக்கிக்கொண்டுவிட்டனர். புலிகள் அவர்களை அடித்து புதுமாத்தளனுக்கு திரும்பிப் போகச் சொல்லி விரட்டிவிட்டிருந்தனர். அங்கே தாத்தா பாட்டியும், கிஷோர்- சோபிகாவும், தமது பெயரை சர்வதேச செஞ்சிலுவைக் குழுவிடம் பதியவைத்திருந்தனர். அந்த இடத்தில் இருந்து தங்களை வெளியே கொண்டுசெல்லும்படி அவர்கள் ICRCயிடம் விண்ணப்பித்திருந்தனர். தாத்தா கிட்னி பாதிக்கப்பட்டவர் என்பதால் அவரை ICRC அமைப்பினர் வெளியே கூட்டிச்செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார் அங்கிருந்த தற்காலிக வைத்திய கூடாரத்தில் பணியாற்றிவந்த டாக்டர் வரதராஜா.[39]*

*தாத்தா, கதிர்காமு மாணிக்கராஜா, வவுனியாவிலுள்ள செட்டிக்குளம் முகாமுக்கு கொண்டுசெல்லப்பட்டார். பின்னர் அங்கிருந்து விடுவிக்கப்பட்டு, வவுனியா அருகே வேப்பங்குளத்தில் உள்ள தனது மனைவியின் சகோதரி வீட்டில் சென்று தங்கிக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தார். மாணிக்கராஜா சிவபாக்கியம், சோபிகா, கிஷோர் ஆகியோர் புதுமாத்தளனிலேயே சிக்கிக்கொள்ள வேண்டிய துரதிருஷ்டம் ஏற்பட்டது. கடுமையான மோர்டார் தாக்குதல் நடந்துகொண்டிருக்க அவர்கள் எல்லாம் பதுங்குகுழிகளுக்கு ஒளிந்திருந்தனர். ஏப்ரல் ஒன்பதாம் தேதியன்று இவர்கள் மூவருமே காயம் அடைந்தனர். 12 வயதே ஆன கிஷோர், குண்டுத் துகள் உடலில் பாய்ந்து முக்கிய உறுப்பைப் பாதித்ததால் உயிரிழந்திருந்தார். காலில் காயம்பட்டிருந்த சோபிகாவும் பாட்டியும் உயிர் பிழைத்தனர். இவர்கள் ஒருவாராக யாழ்குடாப் பகுதிக்கு சென்றுவிட்டனர்.*

*கிஷோர் உயிரிழந்தபோது அவனது இறுதிச் சடங்குகளை தாங்களாகவே செய்ய வேண்டிய கஷ்டத்துக்கு அவனது பாட்டியும், இளம் சகோதரியும் ஆளாகியிருந்தனர். மேலும் சில நாட்கள் புதுமாத்தளனில் தங்கியிருந்த நிலையில், பாட்டியும் பேத்தியும் ஒன்றரை லட்ச ரூபாயை ஒரு படகுக்காரருக்கு கொடுத்து, வாவியைக் கடந்து யாழ்குடா பகுதியில் உள்ள சாவகச்சேரிக்கு செல்லும் ஒரு கும்பலோடு தாங்களும் சேர்ந்துகொண்டிருந்தனர். அவ்வாறாக சாவகச்சேரி சென்ற அவர்களை இராணுவத்தினர் பிடித்து கொடிகாமம் முகாமில் தடுத்துவைத்தனர்.[40]*

மாணிக்கராஜா சிவபாக்கியம் முகாமில் இருந்து வெளியேறி தனது கணவர் இருக்கும் இடம் செல்ல பின்னர் ஒருவாராக அவருக்கு அனுமதி கொடுத்தார்கள் என்றாலும், தனது 13 வயது பேத்தியை அவர் தன்னுடன் கூட்டிச் செல்ல அனுமதி

கிடைக்கவில்லை. காயம்பட்ட தனது பேத்தியை தனியே விட்டுச் செல்ல மனம் வராததால் பாட்டியும் கொடிகாமம் முகாமிலேயே இருந்துவிட்டார்.[41]

பிரிந்த இந்த குடும்பம் ஒன்று சேர்க்கப்பட வேண்டும் என்று கோரி அன்னபாக்கியம் சிதம்பரப்பிள்ளை அடிப்படை உரிமைகள் மனு ஒன்றை நீதிமன்றத்தில் தொடுத்திருந்தார். முகாமில் உள்ள அக்குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் வெளியேவந்து உறவினர் வீடுகளில் தங்க அம்மனுவில் அனுமதி கோரப்பட்டிருந்தது. குறிப்பாக சோபிகாவை மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக முகாமிலிருந்து வெளியில் விட வேண்டும் என்று அதில் அனுமதி கேட்கப்பட்டிருந்தது. யதேச்சதிகாரமாக தடுத்துவைக்கப்படுவதற்கு எதிரான உரிமை, இலங்கையில் சுதந்திரமாக நடமாடுவதற்குரிய உரிமை போன்றவற்றை மீறுவதாக இக்குடும்பத்தினர் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளது அமைந்திருப்பதாக அந்த மனுவில் வாதிடப்பட்டிருந்தது. இக்குடும்ப உறுப்பினர்கள் தடுத்துவைக்கப்படுவதற்கு பொறுப்பானவர்கள் என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை அதிகாரிகளை இம்மனு பிரதிவாதிகளாகக் கொண்டுள்ளது. உள்ளூர் அதிகாரிகள் பலர், வவுனியாவில் இடம்பெயர்ந்த மக்களுக்கான ஒருங்கிணைப்பு அதிகாரியாகவுள்ள இராணுவ கமாண்டர், யாழ்ப்பான இராணுவ கமாண்டர், பொலிஸ்மா அதிபர், சட்ட மா அதிபர் போன்றோர் இம்மனுவில் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டிருந்தனர்.

ஜூன் மாதம் பிற்பகுதியில், 13 வயது சுரேந்திரநாதன் சோபிகா, வவுனியாவில் முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தனது பெற்றோருடன் இணைந்தார். அவர் தனது பெற்றோர் இருக்கும் முகாமுக்கு மாற்றப்பட வேண்டும் என்று இலங்கையின் உயர் நீதிமன்றம் ஜூன் 17ஆம் தேதி உத்தரவிட்டிருந்தது. ஒரு குடும்பம் என்பது ஒரு சமூகத்தின் அடிப்படையான பிரிவு என்பதை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது என்று அத்தீர்ப்பில் நீதிமன்றம் குறிப்பிட்டிருந்தது. சோபிகாவுக்கு விசேட மருத்துவப் பராமரிப்பும் அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.[42] ஜீன் 24ஆம் தேதியன்று உயர் நீதிமன்றம் கொடுத்த உத்தரவுக்கு அமைய ஜூன் 28ஆம் தேதியன்று, சோபிகா வவுனியா அரசினர் மருத்துவமனைக்கு, அந்நகர இராணுவ கமாண்டரால் மருத்துவ பரிசோதனைகளுக்காக அழைத்துவரப்பட்டிருந்தார். ஆனால் சோபிகாவுக்கு எக்ஸ் ரே எடுக்கப்பட்டிருக்கவில்லை, அவரை வைத்திய நிபுணர் பரிசோதித்திர்க்கவில்லை என்று ஜூலை 10ஆம் தேதி சோபிகாவின் சட்டத்தரணி நீதிமன்றத்தில் முறையட்டதை அடுத்து, அநுராதபுரத்திலுள்ள மருத்துவ கண்காணிப்பு அதிகாரி சோபிகாவை பரிசோதித்துவிட்டு அவரது நிலை குறித்து நீதிமன்றத்துக்கு தகவல் வழங்க வேண்டுமென நீதிமன்றம் ஜூலை 10 அன்றே உத்தரவிட்டிருந்தது. சோபிகா மருத்துவ சிகிச்சைக்காக அநுராதபுரத்து பொதுமருத்துவமனையில் உடனடியாக

அனுமதிக்கப்பட வேண்டும் என அரச படையினரின் வன்னித் தலைமையகத்தின் கமாண்டருக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.[43]

இடம்பெயர்ந்தவர்களைத் தடுத்துவைக்கின்ற அரசாங்க நடவடிக்கைக்கு எதிராக இரண்டாவது வழக்கை இலங்கையின் மாற்றுக் கொள்கைகளுக்கான மையமும் (CPA) மற்றும் அதன் செயல் இயக்குநர் பாக்கியசோதி சரவணமுத்துவும் தொடுத்திருந்தனர்.. பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகளும், இடம்பெயர்ந்த மக்களை தடுத்துவைப்பது என்று முடிவு செய்து அந்த கொள்கையை நிர்வகித்துவருவதற்கு பொறுப்பானவர்கள் என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பிற அரசு நிறுவனங்களும் இம்மனுவில் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டிருந்தனர்.[44] சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற உரிமை, சட்டத்தின் பாதுகாப்பு அனைவருக்கும் சமமாக கிடைக்கும் என்ற உரிமை, யதேச்சதிகாரமாக கைதுசெய்யப்படுவதற்கும் தடுத்துவைக்கப்படுவதற்கும் எதிரான உரிமை, சட்டத்துக்கு உட்பட்ட ஒரு தொழிலில், வர்த்தகத்தில், வியாபாரத்தில் அல்லது வேலையில் ஈடுபடுவதற்கான சுதந்திரம், நடமாட்ட சுதந்திரம், வதிவிடத்தை தேர்வுசெய்துகொள்ளும் உரிமை போன்ற உரிமைகளை மக்களை தடுத்துவைக்கும் அரசாங்கக் கொள்கையின் விளைவாக இடம்பெயர்ந்த மக்கள் பறிகொடுக்க நேர்ந்துள்ளதாக CPA வாதிட்டிருந்தது. இடம்பெயர்ந்த மக்களுக்கும் நடமாட்ட சுதந்திரம் உரிமை இருப்பது என்று வாதிடுவதில், சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச ஒப்பந்தம், இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான ஐ.நா.வின் வழிகாட்டு கொள்கைகள் ஆகியவற்றை அவர்கள் மேற்கோள் காட்டியிருந்தனர்.

- 2009 ஜூன் 12 அன்று தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கின் விசாரணையில் தாமதங்கள் ஏற்பட்டுவருகின்றன. ஜூன் 18ஆம் தேதியன்று உயர் நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணைக்கு வந்தபோது, துணை சொலிசிட்டர் ஜெனரல் சஞ்செய் ராஜரத்னம் வழக்கை ஒத்திப்போடச்சொல்லிக் கோரியதாக தெரிவிக்கப்படுகிறது. சட்டமா அதிபரிடம் இருந்து விபரம் பெறுவதற்கு தனக்கு சற்றுக் கூடுதல் அவகாசம் வேண்டும் என அவர் தெரிவித்ததாகச் சொல்லப்படுகிறது. இந்த மனு தொடர்பாக துணை சொலிசிட்டர் ஜெனரல் தமது பதிலை இரண்டு வாரங்களுக்குள் வழங்க வேண்டும் என்று ஜூலை 10ஆம் தேதியன்று உத்தரவிட்ட நீதிமன்றம், ஆகஸ்ட் 6ஆம் தேதிக்கு விசாரணையை ஒத்திப்போட்டிருந்தது. சி.பி.ஏ. தொடுத்த மனுவுக்கான தமது ஆட்சேபனைகளை சட்டமா அதிபர் அலுவலகம் ஜூலை 28ஆம் தேதியன்று தாக்கல் செய்ததாக தெரிவிக்கப்படுகிறது. வட இலங்கையில் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் அவசரகால விதிமுறைகளின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருக்கவில்லை என்றும் CPA வழக்கு தொடுக்க சட்டபூர்வ முகாந்திரம் இல்லை என்றும் அந்த ஆட்சேபனையில் வாதிடப்பட்டிருந்தது. இடம்பெயர்ந்த மக்களில் சுமார் 8,000

பேர் விடுதலைப்புலி உறுப்பினர்கள் என்றும் சட்டமா அதிபர் குறிப்பிட்டிருந்தார்.[45] இலங்கையின் இடம்பெயர்ந்த மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளையும், மனித உரிமை வழக்குகளைப் பொறுத்தவரை தாமதப்படும் உத்திகளை சட்டமா அதிபரின் அலுவலகம் கடந்த காலங்களில் எந்த அளவுக்கு பயன்படுத்தி வந்துள்ளது என்றும் பார்க்கும்போது இந்த வழக்கின் விசாரணை ஒத்திப்போடப்பட்டுள்ளது கவலையளிக்கிறது. "இலங்கை: இருபது ஆண்டுகால ஏமாற்று வேலை. இலங்கையின் விசாரணை ஆணையங்கள்" என்ற சர்வதேச பொதுமன்னிப்பு சபையின் அண்மைய அறிக்கை வழக்குகளை தாமதப்படுத்துவதில் சட்ட மா அதிபர் அலுவலகத்தின் பங்கு குறித்த சரித்திரத்தை ஆவணப்படுத்தியுள்ளது.[46]

- **பிரிந்த குடும்பம் மீண்டும் ஒன்றுசேர்வது தடுக்கப்படல்**

கொழும்பிலுள்ள ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகம் கடந்த ஜூலையில் தமது மனிதாபிமான உதவிப் பணிகள் குறித்து விபரம் வழங்குகையில், தாங்கள் கணக்கெடுத்துள்ள இடம்பெயர்ந்த மக்களைப் பொறுத்தவரையும் தங்களைப் பொறுத்தவரையும், பிரிந்த குடும்பங்கள் மீண்டும் ஒன்றிணையும் விஷயத்துக்கு அதிக முன்னுரிமை தரப்படுவதாக குறிப்பிட்டுள்ளது.[47] ஜூன் மாத இறுதியில் என்று பார்க்கும்போது, சுமார் 5,000 பேர் தத்தமது குடும்பத்துடன் மீண்டும் இணைந்துள்ளனர் என்று இலங்கை அரசாங்கம் தகவல் வழங்கியிருந்தது. இந்த எண்ணிக்கை எத்தனைக் குடும்பங்களைக் குறிக்கிறது என்பதும், உறவினர்களோடு சென்று வாழ்வதற்காக முகாமிலிருந்து விடுவிக்கப்பட்ட பெரும்பாலும் முதியவர்களாக அமைந்திருப்பவர்களின் எண்ணிக்கையும் இத்தொகையில் சேர்க்கபட்டுள்ளதா என்பது தெளிவில்லாமல் இருந்துவருகிறது.

முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டவர்கள் சிலர் தமது குடும்பத்தினர் எங்கிருக்கிறார்கள் என்ற விபரத்தினை மெனிக் பார்ம் முகாமில் பல்வேறு பிரிவுகளுக்கிடையில் பரிமாறப்படும் உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் மூலமாக கேள்விப்பட்டுள்ளனர். ஒரு முகாமுக்குள்ளேயே அதன் ஒரு உட்பிரிவிலிருந்து மற்றொரு உட்பிரிவுக்கு மக்கள் சென்றுவருவதை தடுக்க இராணுவத்தினர் மேற்கொண்ட முயற்சிக்கு எதிராக ஜூன் இறுதிப் பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் போராட்டங்களை நடத்தியிருந்தனர். அதன் பின்னர், ஒரு முகாம் வளாகத்துக்குள் இருக்கும் பல்வேறு உட்பிரிவுகளுக்கு இடையில் மக்கள் நாமாடுவது என்பதை உத்தியோகபூர்வமாக அனுமதிப்பதற்கு இலங்கை அதிகாரிகள் இணங்கியிருந்தனர். வவுனியா முகாம்களில் உள்ளவர்கள் இலங்கையின் வேறு பகுதிகளில் உள்ள தமது உறவினர்களுடன் சேர வேண்டுமென்றால் அதிலே அதிக சிக்கல்கள் ஏற்படுவதாக ஐ.நா. அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர். சொல்லப்போனால், குடும்ப உறவுகளுடன்

இணைவதற்காக வவுனியா முகாமிலிருந்து மன்னாருக்கு மாற்றப்பட்டிருப்பது இதுவரை 54 குடும்பங்கள் மட்டுமே.

புதிதாக இடம்பெயர்ந்த மக்களில் பெற்றோரிடம் இருந்து பிரிய நேர்ந்த சிறார்களாக 1,400 சிறார்களும், பெரியவர் எவரும் உடனில்லாதவர்களாக 49 சிறார்களும், அனாதைகளாக (யுத்தத்தின் இறுதிக் கட்டத்துக்கு முன்பிருந்தே அனாதை இல்லத்தின் ஓர் அங்கமாக வாழ்ந்து, அனாதை இல்ல குழுவுடன் சேர்ந்தே வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களாக) 366 சிறார்களும், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்த சிறுவர்களாக 350 பேரும் இருப்பதை ஜூலை மாத ஆரம்ப பகுதியில் யூனிசெஃப் அமைப்பினர் கண்டறிந்து தெரிவித்தனர். [48]

- **ஊழல் குற்றச்சாட்டுகள்**

இராணுவத்தினருக்கு லஞ்சம் கொடுத்து மக்கள் முகாம்களிலிருந்து வெளிவந்துள்ளனர். விடுதலைப் புலிகளோடு தொடர்புடையவர்கள் என்றாலும்கூட லஞ்சம் கொடுத்தால் முகாமிலிருந்து வெளியில் வந்துவிட முடியும் என்ற தகவல்கள் தொடர்ந்தும் வந்துகொண்டிருக்கின்றன. விடுதலைப் புலிகள் அமைப்போடு தொடர்புடையவர்கள் குறைந்தபட்சம் 15 பேராவது தலைக்கு 5,00,000 ரூபாய் கொடுத்து முகாமிலிருந்து வெளிவந்துள்ளனர் என்பதாக சர்வதேச பொதுமன்னிப்பு சபை அறிந்த ஒரு யாழ்ப்பாண வாசி ஒருவர் கூறுகிறார். இந்நபரின் மைத்துனர் வவுனியா முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார், "பெரிய ஆட்களெல்லாம் வெளியே போய்விடுகிறார்கள், எதற்கும் வழியில்லாத அப்பாவி ஏழை மக்களே உள்ளே கிடந்து துன்பப்படுகிறார்கள்" என்று அவர் எம்மிடம் தெரிவித்தார்.[49] துணை இராணுவப் படையினருக்கு லஞ்சம் கொடுத்து தமது உறவுகளை முகாமிலிருந்து வெளியே கொண்டுவந்த சம்பவங்களை லண்டனில் உள்ள இலங்கைத் தமிழர்கள் சிலர் 2009 ஜூலையில் எம்முடன் பகிர்ந்துகொண்டனர்.

- **துப்புரவும் சுகாதாரமும் இல்லை**

இடம்பெயர்ந்து வந்த மக்கள் பலர் நோய்வாய்ப்பட்டும், உளப்பாதிப்புகளுடனும், காயம்பட்டும், போஷாக்கின்றியுமே முகாம்களை வந்தடைந்தனர். 3 ஜூலை 2009 தேதியை வைத்துப் பார்க்கையில் இடம்பெயர்ந்தவர்கள் 4,329 பேர் மருத்துவமனைகளில் தொடர்ந்தும் தங்கிவருவதாக UNOCHA அமைப்பு தகவல் வழங்கியது. கடந்த ஜனவரியில் இருந்து 5,000 அறுவை சிகிச்சைகளைத் தாங்கள் செய்ததாகவும் அவற்றில் பெரும்பான்மையானவை யுத்தம் காரணமாக மக்களுக்கு ஏற்பட்டிருந்த காயங்களுக்காக நடந்தவை என்றும் வவுனியா மாவட்டத்தில் செயலாற்றும் எல்லைகளற்ற மருத்துவர்கள் (MSF) அமைப்பின் மருத்துவக் குழு

கூறியிருந்தது.[50]

ஜூன் மாத இறுதியில் வைத்துப் பார்க்கும்போது வவுனியாவின் முகாம்களில் இருக்கின்ற 30,000 முதல் 35,000 வரையினால சிறார்களில் 15 முதல் 20 சதவீதம் வரையிலானவர்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக மெனிக் பார்ம் முகாமில் பணிசெய்யும் சர்வோதய என்ற இலங்கை அரசு சாரா அமைப்பின் செயல் இயக்குநர் கலாநிதி. வின்ய அரியரத்ன கூறியிருந்தார். "அவர்களிலே பலர் நோய்களால் வாடிவந்தனர், ஒரு சிலர் காயங்களாலும் துன்புற்றுவந்தனர்" என்று அவர் குறிப்பிட்டார். சிறார்களும் சரி பெரியவர்களும் சரி யுத்தத்தின் இறுதிக்கட்டங்களில் ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்துக்கு (பெரும்பாலும் ஒரு பதுங்குகுழியிலிருந்து இன்னொரு பதுங்குகுழிக்கு) மாறி மாறி சென்றுகொண்டே இருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டு, அவர்களால் வேளாவேளைக்கு ஒழுங்காக சாப்பிட முடியாமல் போனதுதான், அவர்களிடையே இந்த அளவுக்கு போஷாக்கின்மை ஏற்படக் காரணம் என்று அவர் கூறியிருந்தார்.[51] யுத்தத்தின் கடைசி கட்டத்தில் உணவுப்பொருட்களின் வரத்தும் மிக மோசமாக குறைந்து போனது அதற்கு ஒரு பங்கில் காரணம் வடபகுதியில் உள்ள சிவிலியன்களுக்கான அவசர உணவு உதவிப் பொருட்கள் கொண்டு செல்லப்படும்போது அதிலே அரசாங்க நடைமுறைச் சிக்கல்கள் தடையாகவும் தாமதம் ஏற்படுத்துவதாகவும் இருந்ததைச் சொல்ல வேண்டும்.

சர்வதேச பொதுமன்னிப்பு சபைக்கு 2009 ஜூனில் வழங்கிய ஒரு பேட்டியில் 'குமார்' இந்த நிலைமைகளையும் விபரித்திருந்தார்.

*பல தடவைகள் ஆர்ட்டில்லரி தாக்குதல்களும், பல் குழல் பீரங்கித் தாக்குதல்களும் நடந்திருந்தன. பரவலாகவும், கடுமையாகவும், கண்மூடித்தனமாகவும் குண்டுகள் விழுந்துகொண்டிருந்தபடியால், மக்களால் ஓடி ஒளிவதற்குக்கூட நேரம் இருக்காது. முதலிலே வந்து விழுகின்ற குண்டுகளில் நிச்சயம் அப்பாவிப் பொதுமக்களும் சிக்குண்டு உயிரிழப்பார்கள் என்றுதான் சொல்லவேண்டும். குண்டுகள் விழுவதிலெ ஒரு இடைவெளி ஏற்படும்போதுதான், அது சிறிய இடைவெளிதான் என்றாலும் சரி, அந்த நேரத்தில்தான் மக்கள் பதறியடித்துக்கொண்டு பதுங்குகுழிகளை நோக்கி ஓடுவார்கள். மக்கள் மணிக்கணக்காக பங்கர்களுக்குள்ளேயே உட்கார்ந்திருக்கிற நிலைமை அடிக்கடி ஏற்படும்.*

அம்மாதிரியான நேரங்களில் உணவு சமைப்பது என்பதேகூட மிகவும் சிரமமாகிவிடும். *ஒருத்தர் அப்போதுதான் சமைக்க ஆரம்பிப்பார், ஆனால் ஷெல் அடிக்க ஆரம்பித்தவுடன் அவர் பங்கருக்குள் ஓடி ஒளிந்துகொள்வார். பின்னர் வெளியில் வந்து சமையல் செய்துகொண்டிருக்கும்போதே மீண்டும் ஷெல் அடி*

*துவங்கும் அவர் திரும்பவும் ஓடிச் சென்று பங்கருக்குள் ஒளிந்தாக வேண்டும். இதுவேதான் திரும்பத் திரும்ப நடந்துகொண்டிருக்கும்.*

*.... டிசம்பர் மாதம் ஜனவரி மாத ஆரம்பம் வரையிலே சாப்பாட்டுப் பொருட்கள் கிடைத்துக்கொண்டிருந்தன. பொருளாதாரத் தடைகள் சமயத்திலும் இழுத்துப் பிடித்து நாட்களைக் கடத்துகிற அனுபவம், பொருட்களைச் சேமிக்கிற அனுபவம் மக்களுக்கு இருந்தது. ஆனால் பிப்ரவரி மாதத்தோட கையிருப்புகள் எல்லாம் காலியாகி வந்தன. சாப்பாட்டுக்கு பெரிய நெருக்கடி ஏற்பட்டது. செஞ்சிலுவைச் சங்கக் கப்பல்கள்தான் உணவுப் பொருட்களை ஏற்றி வந்து கொண்டிருந்தன என்றாலும் அரசாங்கம் இடம்கொடுத்தால்தான் அவர்களால் அதனை வழங்க முடியும். கொடுக்கின்ற சாப்பாட்டுப் பொருட்கள் எல்லா நேரத்திலும் போதுமானதாக இருக்கும் என்று சொல்லமுடியாது. சிறிய அளவிலான அந்த உலர் உணவுப் பொருட்களை வாங்குவதற்கு மணிக்கணக்கிலே வரிசையில் காத்துக்கிடக்க வேண்டும். மக்கள் அரிசி ஆலைகளுக்குப் போய் ஏதாவது அரிசி மணிகள் கிடைக்கிறதா என்பதற்காக அங்கே கொட்டிக்கிடக்கிற உமியையெல்லாம் கிளறிப் பார்ப்பார்கள். அரிசி சாதம் சாப்பிட வழியில்லாத நிலை நாட்கணக்கில் மக்களுக்கு ஏற்பட்டுவந்தது.*[52]

வவுனியாவில் இடம்பெயர்ந்த மக்களில் 1137 சிறார்கள் மற்றும் 84 கர்ப்பவதிகள் இடையே இலங்கை மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தினால் மே 13ஆம் தேதிக்கும் மே 30ஆம் தேதிக்கும் இடைப்பட்ட காலத்தில் போஷாக்கு நிலை விரைவுப் பரிசோதனை நடத்தப்பட்டிருந்தது. அவர்களில் 46.9 சதவீதத்தினர், ஆரோக்கியமான எடைக்கும் குறைவான எடைகொண்டிருந்தனர். 35.6 சதவீதத்தினரிடம் போஷாக்கின்மையால் உடல் மெலிந்தும், 30 சதவீதம் பேர் போஷாக்கின்மையால் வளர்ச்சி குன்றியும் இருந்தது கண்டறியப்பட்டது. போஷாக்கின்மை மிக அதிக அளவில் காணப்பட்டது இரண்டாவது உட்பிரிவில்தான். அங்கே அரைவாசிக்கும் அதிகமான சிறார்கள் (57.7 சதவீதத்தினர்) எடை குன்றியிருந்தனர், மூன்றில் ஒரு பங்கினர் வளர்ச்சி குன்றியிருந்தனர். இந்த பரிசோதனை நடத்தப்படுவதற்கு இரண்டு வாரம் முன்பு சிறார்களிடையே நோய்கள் பரவியிருந்தன என்றும் பரிசோதனைகளின்போது தெரியவந்தது. வயிற்றோட்டம், சுவாசக் குழாய் தொற்று நோய்கள் போன்றவை இருந்துள்ளது. திடீரென்று வரும் சுவாசக்குழாய் தொற்று நோய்கள் முகாம்களின் எல்லா உட்பிரிவுகளிலுமே அதிக அளவில் (ஸோன் 2ல் 58.1 சதவீதவும், ஸோன் 4ல் 67.3 சதவீதமும்) இருந்தது சுற்றாய்வில் தெரியவந்தது. பரிசோதனை செய்யப்பட்ட சிறார்களில் மூன்றில் ஒரு பங்கு முதல் இரண்டில் ஒரு பங்கு வரையிலான சிறார்களுக்கு வயிற்றோட்டப் பிரச்சினைகள் இருந்தததது தெரியவந்தது.[53]

ஏப்ரல் மாத இறுதியில் இடம்பெயர்ந்த மக்கள் ஏராளமானோர் ஒரே நேரத்தில் முகாம்களை வந்தடைந்த நிலையில், வவுனியா முகாம்களில் இருந்த உதவிக் கட்டமைப்புகள் தேவைகளை சமாளிக்க முடியாமல் பயங்கரமாகத் திணறிப்போயின. உணவு மற்றும் குடிநீர் தட்டுப்பாடு தீவிரமடைந்தது. அதன் விளைவுகள் மிகவும் அபாயகரமாக இருந்தது. முகாமுக்குள்ளே உணவு விநியோகிப்பட்ட இடத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி சிறார்கள் இருவர் நசுங்கி உயிரிழந்த ஓர் சம்பவம் ஏப்ரல் கடைசியில் நடந்ததாக கூறப்படுகிறது. இரண்டு மாதங்கள் பின்னர், உணவு மற்றும் குடிநீர் விநியோகக் கட்டமைப்புகளில் முன்னேற்றங்கள் வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனாலும் பொருட்களின் தரம் குறித்தும், என்னென்ன சாப்பாடு கொடுக்கப்படுகிறது என்பது குறித்தும் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்ந்தும் முறையிட்டு வந்தனர். (மோசான தரத்திலுள்ள உணவுப் பொருட்களும் கெட்டுப்போன உணவும் தரப்பட்டன, போதிய காய்கறிகள் தரப்படவில்லை என்று முறையிடப்பட்டது.) போதிய அளவில் தண்ணீர் கிடைக்கவில்லை என்றும் (சில சமயங்களில் மிக மிகக் குறைவாகவே தண்ணீர் வழங்கப்பட்டது என்றும்) தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் இடைத்தங்கல் முகாம்களின் நிலைமைகள் ஒன்றுக்கொன்று கணிசமான அளவில் மாறுபட்டிருந்தன. மெனிக் பார்ம் முகாமைப் பொறுத்தவரை, ஒரு உட்பிரிவுக்கும் (ஸோன்) இன்னொரு உட்பிரிவுக்கும் இடையிலேயே மாறுதல்கள் இருந்தன. முகாம்களில் கழிப்பறை வசதி குறித்து வோர்ல்ட் விஷன் அமைப்பு கடந்த ஜூன் மாதம் கருத்து வெளியிடும்போது, "பெரிய முகாம்களில் கழிப்பறைகளின் எண்ணிக்கையில் மிகப்பெரிய பற்றாக்குறை இருக்கிறது, சர்வதேச தரத்தில் குறைந்தபட்ச எண்ணிக்கையை எட்டவேண்டும் என்றாலேகூட இந்த முகாம்களில் கூடுதலாக 11,500 கழிப்பறைகளாவது ஏற்படுத்தப்பட வேண்டும்" என்று கூறினார்.[54] இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி நீல் பூனே செய்தியாளர்களிடம் பேசுகையில், "சிலவேளை 100 பேர் வரையில் ஒரு கழிப்பறையைப் பயன்படுத்த வேண்டிய நிலை இருக்கிறது. இந்தக் கழிப்பறைகளில் அதிகபட்சம் 20 பேர்தான் பயன்படுத்த வேண்டும். தவிர நவம்பர் 2008ல் முகாம்கள் முதலில் ஆரம்பிக்கப்பட்டபோது கட்டப்பட்டிருந்த சில கழிப்பறைகளில் கழிவு நிரம்பி வழிகின்றது." என்று கூறியிருந்தார்.[55]

ஜூலை 7ஆம் தேதி அளவில் UNHCR அமைப்பின் பங்கேற்புடன் நடத்தப்பட்ட மதிப்பீடுகளில், முகாம்களில் அளவுக்கதிகமானோர் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவே இடம்பெயர்ந்த மக்கள் தெரிவித்துள்ளனர். மருத்துவ உதவி சேவைகள் போதிய அளவில் இல்லை என்பதும், பிரிந்துவிட்ட குடும்ப உறுப்பினர்கள் பற்றி போதிய தகவல் இல்லை என்பதும் தங்களுக்கு பெரிதும் கவலையளிப்பதாய் இருப்பதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.[56]

மெனிக் பார்மில் உட்பிரிவு 5 (ஸோன் 5) உருவாக்கப்பட்டதை அடுத்து கூட்ட நெரிசல் ஓரளவுக்கு குறைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. ஜூன் இறுதியில் இந்த உட்பிரிவில் 5,000 பேர் வரையிலானவர்கள் தங்கவைக்கபட்டிருந்தனர். ஆனாலும் பெரும்பான்மையான ஸோன்களில் இன்னும் அளவுக்கதிகமானோரே தங்கவைக்கப்பட்டுள்ளனர். ஜூலை 9ஆம் தேதி அளவில் பார்க்கையில் மிக அதிகம் பேர் தங்கியுள்ள உட்பிரிவான ஸோன் 2ல் கிட்டத்தட்ட 68,000 பேர் தங்கியிருந்தனர். UNHCR தரத்தில் பார்க்கையில், இவ்வெண்ணிக்கை அம்முகாமில் இயல்பாக தங்கக்கூடியர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் இரண்டு மடங்குக்கும் அதிகம்.[57] கடந்த மேமாதமும் ஜூனிலும் இருந்த நிலைமைகளோடு ஒப்பிடுகையில், மக்களுக்கு கிடைத்த சேவைகளில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. ஜூலை ஒன்பதாம் தேதி UNHCR வெளியிட்ட அறிக்கையில், 14 ஆரம்ப மருத்துவ உதவி மையங்களும், மேலதிக சிகிச்சை வழங்குவதற்கான 4 மருத்துவனைகளும், நடமாடும் மருத்துவ உதவிக் குழுக்களும் இடைத்தங்கல் முகாம்களில் செயல்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் உரிய நேரத்தில் மருத்துவ உதவி கிடைப்பது என்பது கவலையளிக்கும் விதத்திலேயே இருந்துவருவதாக இடம்பெயர்ந்த மக்கள் கூறுகின்றனர். எந்த உதவி வேண்டுமானாலும் நெடிய வரிசைகளில் காத்துக்கிடக்க வேண்டும் என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

26 ஜூன் 2009 அன்று இலங்கையின் சுகாதார அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது:

*மெனிக் பார்ம் தற்சமயம் ஐந்து உட்பிரிவுகளாக (ஸோன்களாக)/ நலவாழ்வு கிராமங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு உட்பிரிவிலும் ஒரு மேலதிக மருத்துவ சேவை மையம் இருக்கிறது. இது அந்த முகாமில் உள்ள 45,000 முதல் 50,000 வரையிலான மக்களின் மருத்துவ தேவைகளை கவனிக்கிறது. மருத்துவ சேவை மையம் ஒன்றில் 8 முதல் 10 மருத்துவர்களும், செவிலியர்களும், மருந்து கொடுப்பவர்களும், மருத்துவ பரிசோதனை ஊழியர்களும், பல் மருத்துவர்களும், தாதிமார்களும் பணியில் இருப்பார்கள். அங்கே ஒவ்வொரு நாளும் வருகின்ற புறநோயாளிகளை கவனிக்கும் பணியோடு, அவசர சிகிச்சைகளையும், சில விசேட மருத்துவ சேவைகளையும் இவர்கள் வழங்குவார்கள். பொதுமருத்துவம், அறுவை சிகிச்சை, கர்ப்பகால சேவைகள், குழந்தைகள் நல மருத்துவம், மனநலன் சேவைகள், பல் மருத்துவம் போன்றதுறைகளில் இவர்கள் சேவைகளை வழங்குவர். இப்படியான விசேட சேவைகள் சில ஏற்கனவே செயல்படத் துவங்கிவிட்டன. இந்த மருத்துவ சேவை மையங்களை நடத்துவதற்காக அடுத்த ஓரிரு வாரங்களில் பகுதியளவு நிரந்தரமான கட்டிடங்களை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.*

*ஐ.நா.மன்றம், வெளிநாடுகளுடைய அரசாங்கங்கள், மெனிக் பார்மில் பணி செய்ய அனுமதி பெற்றுள்ள தேசிய மற்றும் சர்வதேச அரசு சாரா அமைப்புகள் ஆகியவற்றின் உதவியுடன் இந்தப் பணி மேற்கொள்ளப்படும்.*

*இந்தக் மேலதிக மருத்துவ சேவை மையங்களைத் தாண்டி ஒவ்வொரு உட்பிரிவிலும் ஆரம்ப மருத்துவ உதவி மையங்களும் (PHC) செயல்பாட்டில் இருந்துவருகின்றன. இவை ஒவ்வொன்றும் 10,000 முதல் 15,000 பேர் வரையிலானவர்களின் தேவையை ஈடுகட்டுவதாக அமைந்துள்ளன. (மெனிக் பார்மில் மட்டும் இவ்வகையான 13 மையங்கள் செயல்பட்டுவருகின்றன.) முகாம்வாசிகள் அனைவருக்கும் மருத்துவ உதவி கிடைப்பதை முன்னிட்டு கூடுதலான மையங்கள் எல்லாப் பகுதிகளிலும் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்த மையம் ஒவ்வொன்றிலும் 2 முதல் 3 மருத்துவ அதிகாரிகளும், செவிலியர் ஒருவரும், மருந்து கொடுப்பவர் 1வரும் பணியில் இருப்பார்கள். புறநோயாளிகளுக்கான அடிப்படை ஆரம்ப மருத்துவ சேவைகள் இந்த மையங்களில் வழங்கப்படும். சுகாதாரக் கல்வி செயற்பாடுகளும் இங்கே நடக்கும். மருத்துவ ஆலோசனை வழங்குதல், ஊட்டச்சத்து மையங்கள், மகப்பேறு கால மற்றும் மகளிர் நல மருத்துவ சேவைகள் போன்றவையும் இந்த PHC மையங்களில் வழங்கப்படும்.*[58]

முகாம்களில் உள்ள மருத்துவ சேவை மையங்கள் தொடர்பில் சுகாதார அமைச்சகம் பின்வரும் அட்டவணையை வெளியிட்டது. இவற்றைத் தாண்டி முகாம்களில் இருந்து செட்டிக்குளம் மருத்துவமனைக்கும் அல்லது பிற பெரிய மருத்துவமனைகளுக்கும் விசேட சிகிச்சை மையங்களுக்கும் இடம்பெயர்ந்த மக்கள் ஆம்புலன்ஸ் வண்டிகள் மூலமாக அழைத்துச் செல்லப்பட்டுவருவதாகவும் அது குறிப்பிட்டிருந்தது.

- **நோய்ச் சிகிச்சை மருத்துவ சேவைகள்**

| உட்பிரிவு எண் | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|---|
| மக்கட் தொகை | 21,602 | 46,458 | 75,564 | 45,328 | 43,693 | 500 | 231,645 |
| மேலதிக மருத்துவ சிகிச்சை மையங்கள் | | இந்திய மருத்துவ மனை | 1 | உலக சுகாதார கழகம் WHO/ மெர்ஸி அமைப்பு Mercy +1 | 1 | 0 | 5 (செயல்பாட்டில் உள்ளவை) |
| ஆரம்ப மருத்துவ உதவி மையங்கள் | 1 | 2 | 4 | 3 | 2<br>1<br>சர்வோதயா | 1 | 14 (செயல்பாட்டில் உள்ளவை) |
| நடமாடும் மருத்துவ கூடங்கள் | இல்லை | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | |
| இரவு நேர மருத்துவ சேவைகள் | இல்லை | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | முக்கியமான இரவு நேர மருத்துவ உதவி கூடம் ஒருங்கிணைப்பு மையத்தில் உள்ளது |
| நடமாடும் மருத்துவ பரிசோதனை நிலையங்கள் | இல்லை | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | |
| ஆம்புலன்ஸ் வண்டிகள் | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | |
| சுகாதார மையத்தில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை 12,800 | | | | | 19(செயல்பாட்டில் உள்ளவை) | | |

இந்த முகாமில் தற்சமயம் உள்ளவர்க்ளின் எண்ணிக்கையையே அட்டவணை 1 காட்டுகிறது. தவிர இடம்பெயர்ந்த மக்களுக்கான சேவைகள் உத்தியோகபூர்வமாக

விரிவுபடுத்தப்பட்டதிலிருந்து கடந்த ஒரு மாதத்தில் சுகாதார அமைச்சினால் ஏற்படுத்தப்பட்ட மருத்துவ சேவை வசதிகளை இந்த அட்டவணை காட்டுகிறது.

- **நேரில் கண்டவர் வாக்குமூலம் #2**

55 வயதாகும் தேவன், யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர். கடந்த 12 வருடங்களாக இவர் கிளிநொச்சியில் வாழ்ந்துவருகிறார். கிளிநொச்சி நகரம் இராணுவத்தினரால் கைப்பற்றப்படுவதற்கு சற்று முன்னர் டிசம்பர் - ஜனவரி காலப்பகுதியில் இவரும் இவரது குடும்பமும் (50 வயதுகொண்ட அவரது மனைவி சுந்தரி மற்றும் 14 வயதுகொண்ட ஓர் மகன்) முல்லைத்தீவு மாவட்டத்துக்கு இடம்பெயர்ந்தனர். 13 இடங்களுக்கு திரும்பத் திரும்ப இடம்பெயர நேர்ந்திருந்த நிலையில், தேவனுக்கு காலில் அடிபட்டது. முல்லைத்தீவு அருகிலுள்ள ரெட்டைவாய்க்கால் என்ற இடத்தில் இராணுவத்தினர் வீசிய ஆர்டில்லரி ஷெல் அடித்ததில் அவருக்கு காயம் ஏற்பட்டது. தேவனுக்கு மருத்துவ உதவி தேவைப்பட்டது ஆனாலும் இராணுவத்தினர் தொடர்ந்து முன்னேறி வந்துகொண்டிருக்க பல்வேறு இடங்களிலும் மோதல்கள் வெடித்துக்கொண்டிருந்த நிலையில் அவருக்கு மருத்துவ உதவி கிடைக்கவில்லை. 24 மார்ச் 2009 அன்று செஞ்சிலுவைச் சங்கக் கப்பலில் அவர் முல்லைத் தீவிலிருந்து புல்மோட்டை கொண்டுசெல்லப்பட்டிருந்தார். பின்னர் அவர் ஒரு அரசு பேருந்தில் வவுனியா கொண்டுவரப்பட்டிருந்தார். அடுத்த நாள் அவருக்கு அங்கே மருத்துவமனையில் சிகிச்சை வழங்கப்பட்டிருந்தது. பின்னர் அவர் அங்கிருந்து மன்னார் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டிருந்தார். அந்த மருத்துவமனையில் அவர் இரண்டு மாதங்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற்றதன் பின்னர் அவர் கால் குணமடைந்திருந்தது. இத்தனை காலமும் தனது குடும்பத்தார் பற்றி எதுவும் கேள்விப்படாமல் இருந்த அவருக்கு அண்மையில்தான் விபரம் கிடைத்திருந்தது.

தேவனின் மனைவியும் மகனும் ஓமந்தைச் சோதனைச் சாவடியைக் கடந்து சென்றிருந்தனர். 15 மே 2009 முதல் அவர்கள் ராமநாதன் முகாமில் (மெனிக் பார்ம் முகாம் வளாகத்தில் உள்ள இரண்டாவது ஸோனின் பெயர்) தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். தேவனால் இன்றளவும் அதிக தூரம் நடக்கமுடியவில்லை என்பதால் அவரால் முகாமுக்கு செல்லமுடியவில்லை. ஆனால் சுந்தரியின் சகோதரர் ராஜகோபால், சுந்தரியையும் அவர் மகனையும் பார்ப்பதற்காக முகாமுக்கு சென்றிருந்தார். முகாம் நிலவரம் தொடர்பில் அவர் விபரித்தவை பின்வருமாறு:

*முகாமிலே ஒரு கூடாரத்தில் பத்து பேர் என்று மக்கள் தங்கியிருக்கிறார்க்ள். ஒரு முகாமில் 50,000 முதல் 60,000 பேர் வரையில் இருக்கிறார்கள். ஏ9 நெடுஞ்சாலையிலிருந்து 1.5 கிலோமீட்டர் தள்ளி - அதாவது அரை மணி நேரம்*

*நடந்துபோக வேண்டிய தூரத்தில் - கரடிபொக்கு என்ற இடத்தில் இந்த முகாம் அமைந்துள்ளது. முகாமில் இருந்து எவரும் வெளியே வர முடியாது. முகாமிலிருந்து தகவல் எதனையும் அவர்கள் வெளியில் அனுப்ப முடியாது. முகாமைச் சுற்றிலும் முட்கம்பி வேலிகள் போடப்பட்டுள்ளன. சிவில் அதிகாரிகள் உதவியுடன் இராணுவத்தினர் இந்த முகாமை நடத்திவருகிறார்கள்.*

*இந்த முகாமில் கடுமையான தண்ணீர்ப் பிரச்சினை நிலவுகிறது. ஒருவருக்கு ஒரு நாளில் 30 லிட்டர் தண்ணீர் கொடுக்கப்படுகிறது. ஒரு நெடிய வரிசையில் நின்று அந்த நீரை பெற்றுக்கொள்ள வேண்டும். அந்த சிறிதளவு நீரில்தான் அவர்கள் தமது தேவைகள் அனைத்தையும் முடித்துக்கொள்ள வேண்டும். குளிப்பது, துப்புரவு செய்துகொள்வது, துணிதுவைப்பது எல்லாவற்றையும் அந்த நீரைக்கொண்டே செய்துவிட வேண்டும். கழிப்பறைகள் எல்லாம் மிகவும் மோசமாக் இருந்தன. காலையிலிருந்தே அங்கெல்லாம் நெடிய வரிசைகளில் மக்கள் நின்றுகொண்டு காத்துக்கிடப்பார்கள்.*

*முகாமுக்குள் வசிப்பது என்பது முதியவர்களுக்கும், சிறார்களுக்கும், கர்ப்பிணிப் பெண்களுக்கும் பெருங்கஷ்டமாக இருக்கிறது. முகாமுக்குள் மரங்களோ பசுமையோ இல்லை. தற்காலிக கூடாரத்துக்கு வெளியே எல்லோரும் மொட்டை வெயிலில் வியர்த்துக்கொடிக்கொண்டு நிற்க வேண்டியதுதான். இந்த கூடாரங்ளும் இப்போது கிழிந்து கந்தலாகி வருகின்றன. முகாமில் உள்ளவர்களுக்கு அன்றாட வாழ்க்கை என்பதே கூடாரங்களுக்குள்ளும் வெளியில் உணவுக்காகவும், கழிப்பறைக்காகவும் உடல் நோக மனம் நோக காத்து நிற்பதுதான் என்றாகிவிட்டது. ஒழுங்கான மருத்துவ வசதிகள் முகாம்களில் இல்லை. உடல்நிலை பாதிக்கப்பட்டவர்கள் வவுனியாவுக்கு கொண்டுசெல்லப்பட வேண்டும். சிவில் நிர்வாகிகள்தான் உணவை விநியோகித்துவருகிறார்கள். ஆனால் வரிசை மிகவும் பெரியதாக இருக்கும்போது உணவுப் பொருட்கள் பாதியிலேயே தீர்ந்துவிடும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் முகாமுக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. முகாமிலிருந்து விடுவிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும் மிகவும் குறைவாக உள்ளது. முதியவர்கள் முகாமிலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்று ஜூன் 15ஆம் தேதி வாக்கில் அறிவிப்பு வந்தது. ஆனால் தொடர்ந்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.*[59]

தேவனின் குடும்பத்தார் ஒரு கூடாரத்திலே வேறு 8 பேரோடு தங்கியிருப்பது ராஜகோபாலுக்கு தெரியவந்தது. உடன் தங்கியிருந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் அவர்களுக்கு தெரிந்தவர்கள்தான். சுந்தரி மகனுடன் படித்தவர்கள் போன்றவர்கள் அக்கூடாரத்தில் இருந்தனர். உணவுக்கும் குடிநீருக்கும் தட்டுப்பாடு ஏற்படும் சமயத்தில் பொதுவாக ஒருவருக்கொருவர்

உதவிக்கொள்கிறார்கள் என்று ராஜகோபால் தெரிவித்தார். உறவினர்களும் நண்பர்கள் போன்றோர் முகாம் வாசலில் அவர்களை ஐந்து நிமிடம் அளவுக்கு நின்று பார்த்து விட்டுப் போக அனுமதிக்கப்படுவதாக ராஜகோபால் கூறினார். பெயர் கூவி அழைக்கப்படும் முகாமுக்குள் இருக்கும் நபர் நுழைவு வாயில் அருகே சென்று உறவினர்கள் வருவார்களா என்பதற்காக முடிவின்றி காத்துநிற்க வேண்டிய நிலைமை காணப்படுவதாக அவர் கூறுகிறார்.

- **வெளியுலகத்துடன் தகவல் பரிமாற்றம் தடுக்கப்படல்**

சர்வதேச பொதுமன்னிப்பு சபையினர் தொடர்புகொண்டு விசாரித்தவர்கள் அனைவருமே முகாமுக்குள் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக தாங்கள் நம்பும் தமது குடும்ப உறுப்பினர்கள் எங்கிருக்கிறார்கள் என்று அறிந்துகொள்வதிலும் அவர்களுடன் பேசுவதிலும் சிரமங்கள் உள்ளதாகத் தெரிவிக்கின்றனர். ஆனாலும் இந்த சூழலில் முன்னேற்றம் ஏற்பட்டுவருகிறது. வன்னியிலிருந்து இடம்பெயர்ந்துவந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள முகாம்கள் பெரும்பான்மையானவற்றில் இப்போது பார்வையாளர் மையங்கள் என்ற இடம் இருக்கிறது. அங்கே முகாம்வாஅசிகள் தமது நண்பர்களையும் உறவினர்களையும் சந்திக்கலாம் என்று ஐ.நா.மன்றம் தெரிவித்துள்ளது. ஆனாலும் பார்வையாளர்கள் இவ்வளவு நேரம்தான் சந்திக்கலாம் என்பது போல கடும் நிபந்தனைகள் விதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. புல்மோட்டையில் இருந்து இடம்பெயர்ந்து தற்சமயம் முகாமில் இருந்துவரும் ஒரு சிலருடைய உறவினர்கள் கடந்த ஜூலையில் பிபிசி ஊடகத்தாரிடம் பேசுகையில், முகாமுக்குள் இருக்கும் தமது உறவினர்களை சந்திக்க அனுமதி மறுக்கப்படுவதாகக் கூறியிருந்தனர்.[60] அதேநேரம், பொது தொலைபேசி வசதியும், அஞ்சல் வசதியும் சில முகாம்களில் இருப்பதாக தெரிவிக்கபடுகிறது.[61]

தொண்டு நிறுவன ஊழியர்கள் தம்முடன் செல்லிட தொலைபேசிகளை முகாமுக்குள் கொண்டுவருவதை முகாம் அதிகாரிகள் தடுக்கின்றனர்; முகாம்வாசிகள் பயன்படுத்துவதற்காக தொலைபேசிகளை கொடுத்து உதவுவதையும் அவர்கள் தடுக்கிறார்கள் என்று தொண்டு நிறுவன ஊழியர்கள் சிலர் கூறியிருந்தனர். ஆனால் மெனிக் பார்ம் ஸோன் 2ல் பார்வையாளர்கள் செல்லிட தொலைபேசிகளை தம்முடன் கொண்டுவந்து, தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களிடம் கொடுத்து அவர்கள் வெளியிடங்களில் உள்ள தமது உறவுகளை தொடர்புகொண்டு பேசச் செய்வதாக ராஜகோபால் தெரிவித்துள்ளார். அவர் இது பின்வருமாறு குறிப்பிட்டார்:

முகாமுக்கு வருகின்ற பார்வையாளர்கள் செல்லிட தொலைபேசிகளை கொண்டுவருவது என்பது வழமையான ஓர் விஷயமாகத்தான் தெரிந்தது. அவர்கள்

கொண்டுவரும் தொலைபேசிகள் மூலமாக முகாம்வாசிகள் யாழ்ப்பாணத்திலோ வவுனியாவிலோ அல்லது வெளிநாடுகளிலோ வாழும் தமது உறவுகளுடன் பேசுகின்றனர். தேவன் தனது மனைவி மகனோடு பேசியது இந்த மாதிரியகத்தான். அதேபோல் தாங்கள் அடுத்து எப்போது பார்க்க வருவோம் என்பதையும் உறவுக்காரகள் முகாம்வாசிகளிடம் முன்கூட்டியே சொல்லிவிடுவது என்பதும் ஒரு இயல்பான வழக்கமாகத்தான் இருந்தது. அப்படிச் சொல்லிவிடுவதால் முகாம்வாசிகள் நெடுநேரம் காத்து நிற்க வேண்டிய அவசியம் இல்லாமல் செய்துவிடுகிறார்க்ள்.

முகாம்களில் தமிழ் அதிகாரிகள் இருக்கின்றனர். முகாமின் நிர்வாகி என கிளிநொச்சி கல்வித் திணைக்கள முன்னாள் அதிகாரி ஒருவரைச் பெயருக்குச் சொல்கிறார்கள்; ஆனால் யதார்தத்தில் முகாமை நிர்வகிப்பது இராணுவத்தினர்தான் என்று ராஜகோபால் சொல்கிறார். "முகாமிலே அரசு அதிகாரிகள் பேச்சு செல்லாது. இராணுவத்தினரிடம்தான் நிஜமான அதிகாரம் உள்ளது" என்கிறார் அவர்.

- **முகாம்கள் இராணுவமயமாக இருந்துவருதல்**

சில இடைத்தங்கல் முகாம்களிலே இராணுவத்தினர் ஆற்றிவந்த பங்கு குறைக்கப்பட்டதை கொழும்பிலுள்ள ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி/ மனிதாபிமானப் பணிகள் ஒருங்கிணைப்பாளர் அலுவலகம் கடந்த ஜூலையில் வரவேற்றிருந்தது.[62] ஆனால் முகாம்கள் நிர்வகிக்கப்படுவதிலும், மீள்குடியேற்ற திட்டங்களிலும், முடிவெடுப்பதிலும் கொள்கைகள் வகுப்பதிலும் பாதுகாப்பு அமைச்சகமும் ஆயுதப் படைகளுமே தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திவருகின்றனர். வடமாகாணத்தில் மீள்குடியேற்றம், மீள்கட்டமைப்பு, அபிவிருத்தி பணிகள் போன்றவற்றை திட்டமிடுவதற்காகவும் ஒருங்கிணைப்பதற்காகவும் கடந்த மே மாதத்தின் மையப் பகுதியில் 19 பேர் கொண்ட செயற்குழுவை ஜனாதிபதி அமைத்திருந்தார். இந்த செயற்குழுவில் அதிக அளவில் இடம்பெற்றிருந்தது பாதுகாப்புபடையின் உயர்மட்ட அதிகாரிகள்தான். பாதுகாப்பு செயலர் கோட்டாபய ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ, தேச நிர்மாண அமைச்சர் ஆகியோர் இந்த செயற்குழுவின் தலைவர்களாக அமைந்துள்ளனர்.[63]

வடக்கிலே முன்பு யுத்தப் பிரதேசங்களாக இருந்த இடங்களில் அரசு சாரா நிறுவனங்களின் செயல்பாடுகளுக்கு ஒப்புதல் அளிப்பதும் நிராகரிப்பதும் இந்த செயற்குழுதான்.

இந்த செயற்குழுவின் உறுப்பினரான மேஜர் ஜெனரல் சி.ஏ. சந்திரஸ்ரீ வட மாகாண ஆளுநராக ஜூலை12ஆம் தேதியன்று அறிவிக்கப்பட்டார். சிவில் அதிகாரியான டிக்ஸன் டெலா மாற்றப்பட்டு இராணுவத்தைச் சேர்ந்த சந்திரஸ்ரீ ஆளுநரானர்.

வடக்கிலே இடம்பெயர்ந்த மக்கள் விவகாரங்களுக்கான உயர் அதிகாரியும் மேஜர் ஜெனரல் சந்திரஸ்ரீதான்.

முகாம்களின் உட்பிரிவுகளுக்கிடையில் உள்ள முட்கம்பி வேலியை ஒட்டி ஓரிடத்தில் தற்காலிக படிக்கட்டுகளை அமைத்து ஒரு பிரிவிலிருந்து மற்ற பிரிவுக்குச் செல்ல முற்பட்ட இடம்பெயர்ந்த மக்களை இராணுவத்தினர் தடுத்து நிறுத்தியதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஜூன் 28ஆம் தேதி மெனிக் பார் ஸோன் 2ல் தங்கியிருந்தவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப்படுத்தும் முயற்சியில் இரண்டு முகாம்வாசிகளை இராணுவத்தினர் கொன்றுவிட்டனர் என்று தமிழ்நெட் இணையதளம் செய்தி வெளியிட்டிருந்தது. ஆனால் எவரும் அடிபடவில்லை என்று ஐ.நா.வின் மனிதாபிமானப் பணிகளுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகம் UN OCHA தகவல் தெரிவித்திருந்தது. ஆனால் படையினர் வானை நோக்கி சுட்டிருந்தார்கள் என்று சர்வதேச பொதுமன்னிப்பு சபை விசாரித்த வகையில் தெரியவந்துள்ளது. மற்ற ஸோன்களில் உள்ள உறவினர்களை சந்திப்பதற்கான மாற்று ஏற்பாடுகள் பின்னர் செய்யப்பட்டிருந்ததாக UN OCHA அலுவலகம் கூறியிருந்தது. முகாமில் உள்ள பொலிசாரிடம் பெயர் பதிந்துகொள்வது என்பதும் இந்த ஏற்பாடுகளில் ஒன்று.[64]

முகாம்களுக்குள் மக்கள் கைதுசெய்யப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. ஆட்கள் பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்ட சம்பவங்களும் நடந்துள்ளதாக இலங்கையின் மனித உரிமை ஆர்வலர்கள் குற்றம்சாட்டுகின்றனர். [65] விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களும், அரசாங்கத்துடன் அரசியலில் அணிசேர்ந்துவிட்ட பிற ஆயுதக் குழுக்களின் உறுபினர்களும் இடம்பெயர்ந்த மக்களுக்கான முகாம்களில் இருக்கிறார்கள் என்று 2009 மார்ச் மாதம் தொட்டே இலங்கையின் மனித உரிமை அமைப்புகள் கூறிவருகின்றன. முகாமுக்குள் இருக்கின்ற விடுதலைப் புலி சந்தேகநபர்களை அடையாளம் காட்டுவதற்காக அரசாங்கத்தினால் இவர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள் என்பதை இந்த உறுதிசெய்யப்படாத தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன. அப்படி அவர்கள் அடையாளம் காட்டும்போது சந்தேக நபர்கள் கைதுசெய்யப்படவும் கடத்தப்படவும் காணாமல்போகவும் செய்கிறார்கள்.[66] விடுதலைப் புலிகள் இயக்கத்தில் முன்பு இருந்தவர்களுக்கான விசேட தடுப்புக்காவல் முகாம்களிலும் இப்படி அடையாளம் காட்டுபவர்கள் இருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருந்ததாக குற்றம்சாட்டப்பட்டதன் விளைவாக சிலர் கைதான சம்பவங்களை இலங்கையின் அதிகாரிகள் ஒப்புக்கொண்டு அவ்விஷயம் ஊடகங்களிலும் வெளிவந்தது. ஆனால் இவ்வாறாக காணாமல்போன ஏனையோரின் கதி என்னானது என்பது தெரியவரவில்லை. இடம்பெயர்ந்த மக்களை சுயாதீனமாக சந்திக்க அனுமதி

கிடையாது, முகாம்வாசிகளுடன் தனிப்பட்ட முறையில் பேச வழியில்லை, அவர்களுடன் தனியாக நேரடிப் பேட்டிகள் எடுக்க அனுமதியில்லை என்ற நிலையில், இடம்பெயர்ந்த மக்களின் நலன்களை பாதுகாப்பதற்குரிய தமது கடமைகளை மனிதாபிமான உதவி நிறுவனங்கள் நிறைவேற்றுவது என்பது சாத்தியமற்றதாகி விடுகிறது. எந்த அளவில் மனித உரிமை மீறல்கள் நடக்கின்றன என்று கண்டறிவதற்கும் வழியில்லாது போய்விடுகிறது.

கடந்த காலங்களில் இலங்கை அரசாங்கம் கடைப்பிடித்துவந்த விசாரணை நடைமுறைகள் சர்வதேச மனித உரிமை தர அளவுகளுக்கு உட்பட்டவையாய் அமைந்திருக்கவில்லை. உள்நாட்டளவில் இடம்பெயர நேர்ந்தவர்கள் தொடர்பான ஐ.நா. தலைமைச் செயலரின் விசேட தூதர், 14 டிசம்பர் 2007 முதல் 21 டிசம்பர் 2007 வரை இலங்கையில் பயணம் மேற்கொண்டுவிட்டு, பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு விபரம் வழங்குகையில், இடம்பெயர்ந்த மக்களை அரசாங்கம் விசாரிப்பதில் கையாளப்படும் நடைமுறைகளில் மனித உரிமைகள் பாதிக்கப்படுவதாக கவலை வெளியிட்டிருந்தார். இலங்கையின் கிழக்கில் நடந்துவந்த ஓர் விசாரணை நடைமுறையை அவர் உதாரணமாகக் காட்டியிருந்தார். அவர் அந்த நடைமுறை பற்றிக் கூறுகையில், "அடையாளும் காண்பதற்கான விசாரணை என்பது பொதுவாக முகமூடி அணிந்தவர்கள் முன்னிலையில் இராணுவத்தினரால் நடத்தப்படும். கைது நடவடிக்கை தடுத்துவைத்தல் நடவடிக்கை போன்றவற்றின் போது கடைப்பிடிக்க வேண்டிய சட்ட நடைமுறைகளை இராணுவத்தினர் தொடர்ந்தும் மீறுவருவதன் காரணமாய் அவர்கள் மீது நம்பிக்கை ஏற்படுவதில்லை. ஒருவர் தடுத்துவைக்கப்படுவதற்கான காரணம் அவர் எங்கு தடுத்துவைக்கப்படுகிறார் என்ற விபரம் ஆகியவை அவரது உறவினர்களிடம் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்ற விதி கடைப்பிடிக்கப்படுவதே இல்லை. ஒரு பெண்ணுக்கு தன்னுடைய மகனோ அல்லது கணவனோ ஏன் கொண்டுசெல்லப்பட்டார், எங்கு கொண்டுசெல்லப்பட்டார், அவர் யாரோடு இருக்கிறார் என்பதுபோன்ற விபரங்கள் தெரியாதுபோனால், அவருடைய அச்சத்தை பயங்கரம் என்கிற அளவுக்கு கொண்டு சென்றுவிடும்." என்று குறிப்பிட்டுள்ளார். வலுக்கட்டாயமாக குடும்பங்கள் பிரித்துவைக்கப்படுவது என்பது அடையாளம் காணும் விசாரணை நடைமுறையின் ஓர் அங்கமாகிவிட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறான விசாரணைக்கு ஆளாக நேரிடும் பெண்கள், பால்சார்ந்த பாரபட்சங்களுக்கு ஆளாகும் ஆபத்து அதிகம் உள்ளது. வார்த்தைகளால் துன்புறுத்தப்படுவது, பாலியல் வல்லுறவுக்கு ஆளாவது உள்ளிட்ட பாலியல் வன்முறைகளை சந்திக்க நேர்வது, பிற வகையில் இழிவுபடுத்தப்படுவது போன்ற பிரச்சினைகளை பெண்கள் எதிர்கொள்கிறார்கள்.

அதிக எண்ணிக்கையிலானோர் பலவந்தமாக கடத்தப்பட்டும் காணாமல்போயும்

வந்துள்ளனர் என்பதற்கு 1980களில் இருந்தே இலங்கைக்கென ஒரு சரித்திரம் உண்டு, தவிர கைதுசெய்யப்படுபவர்கள் நிலைகுறித்து விபரம் சேகரிப்பதற்காகவும், கைதானவர்கள் தமது உறவினர்களைச் சந்திக்கவும், சட்டத்தரணி வைத்துக்கொள்ளவும், அல்லது தம்முடைய பிற நியாயமான நலனை பாதுகாத்துக்கொள்ளவும் இடம் இருக்கிறதா என்பதை உறுதி செய்வதற்கான சுயாதீன கண்காணிப்பு அமைப்பு எதுவும் இலங்கையில் இல்லை. இந்த பின்னணியில், விடுதலைப் புலி சந்தேகநபர்களாக கைது செய்யப்படுபவர்கள் தொடர்பில் பலவந்த ஆட்கடத்தல்கள், காணாமல் போகும் சம்பவங்கள், பிற மோசமான மனித உரிமை மீறல்கள் ஆகியவை நடக்கலாம் என்ற பெரிய கவலைகள் எழுந்துள்ளன.

விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் என்றோ ஆதரவாளர்கள் என்றோ அரசாங்கத்தினரால் சந்தேகப்படுகின்ற நபர்கள், சட்டத்துக்கு அப்பாற்பட்டு தண்டனை நிறைவேற்றப்படும் முறையில் கொல்லப்படுகின்ற கடத்தப்படுகின்ற, சித்ரவதை செய்யப்படுகின்ற அல்லது மனிதத்தன்மையற்ற வகையில் இழிவாக நடத்தப்படுகின்ற ஓர் பெரும் ஆபத்தை எதிர்கொண்டு வந்துள்ளனர் என்று முன்பு சர்வதேச பொதுமன்னிப்பு சபை நடத்திய ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

இவ்விவகாரம் குறித்து ஐ.நா.வதிவிடப் பிரதிநிதி பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

*ஏறத்தாழ 9,400 பேர் விடுதலைப் புலிகளுடன் தொடர்புகொண்டிருந்தவர்கள் என்ற அடிப்படையில் முகாமின் சிவிலியன் மக்களிடம் இருந்து பிரித்து கொண்டுசெல்லப்பட்டு 'புனர்வாழ்வு மையங்கள் என்று சொல்லப்படுகின்ற இடத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். சரணடைந்தவர்களான இவர்களை புனர்வாழ்வுக்கான தலைமை ஆணையரது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவது என்பதுதான் அரசாங்கம் மேற்கொள்ளும் புனர்வாழ்வு நடைமுறையின் முதல் படி ஆகும். அதேநேரம், அரசியல் சாசனத்தில் உறுதிவழங்கப்பட்டுள்ள உரிமைகள் கோரி அவர்கள் விண்ணப்பிக்க இடமிருக்கிறதா என்பதும் ஒருவரைத் தடுத்துவைக்கும்போது மேற்கொள்ள வேண்டிய நடைமுறை ஒழுங்காக கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதும் உறுதிசெய்யப்பட வேண்டும். தடுத்துவைக்கப்படுபவரின் குடும்பத்துக்கு அது பற்றி தெரியப்படுத்துதல், கைதானவர்களின் நிலை குறித்து இலங்கையின் மனித உரிமைகள் ஆணையம் விபரம் பெற்றுவருதல் போன்ற விடயங்கள் இடம்பெயர்ந்த மக்களிடையே இவ்விவகாரம் கவலையையும், மன அழுத்ததையும் ஏற்படுத்த விடாமல் தவிர்ப்பதற்கு உதவும். ஆயுதக் குழுக்களிடம் இருந்து வெளியேறும் சிறார்கள் தொடர்பில் ஐ.நா. குழந்தைகள் நல நிதியமான யுனிசெ்ப் இலங்கையின் புனர்வாழ்வு ஆணையர் மற்றும் பிற சம்பந்தப்பட்ட அரசு அமைப்புகளுடன்*

*தொடர்ந்தும் நெருங்கி ஒத்துழைத்து வருகிறது. 2008 டிசம்பரில் ஏற்படுத்தப்பட்ட சிறார் போராளிகளுக்கான அரசாங்கத்தின் அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் இந்தச் சிறார்கள் வருவார்கள். இந்த வருடத்தின் ஆரம்பத்தில் இருந்து என்று பார்க்கையில், 343 முன்னாள் சிறார் போராளிகள் அடையாளம் காணப்படுள்ளனர். இவர்களை சிறார் புனர்வாழ்வு மையங்களுக்கு மாற்றும் பணி நடந்துவருகிறது.*[67]

சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களின் கீழ், சிறைப்பிடிக்கப்பட்ட போராளிகள் (சர்வதேச ஆயுத மோதல்களாக இருந்தால் இவர்களை 'யுத்தக் கைதிகள்' என்று சொல்வார்கள்; சர்வதேச ரீதியில் அல்லாத ஆயுத மோதல்களில் இவர்களை 'மோதல்களில் நேரடியாகப் பங்கேற்ற நபர்கள்' என்று கூறுவர்) மோதல்கள் முடிவுக்கு வரும் வரைக்கு தடுத்துவைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் மோதல்கள் முடிந்துவிட்டன என்றால், அவர்கள் எல்லாம் 'தாமதமின்றி' விடுவிக்கப்பட்டாக வேண்டும்.[68] 'அவர்களது சுதந்திரங்களை பறித்துவைத்திருந்ததற்கான காரணங்கள் முடிவுக்கு வந்துவிட்டன என்கிறபோது அவர்கள் கூடிய விரைவில் விடுவிக்கப்பட வேண்டும்' என்ற வழக்கம் சர்வதேச அளவில் அல்லாத ஆயுத மோதல்களிலும் கடைப்பிடிக்கப்பட்டு வரவே செய்வதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கூறுகிறது.[69] ஆனால் போர்க்குற்றம் புரிந்தவர்களாக அல்லது உள்நாட்டுச் சட்டங்களின் அடிப்படையில் குற்றம் புரிந்தவர்களாக சந்தேகிக்கப்படும் நபர்களை தடுத்துவைக்கவும் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும் ஒரு நாட்டுக்கு இருக்கக்கூடிய உரிமையை மேற்சொன்ன விதிகள் பாதிக்காது.[70] ஆதலால் கிரிமினல் குற்றங்களாக வெளிப்படையாகத் தெரியும் விஷயங்களுக்காக குற்றம்சாட்டப்பட்டு சுயாதீனமான நீதிமன்றம் ஒன்றினால் காவலில் வைக்கப்படுகின்றவர்கள் அன்றி ஏனைய விடுதலைப் புலி சந்தேக நபர்களை இலங்கை அதிகாரிகள் தாமதமின்றி விடுவிக்க வேண்டும் என்று சர்வதேச பொதுமன்னிப்பு சபை வலியுறுத்துகிறது. அவ்வாறு குற்றம்சாட்டப்பட்டுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்கள் மீதான வழக்கு விசாரணையும் சிவிலியன் நீதிமன்றங்களில், சர்வதேச தரத்தில் நியாயமாகவும் மரண தண்டனை விதிப்பதில்லை என்ற கொள்கையுடனும் நடத்தப்பட வேண்டும் என சர்வதேச பொதுமன்னிப்பு சபை கேட்டுக்கொள்கிறது.

தற்போது முகாம்களில் வாழும் மக்களில் சிறார் போராளிகள் உள்ளிட்ட விடுதலைப் புலிகள் அமைப்போடு முன்பு சம்பந்தப்பட்டிருந்த சில சிறார்கள் இனியும்கூட இருந்துவரலாம். சிறார் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பதென்ற அறிவிக்கப்பட்ட ஒரு கொள்கையை அரசாங்கம் கடைப்பிடித்துவருகிறது. அக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது. சர்வதேச பொதுமன்னிப்பு சபை இதனை வரவேற்கிறது. சர்வதேச சட்டங்கள் மற்றும் தர

அளவுகோல்களின் அடிப்படையில் இந்தப் புனர்வாழ்வு நடவடிக்கைகளும், அவர்களை சமூகங்களில் மீண்டும் ஒன்றிணைக்கும் பணிகளும் நிறைவேற்றப்பட வேண்டும் என அரசாங்கத்திடம் வலிறுத்தப்படுகிறது. "சிறார்களுக்கு எது நன்மை பயக்கும்" (CRC ஷரத்து எண் 3) என்பதற்கே எல்லா நேரங்களிலும் அதிக முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இக்கொள்கையின் அமலாக்க நடைமுறைகளில் முன்னாள் சிறார் போராளிகளை நடத்தும் விதம் குறித்த சர்வதேச வழிகாட்டு விதிகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். குறிப்பாக 2007ஆம் வருடத்தின் பாரீஸ் கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். சுயாதீனமாகவும் சிவிலியன்களைக் கொண்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், சிறார்கள் மீது அவதூறு முத்திரை விழுந்துவிடாமல் இருப்பதற்காக சமூக அடிப்படையிலான வழிமுறைகளைக் கையாளுதல் போன்ற விஷயங்கள் இந்த பாரீஸ் கொள்கைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளன. குறிப்பிட்ட சிறாரின் பாதுகாப்புக்கு நிச்சயம் அவசியம் என்றில்லாத நிலையில் சிறார்களை அவர்தம் குடும்பத்தாரிடம் இருந்து பிரிக்காமல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.[71] சிறாரைப் படையில் சேர்த்தவர் என்று சந்தேகிக்கப்படுபவர்கள் மீது சர்வதேச தர அளவுகோல்களின் பிரகாரம் நியாயமான முறையிலும், மரண தண்டனை விதிப்பதில்லை என்ற கொள்கையுடனும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- ## நிறைவுரை

இலங்கையில் யுத்தத்தில் சிக்குண்டு உயிர்பிழைத்துள்ள தமிழர்கள், ஏற்கனவே பல ஆண்டுகாலமாக வன்முறைகளை சந்தித்தவர்கள், நேசித்தவர்களைப் பறிகொடுக்க நேர்ந்தவர்கள், பொருளிழப்புகளைச் சுமந்தவர்கள், இலங்கை இராணுவத்தினராலோ, பிற ஆயுதக் குழுக்களினாலோ ஆபத்துவரலாம் என்று அச்சத்தினூடே வாழ்ந்தவர்கள், விடுதலைப் புலிகளின் யதேச்சதிகார பிடிக்குள் சிக்கியிருந்தவர்கள், அவர்களின் கட்டாய ஆட்சேர்ப்புக்கு தமது குழந்தைகளைத் தாரைவார்க்க வேண்டிய துர்பாக்கியசாலிகள். இவர்களில் பலர் பல தடவைகள் இடம்பெயர்ந்தவர்கள். தமது வீடுகளையும், சமூகங்களையும், வாழ்வாதாரங்களையும், குடும்பத்தினரையும் நண்பர்களையும் தொலைத்துவிட்டு நிற்பவர்கள். இவர்களிலே பலர் என்றுமே ஆறாமல் போகக்கூடிய ஆழமான புண்களை உடலிலும் வடுக்களை மனதிலும் தாங்கிவருகின்றனர். தொடர்ந்தும் இவர்களை யதேச்சதிகாரமாய் கூட்டம் நிரம்பி வழியும் எவ்வித வசிதியும் இல்லா முகாம்களில் தடுத்துவைப்பது அவர்களுடைய துன்பங்களை அதிகப்படுத்தவே செய்யும். இராணுவத்தினர் சுற்றிக் காவல் நிற்க அவர்களுடைய கண்காணிப்பில் கீழ் முகாம்களிலே அவர்கள் தமது அன்றாட வாழ்க்கையை நடத்துவதென்பது இலங்கையின் ஏனைய சமூகங்களோடு அவர்கள் மேலும் அந்நியப்படவே

வழிசெய்யும்.

இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ரோஹித பொகொல்லாக இலங்கையில் சமாதானம், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்றம் ஆகியவற்றுக்கான ஜப்பானின் விசேட தூதர் யசூஷி அகாஷியை ஜூன் மாத இறுதியில் சந்தித்தபோது, வட இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் பணிகளைச் செயவதில் ஜப்பான் தொடர்ந்து ஆதர்வு நல்கி வருவதற்கு நன்றி தெரிவித்தார். இடம்பெயர்ந்த மக்கள் தங்களுடைய "சொந்த வாழ்விடங்களில்" மீள்குடியேற்றப்படுவார்கள் என்று வாக்குறுதி வழங்கியிருந்தார். முன்பு விடுதலைப் புலிகள் கட்டுபாட்டில் இருந்த பகுதிகளில் உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தப்போவதாக அவர் கூறியிருந்தார். இடம்பெயர்ந்த மக்களிடம் தேவையான அடையாள ஆவணங்கள் இல்லாத நிலையில், அவர்கள் பலரால் இந்தத் தேர்தல்களில் பங்கேற்க முடியாது என்பதே யதார்த்தம் என்றாலும், உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்படுவதன் காரணமாக அப்பகுதிகளில் ஜனநாயகம் மலரும் என்று தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் கூறியிருந்தார்.

தூதர் அகாஷியும் தனது பங்கிலே, இடம்பெயர்ந்த மக்களுக்கான வசதிகளை மேம்படுத்துவதில் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு நன்றி தெரிவித்ததாக கூறப்படுகிறது. அதேநேரம், இந்த மக்களை மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். இடம்பெயர்ந்த மக்களை 180 நாட்களில் மீளக் குடியமர்த்துவது என்ற அரசாங்க யோசனைக்கு இணக்கம் தெரிவித்த அகாஷி, கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஜப்பான் தந்துவரும் உதவிகள் "தாங்கள் முன்பு வாழ்ந்த இடங்களுக்கு சிவிலியன்கள் திரும்புவதை ஊக்கப்படுத்தும்" என்று கூறியிருந்தார்.[72] இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் புனர்நிர்மானம் ஆகியவற்றில் உதவ இந்தியாவும் வாக்குறுதி வழங்கியிருந்தது. முகாம் வசதிகள் மேம்படுத்தப்படுவதற்கும், கண்ணிவெடிகள் அகற்றப்படுவதற்கும், வடக்கில் விவசாயம் மீன்பிடி போன்ற தொழில்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கும் நிதி உதவி வழங்குவதன் மூலம் இந்தியா தனது ஆதரவைத் தெரிவிக்க விரும்பியது. இடைத்தங்கல் முகாம்கள் சிவிலியன் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படுவதன் அவசியம் குறித்தும் இந்தியா சுட்டிக்காட்டியிருந்தது.

இந்தப் பரிமாற்றங்களில் எல்லாம் இலங்கையில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் தொடர்பான அடிப்படை மனித உரிமை விவகாரங்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டிருக்கவில்லை என்றே சர்வதேச பொதுமன்னிப்பு சபை கருதுகிறது. குறிப்பாக ஒருவருடைய தனி மனித சுதந்திரத்தையும் (ஷரத்து எண் 9), நடமாட்ட சுதந்திரத்தையும் (ஷரத்து எண் 12) மதிக்க வேண்டும் என்று ICCPR ஒப்பந்தத்தின் கீழ்

இலங்கைக்கு இருக்கின்ற கடப்பாடுகள் பற்றி போதிய முக்கியத்துவம் தரப்பட்டிருக்கவில்லை. இடைத்தங்கல் முகாம்களில் இடம்பெயர்ந்த மக்கள் குற்றச்சாட்டு ஏதுவும் சுமத்தப்படாமலேயே அவர்களுடைய மனித உரிமைகள் பாதிக்கப்படும் வகையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்பதால் முகாமிலிருந்து வெளியேற விரும்பும் மக்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்ற முக்கியமான ஓர் தேவை இருக்கிறது. இடம்பெயர்ந்த மக்கள் தம்முடைய சொந்தப் பகுதிகளில் மீள் குடியேற்றப்படுவது என்பது வேறு (சில இடங்களில் நிலக்கண்ணி அகற்ற வேண்டிய அவசியம் இருப்பதாலும், புனர்நிர்மாணப் பணிகள் மேற்கொள்ள வேண்டிய அவசியம் இருப்பதாலும் மீள்குடியேற்றம் என்பதற்கு மாதக்கணக்கிலும் ஆண்டுக்கணக்கிலும் அவகாசம் எடுக்கலாம்), அவர்கள் முகாம்களிலிருந்து விடுவிக்கபட வேண்டும் என்பது வேறு. இரண்டையும் குழப்பிக்கொள்ளக்கூடாது.

இரண்டு விஷயங்களுமே அவசரமாக நிறைவேற்றப்பட வேண்டிய முக்கிய விஷயங்கள்தான் என்றாலும் இரண்டையும் குழப்பிக்கொள்ளக்கூடாது. இலங்கைக்கு கொடை வழங்கும் நாடுகள் மீள்குடியேற்ற முயற்சிகளுக்கு ஆதரவும் ஊக்கமும் வழங்க வேண்டும். (அது ஒரு புறமிருக்க) இலங்கையின் இடைத்தங்கல் முகாம்களில் யதேச்சதிகாரமாக மக்கள் தடுத்துவைக்கப்பட்டிருப்பது உடனடியாக முடிவுக்கு வர வேண்டும் என அவர்கள் வலியுறுத்தவும் வேண்டும்.

இடம்பெயர்ந்த மக்கள் தாங்களாக திரும்பிவருவதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்ற தனது பொறுப்பில் இலங்கை அரசு கவனம் செலுத்துகிறது என்பது வரவேற்கத்தக்க ஓர் விடயம்தான். பாதுகாப்புடனும், மரியாதையுடனும் இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்தப்பிரதேசங்களுக்குத் திரும்ப வேண்டும் அல்லது நாட்டின் வேறு ஒரு பகுதியில் சுய விருப்பதுடன் அவர்கள் குடியேற வேண்டும் என்று நினைப்பதெல்லாம் நியாயம்தான். ஆனால் இந்த நடவடிக்கைகள் எல்லாம் உடனடியாக நடைமுறைக்கு வராது என்பதே யதார்த்தம். இந்த சூழ்நிலை நடைமுறைக்கு வருவதற்கு முந்தைய இடைப்பட்ட காலத்தில், தமது சொந்த ஊர்களுக்குத் திரும்ப வேண்டும் அல்லது இலங்கையில் வேறு ஒரு பகுதியில் குடியேற வேண்டும் என்று விரும்பும் நபர்களுக்கு அதனைச் செய்துகொள்வதற்கான வாய்ப்பு வசதிகள் இருக்கும் பட்சத்தில், அவர்களை முகாம்களில் அடைத்துவைத்து அவர்களது நடமாட்ட சுதந்திரத்தை இலங்கை அரசாங்கம் பறித்துவிடக்கூடாது என்பதே எமது வாதம்.

இடம்பெயர்ந்த மக்கள் முகாம்களுக்கு உள்ளிருந்து வெளியிலும் வெளியிலிருந்து உள்ளும் சென்றுவருவதைக் கட்டுப்படுத்தும் தடைகளை அகற்றுவதன் மூலம் அவர்கள் யதேச்சதிகாரமாகத் தடுத்துவைக்கப்பட்டிருப்பதை இலங்கை அரசாங்கம் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

2009ஆம் வருடம் முடிவதற்குள் இடம்பெயர்ந்த மக்கள் பெரும்பான்மையானோர் மீள்குடியேற்றம் செய்யப்படுவார்கள் என்ற அரசாங்கத்தின் வாக்குறுதி போதுமானதாய் இல்லை. மீள்குடியேற்றம் தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் வாக்குறுதிகளைக் நம்பி, கொடையாளி நாடுகளும் சர்வதேச சமூகத்தின் பிற உறுப்பினர்களும் ஏமாந்துவிடக்கூடாது. சர்வதேச நாடுகளிடம் இருந்து பெறப்படும் நிதி, இடம்பெயர்ந்த மக்களின் மனித உரிமைகள் மேம்படுவதற்கு பயன்பட வேண்டுமே ஒழிய பாதிக்கப்படுவதற்குப் பயன்படக்கூடாது. ஆதலால் அதற்கு இடமளிக்காமல் இருப்பதை சர்வதேச சமூகம் உறுதிசெய்ய வேண்டும். குறிப்பாக, இடைத்தங்கல் முகாம்களை நடத்துவதற்காக வழங்கப்படுகின்ற உதவிகள், இடம்பெயர்ந்த மக்களின் மனித உரிமைகளை மீறும் வகையில் அவர்கள் தொடர்ந்தும் யதேச்சதிகாரமாக தடுத்துவைக்கப்படும் வகையில் பயன்படுத்தப்படக் கூடாது என்பதை கொடையாளி நாடுகள் உறுதிசெய்ய வேண்டும்.

# பரிந்துரைகள்

## சர்வதேச பொதுமன்னிப்பு சபை இலங்கை அரசாங்கத்திடம் முன்வைக்கும் கோரிக்கைகள்:

- இலங்கையின் அரசியல் சாசனத்தினாலும், சர்வதேச சட்டங்களினாலும் உறுதி வழங்கப்பட்டுள்ளதற்கு ஏற்ப இடம்பெயர்துள்ள மக்கள் அனைவரது மனித உரிமைகளுக்கு மதிப்பு தரவும் பாதுகாப்பு தரவும் வேண்டும். நடமாட்ட சுதந்திரம், தனிமனித சுதந்திரம், பாதுகாப்பு பெறுகின்ற உரிமை, சுகாதாரத்துடன் வாழ்க்கை நடத்துவதற்குரிய உரிமை, கல்வி பெறும் உரிமை, நியாயமான வாழ்க்கைத் தரம் பெறுவதற்குரிய உரிமை, சித்ரவதைக்கும், பிறவகையில் இழிவாய் நடத்தப்படுவதற்கும், பலவந்தமாக கடத்தப்படுவற்கும் காணாமல்போவதற்கும் எதிரான உரிமை ஆகிய உரிமைகள் பேணப்பட வேண்டும். அனைத்து விதமான மனித உரிமைகளும் எல்லோருக்கும் எவ்வித பாரபட்சமும் இன்றி வழங்கப்பட வேண்டும். மக்களை முகாம்களில் அடைத்துவைப்பது என்ற தமது கொள்கையை முடிவுக்கு கொண்டுவருவதில் அரசாங்கம் முன்னுரிமை தர வேண்டும், முகாம்களில் அடைத்துவைப்பதென்பது அவர்களை யதேச்சதிகாரமாக தடுத்துவைப்பதாகிவிடுகிறது. முகாம்களில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்கள் வெளியில் போகவும் உள்ளே வரவும் அனுமதி வழங்கப்பட வேண்டும்;

- மனிதாபிமான உதவி அமைப்புகளும் சம்பந்தப்பட்ட பிற அமைப்புகளும் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவிகள் வழங்கும் வகையில் அவர்களை முகாம்களுக்கு எவ்வித தடையுமின்றி சென்றுவர அனுமதிக்க வேண்டும்; இடம்பெயர்ந்த மக்களின் பாதுகாப்புத் தேவைகள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் தங்களுக்குள்ள பொறுப்பை இந்த அமைப்புகள் நிறைவேற்ற இடமளிக்க வேண்டும். குறிப்பாக இடம்பெயர்ந்த மக்கள் பதிவுசெய்யப்படுகின்ற மற்றும் விசாரிக்கப்படுகின்ற நடவடிக்கைகளை கண்காணிக்க இவர்களுக்கு இடமளிக்கப்பட வேண்டும். சுயாதீன மனித உரிமை கண்காணிப்பாளர்களும் முகாமுக்குள் தடையின்றி பணியாற்ற அனுமதி வழங்க வேண்டும்;
- இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்தப் பிரதேசங்களுக்கு பாதுகாப்புடனும் மரியாதையுடனும் திரும்புவதற்குரிய சூழ்நிலைகளையும் வாய்ப்பு வசதிகளையும் ஏற்படுத்தி தரவேண்டும். மாறாக நாட்டின் வேறு ஒரு பகுதியில் அவர்கள் சுய விருப்பத்துடனும் தாமதமின்றியும் குடியமர்த்தப்பட வேண்டும்; சொந்தப் பிரதேசங்களுக்கு திரும்புவது அல்லது மீள்குடியேற்றம் செய்யப்படுவது தொடர்பான திட்டங்களில் இடம்பெயர்ந்த மக்களின் கருத்துகளையும் உள்வாங்கி அரசாங்கம் செயல்பட வேண்டும்; இவ்விஷயத்தில் சுயாதீன மனித உரிமை அமைப்புகளும் சம்பந்தப்பட்ட பிற அமைப்புகளும் உதவிகள் வழங்குவதை அரசாங்கம் அனுசரிக்க வேண்டும்.
- சர்வதேச சமூகத்தின் உதவி மற்றும் ஒத்துழைப்போடு (தெளிவான காலவரையறைகளுடன் கூடிய) திட்ட நிறைவேற்ற எல்லைகள் நிர்ணயிக்கப்பட வேண்டும். இடம்பெயர்ந்த மக்களுக்கான நிலைத்துநிற்கக்கூடிய தீர்வுகள் ஏற்படுத்தப்பட வேண்டும், சுயவிருப்பத்துடன் மக்கள் நிரந்தரமாக தமது சொந்த பிரதேசங்களுக்குத் திரும்புவதென்பதை ஆதரிப்பது, அந்தந்த இடங்களில் உள்ள சமூகங்களுடன் ஒன்றிணைந்துகொள்வது அல்லது நாட்டின் வேறொரு பகுதியில் சென்று குடியேறுவது போன்றவற்றுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். சர்வதேச மனித உரிமை தர அளவுகோல்களுக்கு ஏற்ப, அதிலும் குறீப்பாக இடம்பெயர்ந்த மக்களுக்கான ஐ.நா.வின் வழிகாட்டு நெறிகளுக்கு ஏற்ப இப்பணி மேற்கொள்ளப்பட வேண்டும். யதேச்சதிகாரமாக தடுத்துவைக்கப்படுவதற்கு எதிரான சுதந்திரம், சொந்த ஊருக்கு திரும்புவதற்கான உரிமை, நாட்டின் வேறு பகுதியில் சுயவிருப்பத்துடன் குடியேறுவதற்கான உரிமை போன்றவை மதிக்கப்பட வேண்டும். இடம்பெயர்ந்துள்ள மக்கள் பெற்றுள்ள உரிமைகள் குறித்தும் மீள்குடியேறுவது தொடர்பில் அவர்களுக்குள்ள வாய்ப்புகள் குறித்தும் தகவல் வழங்க வேண்டும். அவர்கள் தமது எதிர்காலம் குறித்து தகவல் அறிவுடன் நல்லதொரு முடிவை தெரிவுசெய்துகொள்ள

இடமிருக்க வேண்டும்;

- முகாம்கள் திட்டவட்டமாகவே சிவிலியன் தன்மை உடையவையாக இருக்க வேண்டும், சிவிலியன் அதிகாரிகளால் அவை நிர்வகிக்கப்பட வேண்டும். விடுதலைப் புலி உறுப்பினர்களை அடையாளம் காணும் விசாரணைகள் தேவை என்பதைக் காரணம் காட்டி முகாம்கள் இராணுவத் தன்மையுடன் இருந்துவருவதை நீட்டிக்கக்கூடாது. பெரு எண்ணிக்கையிலான தமிழர்களை முடிவு தெரியாத ஒரு காலகட்டத்துக்கு அவர்களது மனித உரிமைகளை மீறும் சூழலில் தடுத்துவைத்து அவர்களிடம் பாரபட்சம் காட்டக்கூடாது;
- சர்வதேச மற்றும் தேசியச் சட்டங்களின் கீழ் குற்றம் செய்தவர்களாக சந்தேகிக்கப்படும் நபர்கள் அனைவரும் - அவர்கள் இலங்கை அரச படையினராக இருந்தாலும் சரி அவர்களும் - சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். சர்வதேச தர அளவுகளுக்கேற்ப நியாயமாக அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்;
- இலங்கை அரச படையினராலும், பிற ஆயுதக் குழுக்களினாலும், அவர்கள் தனித்து செயல்படுபவர்கள் ஆனாலும் சரி, இராணுவத்தினரோடு இணைந்து செயல்படுபவர்கள் ஆனாலும் சரி அவர்களினாலும், எஞ்சியுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்களாலும் இடம்பெயர்ந்த மக்கள் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகவிடாமல் அவர்களது மனித உரிமைகளைக் காப்பாற்ற வலுவான நடவடிக்கை எடுக்க வேண்டும்;
- பலவந்தமாக ஆட்கள் கொண்டுசெல்லப்படுவது, பிற மனித உரிமை மீறல்களை எதிர்கொள்வது போன்றவை எந்த ஒரு சூழலிலும் சகித்துக்கொள்ளப்பட மாட்டாது என்பதை போலீசார், இராணுவத்தினர், இதர பாதுகாப்புப் படையினர் போன்றவர்களிடம் அரசாங்கம் தெளிவுபடுத்தவிட வேண்டும். முகாம்களில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளவர்களிடையில் திட்டவட்டமான அதிகாரக் கட்டமைப்பு வேண்டும். ஒரு அதிகாரியுடைய கட்டுபாட்டின் கீழ் வரும் பாதுகாப்புப் பணியாளர்கள் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுவதை அந்த அதிகாரியால் தடுக்க முடிய வேண்டும் என்கிற நிலை வேண்டும்;
- யுத்தத்தின் விளைவாகவோ, இடம்பெயர நேர்ந்ததன் விளைவாகவோ காணாமல்போனதாகத் தெரியவந்த மக்கள் எங்கிருக்கிறார்கள் என்றோ அல்லது அவர்களுக்கு என்ன ஆனது என்றோ கண்டறிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இந்தப் பணி தொடர்பில் சர்வதேச அமைப்புகளுடன் ஒத்துழைக்க வேண்டும்;
- இடம்பெயர்ந்த மக்கள் தங்களைப் பதிந்துகொள்வதற்கான வெளிப்படையாகவும் தரமாகவும் மேற்கொள்ளப்படும் நடைமுறை ஒன்று

ஏற்படுத்தப்பட வேண்டும். பதிவுத் தகவல்கள், உறவுகள் எங்கிருக்கிறார்கள் என்று தேடிவருகின்ற மக்களுக்கு கிடைக்கச்செய்ய வேண்டும். இந்நடவடிக்கையின் மூலமாக ஆட்கள் பலவந்தமாகக் கொண்டுசெல்லப்படுதல் அல்லது பிற மனித உரிமை மீறல்களுக்கு ஆளாகுதல் போன்றவற்றுக்கான ஆபத்தைக் குறைக்க வேண்டும்;

- இடம்பெயர்ந்த மக்களுடைய தேசிய அடையாள அட்டைகளையும் அவர்கள் தம்முடைய சட்டபூர்வ உரிமைகளை பயன்படுத்திக்கொள்ளத் தேவையான பிற ஆவணங்களையும் அவர்களிடம் வழங்க வேண்டும். குறிப்பாக அம்மக்கள் இடம்பெயரும்போது இழக்க நேர்ந்த ஆவணங்களுக்கு பதிலாக புதிய ஆவணங்களையோ அல்லது மாற்று ஆவணங்களையோ நியாயமற்ற நிபந்தனை அவர்கள் மீது விதிக்காமல் வழங்க வேண்டும்;
- குடும்பமாய் வாழ்வதற்கு அவர்களுக்குள்ள உரிமையை மதிக்க வேண்டும், இடம்பெயர்ந்தோர் குடும்பங்கள் பிரிய நேராமல் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்; யுத்தம் காரணமாகவோ இடப்பெயர நேர்ந்ததன் காரணமாகவோ பிரிந்துபோன குடும்பங்கள் மீண்டும் ஒன்று சேர்வதை துரிதப்படுத்துவதற்கான அனைத்து பொருத்தமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்; இப்பணியில் ஈடுபட்டுள்ள மனிதாபிமான உதவியமைப்புகளுடன் ஒத்துழைக்க வேண்டும்;
- எஞ்சியுள்ள விடுதலைப் புலி சந்தேக நபர்களுக்காக் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் சம்பந்தப்பட்ட அனைவரது மனித உரிமைகளுக்கும் மரியாதைக்கும் உத்திரவாதம் வழங்கும் வகையில் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்ய வேண்டும். அந்த விசாரணை நடைமுறை சுயாதீனமாக கண்காணிக்கப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். உரிய அதிகாரம் பெற்ற அதிகாரிகளைக் கொண்டே விடுதலைப் புலி சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட வேண்டும், அந்த அதிகாரி தாம் யார் என்பதை கைதாகும் நபரிடமும், அந்த சம்பவத்தைக் காண நேரும் பிற சாட்சிகளிடமும் அவர்கள் கோரும் பட்சத்தில் தெரியப்படுத்த வேண்டும். பொதுவாக அறியப்பட்ட தடுப்புக் காவல் மையங்களிலேயே அவர்கள் தடுத்துவைக்கப்பட வேண்டும்; கைது செய்யப்பட்டதன் பின்னர் தாமதமின்றி அவர் நீதித்துறை அதிகாரி முன் ஆஜர் படுத்தப்பட வேண்டும்.
- அவ்வாறு தடுத்துவைக்கப்படுபவர்கள் மீது தாமதமின்றி தெளிவான கிரிமினல் குற்றங்கள் சாட்டப்பட வேண்டும், சிவிலியன் நீதிமன்றங்களில் அவர்கள் விசாரிக்கப்பட வேண்டும், அவ்விசாரணைகள் சர்வதேச தர அளவுகோல்களுக்கு ஏற்ப நியாயமாக நடத்தப்பட வேண்டும், மரண தண்டனை விதிக்கப்படுவதை தவிர்க்க வேண்டும். இவ்வகையில் விசாரிக்கப்பட வழியில்லை என்றால் அந்நபர் விடுதலை செய்யப்பட

வேண்டும். சிறையில் அடைத்துவைக்கபட்டிருப்பவர்கள் தமது குடும்பத்தினரையும் சட்டத்தரணிகளையும் மருத்துவர்களையும் சந்திக்க அனுமதி வழங்க வேண்டும். தாங்கள் தடுத்துவைக்கப்பட்டிருப்பது சட்டபூர்வமானதுதானா என்பதை சுயாதீன நீதிமன்றத்தில் முறையிட்டு வாதிட அவர்களுக்கு உரிமை இருக்க வேண்டும்;

- எவர் ஒருவர் கைதுசெய்யப்படும்போதும் அது பற்றிய துல்லியமான தகவல்களும், அவர் எங்கு தடுத்துவைக்கப்படுகிறார், எங்கெல்லாம் மாற்றப்படுகிறார், விடுவிக்கப்பட்டுவிட்டாரா என்பது போன்ற விபரங்களும் கைதுசெய்யப்படுபவரின் உறவினர்களுக்கும், சட்டத்தரணிகளுக்கும், நீதிமன்றங்களுக்கும் கிடைக்கச்செய்ய வேண்டும். கைதுசெய்யப்பட்டவர் ஒருவர் எங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளார், எவருடைய அதிகாரத்தின் கீழ் அவர் தடுத்துவைக்கப்பட்டுள்ளார் என்பதை உறவினர்களும் சட்டத்தரணிகளும் அறிந்துகொள்வதற்கு வழிசெய்யும் ரீதியிலான பலனளிக்கக்கூடிய சட்ட வழிமுறைகள் அவர்களுக்கு இருக்க வேண்டும். கைதி விபரங்கள் குறித்த அவ்வப்போதைய விபரங்கள் அடங்கிய பதிவேடு தடுப்பு மையங்கள் ஒவ்வொன்றிலும் பேணப்பட வேண்டும், தேசிய அளவிலும் பேணப்பட வேண்டும், அந்த பதிவேடுகளில் உள்ள விபரங்கள் கைதிகளின் உறவினர்களுக்கும், சட்டத்தரணிகளுக்கும், தடுத்துவைக்கபட்டுள்ள நபர்கள் பற்றிய விபரங்களை சேகரிக்க முயலும் உத்தியோகபூர்வ அமைப்புகளுக்கும், நியாயமான காரணத்தோடு பெற விரும்பும் ஏனையோருக்கும் வழங்கப்பட வேண்டும். தடுத்துவைக்கப்பட்ட நபர்களை அவர்தம் உறவினர்களும் சட்டத்தரணிகளும் மருத்துவர்களும் சென்று குறிப்பிட்ட இடைவெளிகளில் தடையின்றிச் சந்திக்க அனுமதிக்க வேண்டும். பாதுகாப்புக் காரணங்களுக்காக ஆட்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள மையங்கள் அனைத்திலும் வழமையாகவும், சுயாதீனமாகவும், முன்னறிவிப்பின்றியும், தடைகள் இன்றியும் கண்காணிப்பு சோதனைகள் நடத்தப்பட வேண்டும்;
- இடம்பெயர்ந்த மக்களுக்கு கல்வி, மருத்துவம், சமூக நலன் போன்ற சேவைகளில் போதிய வசதிகளும் கட்டமைப்புகளும் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டும். சிறார்கள் அனைவரது - அவர்கள் குடும்பத்தைப் பிரிந்தவர்கள் என்றாலும் சரி, பெரியவர் எவரும் உடன் இல்லாதவர்கள் என்றாலும் சரி - அனைவரது கல்வி பெறும் உரிமையும், தமது குடும்பத்தோடு ஒன்று சேர்வதற்கான உரிமையும் பாதுகாக்கப்படுவதை அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டும். இலங்கை உடன்பட்டுள்ள ஒரு ஒப்பந்தமான சிறார் உரிமைகள் சமவாயத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதற்கு ஏற்ப சிறார்கள் அனைவரது உரிமைகளும் மதிக்கப்படவும் பாதுகாக்கப்படவும் வேண்டும்.

சிறார்களின் நலன்களுக்கு எது உகந்தது என்பதன் அடிப்படையில் எந்த ஒரு முடிவும் எடுக்கப்பட வேண்டும்;

- முன்னாள் சிறார் போராளிகள் உட்பட விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் முன்பு தொடர்புகொண்டிருந்த சிறார்களைக் கையாளும்போதும் சிறார் நலனுக்கு எது நல்லது என்பதற்கு முன்னுரிமை தந்தே நடத்த வேண்டும். அவர்களுடைய பாதுகாப்புக்கு நிச்சயம் தேவை என்றாலொழிய அச்சிறார்களை அவர்தம் குடும்பத்தாரிடம் இருந்து பிரிக்கக் கூடாது. அச்சிறார்களுக்கு புனர்வாழ்வளிப்பது மற்றும் சமுதாயத்தில் மீண்டும் ஒன்றிணைப்பது தொடர்பான செயல்திட்டங்கள் முன்னாள் சிறார் போராளிகளை நடத்துவதற்கான சர்வதேச வழிகாட்டு நெறிகளுக்கேற்ப மேற்கொள்ளப்பட வேண்டும்;
- பாலின அடிப்படையிலான பாரபட்சங்களிலிருந்தும் பாலியல் வன்முறை மற்றும் இதர துஷ்பிரயோகங்களிலிருந்தும் பெண்கள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்யும் நோக்கில் முகாம்களிலும் சரி, இடமாற்றம் மற்றும் மீள்குடியேற்றத்தின்போதும் சரி, குறிப்பிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். முகாம்கள் நடத்தப்படும் விதம் மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பில் அரசாங்கத்துக்கும் இடம்பெயர்ந்த மக்களுக்கும் இடையில் நடக்கும் பேச்சுவார்த்தைகளில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான வாய்ப்புகள் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

## ஐக்கிய நாடுகள் சபை, இலங்கைக்கு கொடை வழங்கும் நாடுகள் மற்றும் சர்வதேச சமூகத்தின் பிற உறுப்பினர்களிடம் சர்வதேச பொதுமன்னிப்பு சபை முன்வைக்கும் கோரிக்கைகள்:

- இடம்பெயர்ந்த மக்கள் முகாம் எல்லையை விட்டு தாண்டவிடாதபடிக்கு அவர்களது நடமாட்ட சுதந்திரத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை உடனடியாக முடிவுக்கொண்டுவர வேண்டும் என குரல்கொடுக்க வேண்டும். முகாம்களை நடத்துவதற்காக வழங்கப்படும் உதவிகள் இடம்பெயர்ந்த மக்களது மனித உரிமைகள் மீறப்படும் வகையில் அவர்கள் தொடர்ந்தும் யதேச்சதிகாரத்துடன் தடுத்துவைப்பதற்கு பயன்படுத்தப்படக்கூடாது என்பதை உறுதிசெய்ய வேண்டும்;
- மனித உரிமை துஷ்பிரயோகங்கள் நடக்காமல் இருப்பதில் உதவுவதற்காக பலன் தரும் வகையில் ஐ.நா.மனித உரிமைகள் கண்காணிப்பு குழு ஒன்றை இலங்கையில் பணியமர்த்த வேண்டும். நீண்ட கால அடிப்படையில் பார்க்கையில்ம் இலங்கை மக்கள் அனைவரது மனித உரிமைகள்

பாதுகாக்கப்படுவது என்பதிலும் பங்களிக்க வேண்டும்.

- சம்பந்தப்பட்ட ஐ.நா. நிறுவனங்களுக்கும் இதர சர்வதேச அமைப்புகளுக்கும் இடம்பெயர்ந்தவர்கள் அனைவரையும் சந்திப்பதில் முழுமையான மற்றும் தடைகளற்ற அனுமதி வேண்டும் என்றும் இடம்பெயர்ந்தவர்களின் பாதுகாப்பு நலன் நோக்கிலான தமது பணிகளை அவர்கள் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டும் என்றும் தொடர்ந்து குரல்கொடுத்து வரவேண்டும். இடம்பெயர்ந்தோர் பதிவுசெய்யப்படுகின்ற அல்லது விசாரிக்கப்படுகின்ற நடைமுறையைக் கண்காணிப்பதற்கும் இந்த அனுமதி நீட்டிக்கப்பட வேண்டும், முகாம்களிலும், தடுப்பு மையங்களிலும்கூட இந்த அனுமதி வேண்டும். சர்வதேச மனித உரிமை கண்காணிப்பாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் முகாம்களுக்குள் சென்றுவரவும் அனுமதி கோர வேண்டும்;
- சர்வதேச மனித உரிமை தர அளவுகோல்களுக்கு ஏற்ப இலங்கையின் இடம்பெயர்ந்த மக்களுக்கான தீர்வுகள் எட்டப்படும் நோக்கில் தெளிவான நிறைவேற்ற இலக்குகளை நிர்ணயிப்பதில் அரசாங்கம் ஈடுபாடு காட்டுவதற்கு ஊக்குவிக்க வேண்டும். நிரந்தரமாகவும், சுய விருப்பத்துடனும் மக்கள் தமது சொந்தப் பிரதேசங்களுக்குத் திரும்புவது, அல்லது இடம்பெயர்ந்த இடத்தினுடைய சமூகத்திலேயே கலப்பது அல்லது நாட்டின் வேறு ஒரு பகுதியில் குடியேறுவது என்று எந்த முடிவாக இருந்தலும் அது மேற்சொன்ன வகையில் நிறைவேற்றப்படுவதை ஊக்குவிக்க வேண்டும்;
- அண்மைய மோதல்களின்போது சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களும் மனிதாபிமானச் சட்டங்களும் கடுமையாக மீறப்பட்டிருந்தன என்ற குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஒரு சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்படுவதன் முதற்கட்டமாக மோதலின் இறுதிக்கட்டம் தொடர்பில் தாங்கள் பெற்றுள்ள விபரங்களை அவர்கள் வெளியிட வேண்டும். நடந்த விஷயங்களை உறுதிப்படுத்தும் நோக்கிலும், துஷ்பிரயோகங்களைச் செய்தவர்கள் அவற்றுக்கு பொறுப்பேற்பதை உறுதி செய்வதற்கான சிறந்த வழிகள் குறித்து பரிந்துரைகளை வழங்கும் நோக்கிலும் இதனை அவர்கள் செய்ய வேண்டும்.

# இறுதிக் குறிப்புகள்

---

1 ஏப்ரல் 20ஆம் தேதிக்கு முன்ன இடம்பெயர்ந்த மக்களுக்கான முகாம்களில் சுமார் 61,000 பேர் இருந்தனர்; மே இறுதியில் இந்தத் எண்ணிக்கை 2,80,000க்கும் மேலே சென்றது.

2 ஐ.நா.வின் மனிதாபிமானப் பணிகளுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் கூற்றுப்படி ஜூலை 3ஆம் தேதியன்றைய நிலவரப்படி முகாம்களில் 2,60,836 பேரும், வவுனியா மருத்துவமனையில் மட்டும் 3,129 பேரும் இருந்துள்ளனர். http://www.reliefweb.int/rw/fullMaps_Sa.nsf/luFullMap/6D9374C261ACBAA4852575EF005307D6/$File/map.pdf?OpenElement

3 சர்வதேச பொதுமன்னிப்பு சபையினால் மே 2009ல், ASA 37/012/2009 என்ற குறியீட்டு எண்ணின் கீழ் வெளியிடப்பட்ட gட Sri Lanka: Government misrepresentations regarding the scale of the crisis," என்ற அறிக்கையைப் பார்க்கவும்., http://www.amnesty.org/en/library/asset/ASA37/012/2009/en/0a7a7b9b-93b8-4dc1-bb2b-3e1955c7e567/asa370122009en.html.

4 உள்நாட்டளவில் இடம்பெயர்ந்த மக்களுக்கான வழிகாட்டு நெறிகளில் பிரிவு 16.2 கூறுவது யாதெனின்: " காணாமல்போனதாகத் தெரிவிக்கப்படும் இடம்பெயர்ந்த மக்களின் கதி என்ன? அவர்கள் எங்கு உள்ளனர்? என்பன குறித்த விபரங்களைக் கண்டறிய அதிகாரிகள் முற்பட வேண்டும். இந்தப் பணியில் ஈடுபட்டுள்ள சம்பந்தப்பட்ட சர்வதேச அமைப்புகளுடன் அவர்கள் ஒத்துழைக்க வேண்டும். தேடப்படும் நபரின் முக்கிய உறவுகளிடம் விசாரணைகளில் தெரியவரும் விபரங்களையும், முடிவு தெரிந்தால் அதனையும் தெரியப்படுத்த வேண்டும். உள்நாட்டளவில் இடம்பெயர்ந்த மக்களுக்கான வழிகாட்டு நெறிகள் UN Doc. E/CN.4/1998/53/Add.2 (1998).

5 9 ஜூன் 2009 அன்றைய அறிக்கை "ICRC assists thousands of persons in government-run sites for the displaced http://www.icrc.org/Web/Eng/siteeng0.nsf/html/sri-lanka-update-090609 . "நாடெங்கிலும் அரசாங்கத்தால் நடத்தப்படுகின்ற தடுப்பு மையங்களில் கிட்டத்தட்ட 135ல் மையங்களில் இருந்து பாதுகாப்பு காரணங்களுக்காக கைதுசெய்யப்பட்டிருந்தவர்கள் 6,700 பேருக்கும் அதிகமானோரிடம் தமது பிரதிநிதிகள், 2009 மார்ச் மாதத்துக்கும் மே மாதத்துக்கும் இடைப்பட்ட காலகட்டத்தில், பிரத்யேகமாக விசாரணை நடத்தியதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது." தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் ஆடைகளும், உடல் துப்புரவு பொருட்களும், பொழுதுபோக்கு பொருட்களும் வழங்கியது. கிட்டத்தட்ட 1,400 பேரை அவர்தம் குடும்பத்தினர் வந்து சந்திக்க ஒத்தாசை வழங்கியது.

6 பார்க்க, பிரிவு எண் 28, இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான வழிகாட்டு நெறிகள் UN

Doc. E/CN.4/1998/53/Add.2 (1998).

7 பார்க்க, பிரிவு எண் 30, இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான வழிகாட்டு நெறிகள் UN Doc. E/CN.4/1998/53/Add.2 (1998).

8 பார்க்க, பிரிவு எண்கள் 3.1 மற்றும் 25.1, இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான வழிகாட்டு நெறிகள் UN Doc. E/CN.4/1998/53/Add.2 (1998).

9 பார்க்க, பிரிவு எண் 6.3, இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான வழிகாட்டு நெறிகள் UN Doc. E/CN.4/1998/53/Add.2 (1998).

10 இடம்பெயர்ந்த மக்களுக்கான ஐ.நா.வின் வழிகாட்டு நெறிகள் பிரிவு எண் 14ல் குறிப்பிடப்படுவது யாதெனின்: “1. உள்நாட்டளவில் இடம்பெயர்ந்த ஒவ்வொருவருக்கும் நடமாட்ட சுதந்திரமும் தனது வாழ்விடத்தை தெரிவுசெய்துகொள்ளும் உரிமையும் உள்ளது. 2. குறிப்பாக, முகாம்களுக்கு உள்ளிருந்து வெளியிலும் வெளியிலிருந்து உள்ளும் அல்லது ஏனைய குடியிருப்புகளுக்கும் தடையின்றி சென்றுவருவதற்கு உரிமை வேண்டும்.” பிரிவு எண் 12 கூறுவது யாதெனின்: “1. தனிமனித சுதந்திரமும் உயிர் பாதுகாப்பு உரிமையும் மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உண்டு. எவர் ஒருவரும் யதேச்சதிகாரத்துடன் கைதுசெய்யப்படவோ தடுத்துவைக்கப்படவோ கூடாது. 2. இந்த உரிமைகள் இடம்பெயர்ந்த மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்றால், அவர்கள் ஒரு முகாமுக்குள் தடுத்துவைக்கப்படவோ அல்லது அடைத்துவைக்கப்படவோ கூடாது. அவ்வாறு தடுத்துவைப்பதென்பது மிகவும் அத்தியாவசியம் என்ற நிலை ஏற்படுகிறது என்றால், சூழ்நிலை நிர்பந்திக்கும் காலத்தைத் தாண்டி அவர்கள் தடுத்துவைக்கப்படக்கூடாது. 3. தமது வாழ்விடங்களை துறந்து வெளியேறியவர்கள் என்ற பாரபட்சத்துடன் கைதாவதிலிருந்தும் தடுத்துவைக்கப்படுவதிலுருந்தும் இடம்பெயர்ந்த மக்கள் பாதுகாக்கபட வேண்டும். 4. எந்த ஒரு சூழ்நிலையிலும் இடம்பெயர்ந்த மக்கள் பணயக் கைதிகளாக பிடித்துவைக்கப்படக்கூடாது. இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான வழிகாட்டு நெறிகள் UN Doc. E/CN.4/1998/53/Add.2 (1998).

11 இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான வழிகாட்டு நெறிகள் UN Doc. E/CN.4/1998/53/Add.2 (1998).

12 இதே ஆவணத்தில் உள்ள ஒரு விபரம்

13 யுத்தம் நடந்த காலகட்டங்களில் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளுக்கு பொருட்கள் கொண்டுசெல்லப்படுவதில் இலங்கை பாதுகாப்பு அமைச்சகம் கட்டுப்பாடுகளை விதித்துவந்துள்ளது. விடுதலைப் புலிகளுக்கு பயன்படக்கூடிய பொருட்களாக கருதப்படும் எரிபொருள், சிமெண்ட், மற்றும் இதர அத்தியாவசியப் பொருட்கள் கொண்டுசெல்லப்படுவதில் கட்டுப்பாடுகள் இருந்து வந்துள்ளன. 2002 காலப்பகுதியில் இக்கட்டுப்பாடுகள்

தளர்த்தப்பட்டிருந்தாலும், 2005ல் மீண்டும் விதிக்கப்பட்டிருந்தன. தடைசெய்யப்பட்ட பொருட்களின் பட்டியலில் (என்னென்ன பொருட்கள் என்பது அடிக்கடி மாறிவந்துள்ளன) சில வகை மருந்துகளும், அதிக அளவிலான சீனியும், காயத்துக்கு கட்டுபோடுவதற்கான துணியும், பேட்டரிகளும், சோப்புகளும் வேறு பொருட்களும் அடங்கும்.

14 ஜூன் 2009 சமயத்தில் சர்வதேச பொதுமன்னிப்பு சபைக்கு வழங்கிய பேட்டி

15 பாதுகாப்பு, பொதுமக்கள் காபந்து, சட்டம் ஒழுங்கு அமைச்சகத்தின் செயலருக்கு 5 செப்டம்பர் 2008 அன்று எழுதிய கடிதம் , SMOD/320/DEM/GEN(45). http://www.ngosecretariat.gov.lk/news_events.php?id=26

16 ஜூன் 2009 சமயத்தில் சர்வதேச பொதுமன்னிப்பு சபைக்கு வழங்கிய பேட்டி . "Sri Lanka: major humanitarian crisis unfolding" என்ற தலைப்பில் 27 ஜனவரி 2009 வெளியான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அறிக்கையையும் பார்க்கவும்.

17 யுத்தப் பிரதேசங்களில் சிக்குண்டுள்ள மக்களின் மொத்த எண்ணிக்கை 50,000 முதல் 70,000 வரைதான் என பிப்ரவரி மாதம் முதல் மீண்டும் மீண்டும் வழங்கவந்த தனது பொது அறிக்கைகளில் இலங்கை அரசாங்கம் மதிப்பிட்டிருந்தது. ஐ.நா.வின் மதிப்பீடு என்பது இந்த எண்ணிக்கைக்கு இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகமாக ( அதாவது 1,50,000 முதல் 1,80,000 வரை என்பதாக) இருந்தது. ஆனால் இந்தப் பகுதிகளில் இருந்து ஒரு மாதத்துக்கும் குறைவான ஒரு கால கட்டத்தில் 2.00.000க்கும் அதிமகான மக்கள் வெளியேறியிருந்தனர். இவர்கள் அரசாங்கத்தால் நடத்தப்படும் முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளனர். 17 பிப்ரவரி 2009 தேதியிட்ட பாதுகாப்பு அமைச்சகத்தின் உத்தியோகபூர்வ ஊடக அறிக்கை பாத்காப்பு செயலர் கோட்டாபய ராஜபக்ஷவை மேற்கோள்காட்டி கூறியதாவது: “யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள சிவிலியன்களின் எண்ணிக்கை தொடர்பில் பல்வேறு வட்டாரங்களிலிருந்தும் வெளியான விபரங்கள் பற்றி குறிப்பிட்ட பாதுகாப்பு செயலர்.... விடுதலைப் புலிகளிடம் எஞ்சியுள்ள பகுதிகளில் சிக்குண்டுள்ள சிவிலியன்கள் மற்றும் பாதிப்புகளுக்குள்ள சிவிலியன்கள் ஆகியோரின் எண்ணிக்கை அளவுக்கதிகமாக மிகைப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். யுத்தப் பிரதேசங்களில் சிக்குண்டுள்ள மக்களின் எண்ணிக்கை 50,000 முதல் 70,000 வரைதான் என்று அவர் கூறியுள்ளார் ... (Sri Lanka: Civilian safety is the top priority - Defence Secretary; Government of Sri Lanka, 17 February 2009, (http://www.reliefweb.int/rw/rwb.nsf/db900sid/JBRN-7PCJAY?OpenDocument&Click=).

18 UN OCHA , “Sri Lanka ・ Vanni Emergency Situation Report #23,・25 ஜூன் 2009 http://ochaonline.un.org/OchaLinkClick.aspx?link=ocha&docId=1112059

ஜூலை 11 அன்று, இந்திய நாளிதழான இந்துவில் வெளியான செய்தியில், இலங்கையின் வடக்கே முன்னர் யுத்தப் பிரதேசங்களாக இருந்த இடங்களுக்கு

பொருட்களை கொண்டுசெல்வதற்காகவும் பணிகள் செய்வதற்காகவும் அங்கே நுழைய விரும்பும் உள்ளூர் மற்றும் சர்வதேச அரசு சாரா உதவியமைப்புகள், அப்பகுதியில் மீள்குடியேற்றப் பணிகளை ஒருங்கிணைத்துவரும் ஜனாதிபதியின் செயலணியிடம் முன்கூட்டியே அனுமதி வாங்கியிருக்க வேண்டும் என்று தெரிவிக்கபட்டிருந்தது.
http://www.hindu.com/2009/07/12/stories/2009071260991500.htm

19 தனிப்பட்ட மின் அஞ்சல் பரிமாற்றத்திலிருந்து எடுக்கப்பட்ட விபரம், ஜூலை 2009.

20 இதே ஆவணத்தில் உள்ள விபரம்

21 1987 முதற்கொண்டே இலங்கையில் UNHCR அமைப்பின் பிரசன்னம் இருந்துவருகிறது. இந்தியாவில் இருந்த இலங்கை அகதிகளை தாய்நாட்டுக்கே திரும்பச் செய்து சமூகத்தில் ஒன்றிணைக்கின்ற பணியில் அச்சமயம் UNHCR உதவிவந்தது. 1995ஆம் ஆண்டு வரையில் அவ்வப்போது அகதிகள் சொந்த நாடு திரும்புவது (சூழ்நிலை அனுமதித்த நேரங்களில்) நடந்துவந்தது. அதேநேரம், இலங்கைக்குள்ளேயே உள்நாட்டளவில் இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை அதிகரித்துவர, அவர்கள் தொடர்பானப் பணிகளிலும் UNHCR அமைப்பு மென்மேலும் அதிகமாக ஈடுபட ஆரம்பித்திருந்தது. இந்தியாவில் இருந்து அகதிகள் பலர் திரும்பிவந்த அதே பகுதியில்தான் இந்த உள்நாட்டளவிலான இடம்பெயர்வுகளும் நடந்தன. ஃபார்வர்ட் டிஃபென்ஸ் லைன் (FDL) என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுகிற மோதல் முன்னரங்கப் பகுதியின் இரண்டு பக்கங்களிலும் இடம்பெயர்ந்த மக்களுக்கு UNHCR உதவிகளை வழங்க வேண்டும் என்றூ 1990ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக கோரியிருந்தது. 1993ஆம் ஆண்டு UNHCR அமைப்புக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் கையெழுத்தான ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்த ஏற்பாடு உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இலங்கைக்குள் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுவதாக UNHCR பணிகள் விரிவுபடுத்தப்பட்டிருந்ததை ஐ.நா. தலைமைச் செயலர் 1991 ஆண்டில் அங்கீகரித்திருந்தார். மார்ச் 1997ல் ஐ.நா. தலைமைச் செயலர் அலுவலம் வழங்கியிருந்த ஒரு கடிதத்தில் இவ்வொப்புதல் மீண்டும் உறுதிசெய்யப்பட்டிருந்தது. “இலங்கையில் உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவதிலும் மனிதாபிமான உதவிகளைச் செய்வதிலும் ஐ.நா. முயற்சிகளை ஒருங்கிணைக்கும் பணியை UNHCR தொடரும்" என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. UNHCR’s programme for internally displaced persons in Sri Lanka; Report of a joint appraisal mission by the UK Department for International Development and UNHCR, மே 2002,
http://www.chs.ubc.ca/srilanka/PDFs/UNHCR%20programme%20for%20IDPs%20in%20Sri%20Lanka.p

df.

22 SRI LANKA: Growing concern over nutrition of displaced children, IRIN, 5 ஜூன் 2009. http://www.irinnews.org/Report.aspx?ReportId=84722

23 I.D.P Camps in Manik Farm: An eye-witness account," 1 ஜூலை, 2009, http://dbsjeyaraj.com/dbsj/archives/841.

24 "SRI LANKA: 'Too many people' at huge IDP camp - UN" IRIN, 11 ஜூன் 2009, http://www.irinnews.org/Report.aspx?ReportId=84805.

25 SRI LANKA: Growing concern over nutrition of displaced children, IRIN, 5 ஜூன் 2009. http://www.irinnews.org/Report.aspx?ReportId=84722.

26 "Anyone can visit IDP camps but not for own gain" The Island பத்திரிகை, 18 ஜூன், 2009, http://www.island.lk/2009/06/18/news5.html.

27 ஊடகவியலாளர்கள் சிலர், காவலர்கள் சூழ கண்காணிப்புடன் முகாம்களுக்குள் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

28 "We should live in this country as children of one mother"- நாடாளுமன்றக் கூட்டத்தொடர் துவக்கத்தின்போது மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள் ஆற்றிய உரை, ஸ்ரீ ஜயவர்த்தனபுரம் - கோட்டை, 19 மே 2009, http://www.slmfa.gov.lk/index2.php?option=com_content&do_pdf=1&id=1736.

29 ஐ.நா.மனித உரிமைகள் குழு, பொதுக் கருத்து எண் 29: அவசர நிலைகள் (ஷரத்து எண் 4), UN Doc. CCPR/C/21/Rev.1/Add.11, 31 ஆகஸ்ட் 2001, para. 16.

30 இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான ஐ.நா.வின் வழிகாட்டு நெறிகள், UN Doc. E/CN.4/1998/53/Add.2 (1998).

31 வவுனியாவில் இடம்பெயர்ந்த மக்களில் 60 வயதைத் தாண்டிய முதியவர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் 16,408 பேரில் 5271 பேரை அவர்தம் உறவினர்களிடம் செல்ல அரசாங்கம் அனுமதித்து விடுவித்துள்ளது. மேலும் 784 பேர் முதியோர் இல்லங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலன் அமைச்சகத்தின் செயலர் வி.ஜெகராஜசிங்கம் 2009ஆம் ஆண்டு ஜூலை மாத ஆரம்பத்தில் கூறினார். முகாம்களில் இருந்து 9249 பேர் விடுவிக்கப்படுவதற்கு இடம்பெயர்ந்த மக்களுக்குப் பொறுப்பான அதிகாரியான மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரஸ்ரீ ஒப்புதல் அளித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 60 வயதுக்கு மேற்பட்டவர்களை விடுவிக்க அரசாங்கம் ஒப்புதல் அளித்திருந்தாலும், அந்த வயதை எட்டாத அவர்தம் வாழ்க்கைத் துணைகள் வெளியில் செல்ல அரசாங்கம் அனுமதிக்கவில்லை. தமது குடும்பத்தை விட்டுப் பிரிய மறுப்பு தெரிவித்து முதியோர் பலர் முகாமுக்குள்ளேயே இருந்துவருகின்றனர்.

32 "Sri Lanka begins resettling war displaced," Agence France Presse, 5, ஆகஸ்ட் 2009

33 மீள்குடியேற்றம் தொடர்பில் இறுதியான கால அட்டவணை என்று எதுவும் இல்லை. இடம்பெயர்ந்த மக்களில் பெரும்பான்மையானோர் 2009ஆம் ஆண்டு நிறைவுக்குள்ளோ அல்லது 180 நாட்களிலோ மீள்குடியேற்றப்படுவர் என்றூ அரசாங்கப் பிரதிநிதிகள் கூறியிருந்தனர். "Tamil refugees may end up in permanent camps, say aid workers," Times Online, 3 ஜூலை, 2009. http://www.timesonline.co.uk/tol/news/world/asia/article6626563.ece.

34 "Sri Lanka Needs More Time to Resettle Tamils, Minister Says," Bloomberg, 24 ஜூலை 2009, http://www.bloomberg.com/apps/news?pid=20601091&sid=aZC.zGfyu_4k.

35 "Udate on United Nations Humanitarian Support to Sri Lanka, 9 ஜூலை 2009," இலங்கைக்கான ஐ.நா.மன்ற வதிவிடப் பிரதிநிதி மற்றும் மனிதாபிமான செயற்பாடுகள் ஒருங்கிணைப்பாளர் அலுவலகம், http://www.reliefweb.int/rw/RWFiles2009.nsf/FilesByRWDocUnidFilename/JBRN-7TSC9J-full_report.pdf/$File/full_report.pdf.

36 இரண்டு மனுக்களுமே உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை மனித உரிமை கோரும் மனுக்களாகும். அரசியல் சாசனத்தினால் வழங்கப்பட்டுள்ள தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாகவோ அல்லது மீறப்படும் ஆபத்து உள்ளது என்றோ முறையிட்டு ஒருவர் உயர்நீதிமன்றத்தில் நேரடியாக வழக்கு போடலாம் என்பதை இலங்கை அரசியல் சாசனம் ஷரத்து 126 அனுமதிக்கிறது. இலங்கையின் சட்டங்கள் இங்கிலாந்தின் காமன் லா சட்டதிட்டங்களை அடிப்படையாகக் கொண்டவை என்பதால், ஜுடிஷியல் பிரிசிடெண்ட் கொள்கை (அதாவது கையிலுள்ள வழக்கை ஒத்த ஒரு வழக்கில் மேல் நீதிமன்றங்கள் வழங்கிய முடிவை கீழ் நீதிமன்றங்கள் கடைப்பிடிக்க வேண்டும்) இலங்கை நீதித்துறையில் கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது. அடிப்படை மனித உரிமை கோரும் மனுக்களை சமூக நலன் கருதி போடப்படும் வழக்காக போட்டு ஜுடிஷியல் பிரசிடண்ட்களை உருவாக்க வேண்டும் என்ற ஒரு போக்கு இலங்கையின் மனித உரிமை ஆர்வலர்களிடையே அதிகரித்துவருகிறது. இடம்பெயர்ந்த மக்கள், இனச் சிறுபான்மையினர் போன்ற நிறைய எண்ணிக்கையிலான மக்களை பாதிக்கும் அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை எதிர்த்து கேள்விகேட்கும் ஓர் வழியாக இவ்வகையான மனுக்களை அவர்கள் பயன்படுத்திவருகின்றனர்.

37 "The tragic journey of a displaced Tamil family in Sri Lanka," நந்த விக்கிரமசிங்க எழுதியது, 27 ஜூன் 2009, http://www.wsws.org/articles/2009/jun2009/slcm-j27.shtm

38 இதே ஆவணத்தில் உள்ள ஓர் விபரம்

39 "The tragic journey of a displaced Tamil family in Sri Lanka," நந்த விக்கிரமசிங்க எழுதியது, 27 ஜூன் 2009, http://www.wsws.org/articles/2009/jun2009/slcm-j27.shtm

40 இதே ஆவணத்தில் உள்ள ஓர் விபரம்

41 எஸ்.எஸ்,செல்வநாயகம் எழுதிய, "Child reunited with her family," என்ற கட்டுரை *Daily Mirror*, 25 ஜூன் 2009. http://www.dailymirror.lk/DM_BLOG/Sections/frmNewsDetailView.aspx?ARTID=52921

42 இதே ஆவணத்தில் உள்ள ஓர் விபரம்

43 "Court wants to see proper report on Sopika by medical practitioner," Daily Mirror, 11 ஜூலை 2009, http://www.dailymirror.lk/DM_BLOG/Sections/frmNewsDetailView.aspx?ARTID=54452; "SC directs Commander to admit girl to hospital," Daily Mirror, 22 ஜூலை 2009 , http://www.dailymirror.lk/DM_BLOG/Sections/frmNewsDetailView.aspx?ARTID=55476.

44 "Petition seeks freedom of movement for displaced," The Hindu, 14 ஜூன் 2009, http://www.hindu.com/2009/06/14/stories/2009061455671200.htm; Restrictions on the Movement Of IDPs Challenged In Court, Daily Mirror, 13 ஜூன் 2009, http://www.dailymirror.lk/DM_BLOG/Sections/frmNewsDetailView.aspx?ARTID=51772.

45 "Sri Lanka AG informs the Courts on IDPs," ColomboPage News Desk, இலங்கை, 28 ஜூலை 2009.

46 *Twenty Years of Make Believe. Sri Lanka's Commissions of Inquiry*, Amnesty International Index: ASA 37/005/2009, http://www.amnesty.org/en/library/info/ASA37/005/2009/en.

47 "Update on United Nations Humanitarian Support to Sri Lanka, 9 ஜூலை 2009," இலங்கைக்கான ஐ.நா.மன்ற வதிவிடப் பிரதிநிதி மற்றும் மனிதாபிமான செயற்பாடுகள் ஒருங்கிணைப்பாளர் அலுவலகம், http://www.reliefweb.int/rw/RWFiles2009.nsf/FilesByRWDocUnidFilename/JBRN-7TSC9J-full_report.pdf/$File/full_report.pdf.

48 இதே ஆவணத்தில் உள்ள ஓர் விபரம்

49 இரகசியமாக தொலைபேசி மூலம் வழங்கப்பட்ட பேட்டி, 7 ஜூலை 2009.

50 Sri Lanka: War-Wounded and Displaced Patients Flood MSF Hospitals,"13 ஜூன் 2009, http://www.doctorswithoutborders.org/news/article.cfm?id=3711&cat=field-news.

51 'Malnourished children' in IDP camps," BBC Sinhala.com, 23 ஜூன் 2009, http://www.bbc.co.uk/sinhala/news/story/2009/06/090623_idps_malnourished.shtml

52 சர்வதேச பொதுமன்னிப்பு சபைக்கு வழங்கிய செவ்வி, ஜூன் 2009

53 "Rapid Assessment of Nutritional Status Among Post war Displaced Population in Vavuniya," டாக்டர்.ரேணுகா ஜெயதிஸ்ஸ, சத்துணவுப் பிரிவு, மருத்துவ ஆராய்ச்சி மையம், ஜூன் 2009.

54 "Sri Lanka: Impending monsoon season, poor camp sanitation put thousands at risk of disease, warns World Vision," கொழும்பு, ஜூன் 11, 2009, http://www.worldvision.org/content.nsf/about/20090610-lanka-monsoon.

55 “SRI LANKA: ‘Too many people’ at huge IDP camp - UN” IRIN, 11 ஜூன் 2009, http://www.irinnews.org/Report.aspx?ReportId=84805.

56 “Sri Lanka - Complex Emergency Fact Sheet #14, Fiscal Year (FY) 2009,” USAID, Bureau For Democracy, Conflict, And Humanitarian Assistance (DCHA), Office Of U.S. Foreign Disaster Assistance (OFDA)

ஜூலை 9, 2009. http://www.reliefweb.int/rw/RWFiles2009.nsf/FilesByRWDocUnidFilename/ASHU-7TT2KS-full_report.pdf/$File/full_report.pdf.

57 UNOCHA: Sri Lanka: Vavuniya District - IDP Site Locations and Capacity as of 09 ஜூலை 2009, http://www.reliefweb.int/rw/fullMaps_Sa.nsf/luFullMap/DA15F4051D50DEEE852575EF005229CA/$File/map.pdf?OpenElement.

58 “Official Communiqué from the DGHS Ministry of Healthcare and Nutrition on the current status of IDP Healthcare and the Ministry Response to the Challenges,· http://www.health.gov.lk/IDP/IDP%20Healthcare.pdf.

59சர்வதேச பொதுமன்னிப்பு சபைக்கு வழங்கிய செவ்வி, ஜூலை 2009

60 “Relatives 'not allowed' to visit IDPsdisplaced people,” BBC Sinhala.com, 14 ஜூலை, 2009, http://www.bbc.co.uk/sinhala/news/story/2009/07/090714_pulmoddai_idps.shtml.

61 “Update on United Nations Humanitarian Support to Sri Lanka, 9 July 2009,” இலங்கைக்கான ஐ.நா.மன்ற வதிவிடப் பிரதிநிதி மற்றும் மனிதாபிமான செயற்பாடுகள் ஒருங்கிணைப்பாளர் அலுவலகம், http://www.reliefweb.int/rw/rwb.nsf/db900sid/JBRN-7TSC9J/$File/full_report.pdf.

62 “Update on United Nations Humanitarian Support to Sri Lanka, 9 July 2009,” இலங்கைக்கான ஐ.நா.மன்ற வதிவிடப் பிரதிநிதி மற்றும் மனிதாபிமான செயற்பாடுகள் ஒருங்கிணைப்பாளர் அலுவலகம், http://www.reliefweb.int/rw/rwb.nsf/db900sid/JBRN-7TSC9J/$File/full_report.pdf.

63 இவர்கள் இருவருமே ஜனாதிபதியின் சகோதரர்கள் ஆவர். இந்த செயற்குழுவின் பிற செல்வாக்குமிக்க உறுபினர்கள் என்று பார்க்கையில், Defence Chief of Staff Air Chief Marshal G D பெரேரா, இராணுவத் தளபதி Lt. Gen. சரத் ஃபொன்சேகா, கடற்படைத் தளபதி Vice Admiral வசந்த கரண்ணகொட, விமானப்படைத் தளபதி Air Marshall W D R M J குணதிலக, பொலிஸ் மா அதிபர் ஜெயந்த விக்கிரமரத்ன, சிவில் பாதுகாப்புத் துறையின் தலைமை இயக்குநர் Rear Admiral S P வீரசேகர மற்றும் இலங்கை இராணுவப் படையணியின் தலைவரும், வட மாகாண இடம்பெயர்ந்த மக்களுக்குப் பொறுப்பான அதிகாரியுமான Major General. G A சந்திரஸ்ரீ ஆகியோரைச் சொல்லலாம். ஜூலை மாதம் சந்திரஸ்ரீ வட மாகாண ஆளுநராகவும்

---

உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார்.

64 UN OCHA, Sri Lanka: Vanni Emergency, Situation Report #24, 02 ஜூலை 2009 http://www.reliefweb.int/rw/RWFiles2009.nsf/FilesByRWDocUnidFilename/STRI-7TLPGS-full_report.pdf/$File/full_report.pdf

65 "Youth 'disappear' from IDP camps," BBC Sinhala.com, 15 ஜூன் 2009., http://www.bbc.co.uk/sinhala/news/story/2009/06/090615_sunila_hooded.shtml; "A profile of human rights and humanitarian issues in the Vanni and Vavuniya," மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் (CPA), 31 மார்ச் 2009.

66 இதே ஆவணத்தில் உள்ள விபரம். இலங்கை அரசாங்கத்துடன் அணி சேர்ந்துள்ள சில ஆயுதக் குழுக்கள் முகாம்களில் இருந்து சிறார்களை தமது இயக்கங்களில் சேர்க்க முயன்றதாகவும் குற்றம்சாட்டப்படுகிறது. பார்க்க, "Sri Lanka Issues Concerning Protection of Children

Post Armed Conflict; Presented To The Security Council Working Group on Children And

Armed Conflict," சிறார் போராளிகள் பயன்பாட்டுக்கு எதிரான கூட்டணி, ஜூலை 2009, http://www.child-soldiers.org/Sri_Lanka_Briefing_doc_-_Child_Soldiers_Coalition_-_July_2009.pdf.

67 Update on United Nations Humanitarian Support to Sri Lanka, 9 July 2009," இலங்கைக்கான ஐ.நா.மன்ற வதிவிடப் பிரதிநிதி மற்றும் மனிதாபிமான செயற்பாடுகள் ஒருங்கிணைப்பாளர் அலுவலகம், http://www.reliefweb.int/rw/rwb.nsf/db900sid/JBRN-7TSC9J/$File/full_report.pdf.

68 மூன்றாவது ஜெனீவா ஒப்பந்தத்தில் ஷரத்து எண் 118ஐக் காண்க.

69 காண்க, Jean-Marie Henckaerts and Louise Doswald-Beck, *Customary International Humanitarian Law, Volume 1: Rules* (Cambridge: Cambridge University Press & International Committee of the Red Cross 2005), pp. 451-6.

70இதே ஆவணத்திலுள்ள விபரம்

71 பாரிஸ் உடன்பாட்டு நெறிகள்/ The Paris Principles; Principles and Guidelines on Children Associated with Armed Forces or Armed Groups, பிப்ரவரி 2007, http://reliefweb.int/rw/lib.nsf/db900sid/JFRN-6Y2PS7/$file/unicef-childrenwar-feb2007.pdf?openelement.

72 "Akashi welcomes Govt's action on IDP welfare," Sri Lankan Government News Line, 10 ஜூன் 2009. http://www.priu.gov.lk/news_update/Current_Affairs/ca200906/20090610akashi_welcomes_govts_action.htm.